விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a Newspaper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005



இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 மாசி 09 ஞாயிற்றுக்கிழமை (21.02.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 064

## திருநெல்வேலிக்கு மரக்கறி வாங்க சென்றவர் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - நல்லூர் கோவில் வீதியில் கொழும்புத் துறையில் இருந்து திருநெல் வேலி சந்தைக்கு மரக்கறி வாங்க 15

## வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நீதிக்காக கிளிநொச்சியில் 'தீச்சட்டி' ஏந்தி போராட்டம்

(கிளிநொச்சி)

வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவுகள் நேற்று கிளிநொச்சி யில் தீச்சட்டி போராட்டம் ஒன்றை முன்னெடுத்திருந்தனர்.

குறித்த போராட்டம் நேற்றுக் காலை 9.30 மணியளவில் கிளி நொச்சி பிள்ளையார் ஆலயம் முன்பாக ஆரம்பமானது.

இதன்போது வடக்கு - கிழக்கு வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட வர்களின் உறவுகள் தீச் சட்டிகளை ஏந்தியவாறு கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றல் வரை ஏ9 வீதி ஊடாக போராட்டத்தில் 15



### இலங்கை தொடர்பான தீர்மானத்தின் வரைவு வெளியாகியது

# சர்வதேச நீதிமன்ற பரிந்துரை இல்லை

## ஈழத் தமிழர்களை தொடர்ந்து ஏமாற்றும் உலக நாடுகள்

(கொழும்பு)

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை யில் கொண்டு வரப்படவுள்ள இலங்கை தொடர் பான தீர்மானத்தின் வரைவு வெளியாகியுள்ள நிலை யில் அதில் சர்வதேச நீதிமன்றம் குறித்த பரிந்துரை இடம்பெறவில்லை. (15ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் நேற்று இருவருக்கு கொரோனா

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை ஆய்வுகூடத் தில் நேற்றுச் சனிக்கிழமை 449 பேருக்கான கொரோ னாத் தொற்றுப் பரி சோதனைகள் செய் 15

## கொரோனா மேலும் இருவர் மரணம் +528 தொற்று

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற் றுக்கு உள்ளாகி மேலும் 2 பேர் உயிரிழந்துள்ள னர். 15



### சர்வதேச விசாரணை அற்ற அறிக்கையை சமர்ப்பிக்க

## இணை அனுசரணை நாடுகள் வெட்கித் தலைகுனிய வேண்டும்

### நீதியரசர் விக்னேஸ்வரன் காட்டம்

(யாழ்ப்பாணம்)

சர்வதேச விசாரணை தேவை இல்லை என்ற ஒரு அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு இணை அனுசரணை நாடுகள் வெட்கித் தலைகுனிய வேண் டும். 15

### மோ.சைக்கிள் விபத்துக்குள்ளாகி

## கடலுக்குள் பாய்ந்ததில் இளம் குடும்பஸ்தர் உயிரிழப்பு

### வடமராட்சி திக்கத்தில் சம்பவம்

(கரணவாய்)

மோட்டார் சைக்கிள் விபத்துக் குள்ளாகி கடலுக்குள் பாய்ந்ததில் இளம குடும்பஸ்தர் ஒருவர் உயிரி ழந்துள்ளார்.

இச்சம்பவம் வடம 15

## தமிழர்களின் கைகளில் அதிகாரம் இருக்க வேண்டும்

### நிபுணர் குழுவை சந்தித்த பின் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன்

(கொழும்பு)

தமது கௌரவத்தை நீதியை பாதுகாப்பதற்கு ஆட்சியதிகாரம் தமிழர்களின் கைககளில் இருக்க வேண்டும் என கூட்ட மைப்பின் தலைவர் 15

## யுத்த காலத்தில் மனித உரிமை மீறலில் ஈடுபட்டவர்களுக்கு தண்டனை வழங்கத் தயார்

### ஜெனிவா அமர்வு ஆரம்பமாகியுள்ள நிலையில் வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற யுத்தத்தின்போது ஏதாவது மனித உரிமை மீறல்கள் இடம்பெற் றிருந்தால் அது தொடர்பாக விசா ரணைகளை மேற்கொண்டு குற்றவாளிகளுக்கு தண்டனை வழங்க அரசாங்கம் தயார் என வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன தெரிவித் துள்ளார்.

இந்த தண்ட 15

### அடக்கம் செய்வது தொடர்பில்

## தான்தோன்றித்தனமாக தெரிவிக்கவில்லை

### பிரதமர் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

கோவிட் தொற்றில் உயிரிழக் கும் முஸ்லிம் நபர்களின் ஜனா ஸாக்களை அடக்கம் செய்வது தொடர்பில் தான் தான் தோன் றித் தனமாக 15

### மதத் தலைவர்களுக்கு

## தடுப்பூசி செலுத்தும் செயற்பாடுகள் ஆரம்பம்

(கொழும்பு)

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ வின் பணிப்புரைக் கமைவாக இலங் 15

## யாழ்.பல்கலைக்கு பி.சி.ஆர் இயந்திரம்

### அமெரிக்கத் தூதுவர் நேரில் கையளிப்பார்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மருத்துவ பீடத்தில் அமைந் துள்ள பி.சி.ஆர் பரிசோதனை ஆய்வுகூடத்துக்கு யு. எஸ். எயிட் இனால் அன்பளிப்புச் செய்யப்பட்ட பி.சி.ஆர் இயந்திரத் தைச் சம்பிரதாய 15

## வீடு வாடகைக்கு

வெள்ளவத்தை Station அருகில் சகல தளபாடங்களுடன் தனி வீடுகள் Separate Sanitizer Rooms with Attached Bathroom வாடகைக்குண்டு. விஷேட வைபவங்களுக்கும் வீடுகள் 2,3,6 அறைகள் Fully Furnished நாள் வாடகைக்கு. (C-1215)

**071 066 7511, 077 766 7511**

## காணி விற்பனைக்கு

யாழ். தையிட்டியில் காங்கேசன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம் என்பவற்றிகு 1 Km தூரத்தில் 8 பரப்பு மற்றும் 13 பரப்பு காணிகள் விற்பனைக்கு உண்டு. (C-1217)

**☎-076 172 4033**

## வீடு வாடகைக்கு தேவை

5 பேர் கொண்ட குடும்பம் ஒன்றிக்கு 3 அறைகள், இணைந்த குளியல் அறையுடன் யாழ். நகரில் இருந்து 6 கி.மீ. க்குள் வீடு வாடகைக்கு தேவை. (C-1494)

**077 183 6462**

## பணியாளர் தேவை

யாழ். நகரில் உள்ள அலுவலகம் ஒன்றிற்கு அலுவலக வேலை, கணினி வேலை, கணக்குப் பதிவு ஆகியவற்றிக்கு பெண் பணியாளர்கள் தேவை.

**சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.**
**வயதெல்லை 20 - 35 வரை** (5854)

**077 122 8841, 075 881 0010**

# வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம்

(வவுனியா)

வவுனியா ஹொரவப்பொத்தான வீதயில் நேற்று மாலை இடம்பெற்ற விபத்தில் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

வவுனியா நகரிலிருந்து ஹொரவப்பொத்தான வீதி நோக்கி வருகை தந்த பட்டா வாகனம் பூந்தோட்டம் பகுதியில் இருந்து நகருக்கு சென்ற மோட்டார் சைக்கிளுடன் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ம-3,299)

## கண்ணீர் அஞ்சலி



அமரர்

### நாகேஸ்வரதேவி மதனசுரேந்திரன்

கொக்குவில் இந்துக்கல்லூரி பழைய மாணவியும் கொக்குவில் இந்துக் கல்லூரி ஆசிரியையாக பல தசாப்தங்களாக அர்ப்பணிப்புடன் கடமையாற்றிய அன்னாருக்கு எமது அஞ்சலியைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் இழப்பால் துயருற்றிருக்கும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி, கொக்குவில். (C-1497)

## DELIVERY BOYS தேவை

முழு நேரம் & பகுதி நேரம்




யாழ்ப்பாணத்தில் Food Delivery செய்யும் Cookoo நிறுவனத்திற்கு முழுநேர மற்றும் பகுதி நேரத்திற்கான Delivery Boys தேவை!

ஆர்வம் உள்ளவர்கள் மற்றும் மேலதிகமான விபரங்களை அறிந்துகொள்ள விரும்புவோர் கீழ் காணும் இலக்கம் மூலமாக தொடர்பு கொள்ளுங்கள். (5844)

தொடர்புகளுக்கு
+94 77 640 2343 /cookoo.lk

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603, 021 567 1532

## காணி வாடகைக்கு

கச்சேரி, புங்கன்குள சந்திக்கு அண்மித்ததாக 5 பரப்பு காணி (வெற்று நிலம்) குத்தகைக்கு உண்டு. (நாவலர் றோட்டில் இருந்து 50 மீ கண்டி றோட்டில் இருந்து 300 மீ தூரத்தில் உள்ளது.) (5859)

**074 128 5878**
**077 978 9375**

## 90ஆவது நாள் நினைவும் அந்தியேட்டி கிரியையும்



பிறப்பு
03 . 02 . 1984

இறப்பு
24 . 11 . 2020


அமரர்

### திரு. தனபாலசிங்கம் நிஷாந்தன்

(தகவல் தொழிநுட்ப உத்தியோகத்தர் ( ICT. Officer ), தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் - மன்னார் மாவட்டச் செயலகம் )

நிரந்தர முகவரி - நட்டாங்கண்டல், மாங்குளம்.
தற்காலிக முகவரி - கனகராயன்குளம், வவுனியா.

" வாழும் வயதில் நினைவாகி
பெற்றவர் கண்ணில் கனவாகி - நீர்
ஈன்றவள் மனதில் விதையாகி
கூட பிறந்தவர் நெஞ்சில் தீயாகி
வானம் தேடி பறந்தனையோ....?
வாழும் வரையும் வரித்திடுவோம்
நின் நினைவுகளை. "



ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

அன்னாரின் 90 ஆவது நினைவு நாளும் அந்தியேட்டிக் கிரியையும் கடந்த 19.02.2021 (வெள்ளிக்கிழமை) கீரிமலையில் நடைபெற்றது. இன்று (21.02.2021) ஞாயிற்றுக் கிழமை குறிசுட்டகுளம், கனகராயன்குளம், வவுனியாவில் அமைந்துள்ள எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்ம சாந்தி பிரார்த்தனையிலும் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

கனகராயன் குளம்,
வவுனியா. (C-1478)

தனபாலசிங்கம்
குடும்பத்தினர்.

## பணிநயந்து வாழ்த்துகின்றோம்




### உயர்திரு. கஸ்பார் மதுரநாயகம்

ஓய்வுநிலை அதிபர் - கிளி / அக்கராயன் மகா வித்தியாலயம் (C-1490)

| | | |
|---|---|---|
| **ஆசிரியர் சேவை :** | | |
| கிளி / வன்னேரிக்குளம் ம.வி | - 1987.12.14 | - 1992.12.31 |
| கிளி / பளை றோ.க.த.க. பா | - 1993.01.01 | - 1996.09.30 |
| கிளி / பூநகரி ம.வி (ஜெயபுரம்) | - 1996.10.01 | - 1998.07.30 |
| கிளி / வலயக் கல்வி அலுவலகம் | - 1998.08.01 | - 2002.12.31 |
| **அதிபர் சேவை :** | | |
| கிளி / முருகானந்தா கல்லூரி | - 2003.01.01 | - 2006.12.31 |
| கிளி / திருவையாறு ம.வி | - 2007.01.01 | - 2012.08.31 |
| கிளி / அக்கராயன் ம.வி | - 2012.09.01 | - 2021.01.27 |

கிளிநொச்சி மாவட்டத்தில் அளப்பரிய கல்விப் பணியாற்றி ஓய்வுபெறும் உயர்திரு. க.மதுரநாயகம் அவர்களின் ஓய்வுக்காலம் சிறக்க வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர் :
அதிபர்கள் சங்கம் - கிளிநொச்சி மாவட்டம்

# அழிக்கப்பட்ட விடுதலைப்புலிகள் அமைப்பை மீளுருவாக்க முயன்றால் கடும் தண்டனை

## சரத் வீரசேகர எச்சரிக்கை



**(கொழும்பு)**

**தேசிய பாதுகாப்பு விவகாரத்தில் அதிக கவனம் செலுத்தியுள்ளோம். அழிக்கப்பட்ட விடுதலைப் புலிகள் அமைப்பினை மீளருவாக்குவதற்கு செயற் பட்டால் அது தண்டனைக்குரிய குற்றமாகும் என பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.**

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு நாட்டில் தோற்கடிக் கப்பட்டிருந்தாலும் அவர்களின் தனி ஈழ இலக்கு சர்வதேச அளவில் வியாபித்துள்ளது.

தனி ஈழக் கொள்கையினை யுடைய அரசியல்வாதிகள் இன்றும் தமிழ் இளைஞர்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை தூண்டிவிட முயற்சிக்கிறார்கள்.

இதன் காரணமாகவே தேசிய பாதுகாப்பு விடயத்தில் அதிக அக்கறை கொண்டுள்ளோம் என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ரியல் அட்மிரல் சரத் வீரசேகர தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

30 வருட கால யுத்தம் பாரிய போராட்டத்திற்கு மத்தியில் முடிவுக்கு கொண்டு வரப்பட்டு தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. தேசிய பாதுகாப்பினை உறுதிப் படுத்த வேண்டுமாயின் தேசிய புலனாய்வு பிரிவு பலம் கொண்டதாக காணப்பட வேண்டும்.

ஒரு சம்பவம் இடம்பெற்ற பின்னர் புலனாய்வு நடவடிக்கைகளை முன்னெடுப்பது புலனாய்வுப் பிரிவினரது செயற்பாடல்ல.

தேசிய புலனாய்வு பிரிவு சிறந்த முறையில் காணப்பட்டதால் 30 வருட கால யுத்தம் குறுகிய காலத்தில் நிறைவுக்குக் கொண்டு வரப்பட்டது.

யுத்தம் முடிவடைந்து விட்டது என்ற காரணத்தினால் புலனாய்வுப் பிரிவின் செயற்பாட்டை அப்போதைய அரசாங்கம் குறைத்து மதிப்பிடவில்லை.

யுத்த சூழல் இடம் பெற்ற நாட்டில் எந்நேரத்திலும் புலனாய்வு பிரிவு அவதானத்துடன் செயற்பட வேண்டும் என்பது கடுமையான முறையில் பின்பற்றப்பட்டது. இதனால் 2009 தொடக்கம் 2015ஆம் ஆண்டு வரையில் நாட்டில் தீவிரவாத செயற்பாடுகள் ஏதும் இடம் பெறவில்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பு நாட்டில் தோற்கடிக் கப்பட்டிருந்தாலும் புலிகளின் தனி ஈழ இலக்கினை இன்றும் புலம்பெயர் தமிழர் அமைப்புக்களும், அரசியல்வாதிகளும் சர்வதேச மட்டத்தில் முன்னெடுத்துச் செல்கிறார்கள்.

இதற்கு அவர்கள் வாழும் நாடுகளில் அனுமதியும் வழங்கப்பட்டுள்ளது. ஆகவே புலிகள் அமைப்பு அழிக்கப்பட்டிருந்தாலும் அவர்களின் இலக்கு சர்வதேச அளவில் வியாபித்துள்ளது.

தனி ஈழ கொள்கையினை கொண்ட தமிழ் அரசியல்வாதிகள் ஒற்றையாட்சி முறைமைக்கு முரணான கருத்துக்களை குறிப்பிட்டு இளைஞர்கள் மத்தியில் பிரிவினைவாதத்தை ஏற்படுத்த முயற்சிக்கிறார்கள் என அவர் தெரிவித்தார். (நி-4)

---

# மரண அறிவித்தல்



## அமரர்.தம்பிஐயா கிருபானந்தமூர்த்தி(யேசு)

*யாழ். புங்குடுதீவு 12 ஆம் வட்டாரத்தை பிறப்பிடமாகவும், முல்லைத்தீவு முத்தையன்கட்டை வசிப்பிடமாகவும் பிரான்ஸ் Sarcelles ஐ தற்போதைய வதிவிடமாகவும் கொண்ட தம்பிஐயா கிருபானந்தமூர்த்தி (யேசு) அவர்கள் 13.02.2021 சனிக்கிழமை அன்று பிரான்சில் காலமானார்.*

அன்னார் காலஞ்சென்ற தம்பிஐயா- தனபாக்கியலெட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற அப்பையா இராசம்மாவின் அன்பு மருமகனும், நாகபூபதி (திலகம்) அவர்களின் அன்பு கணவரும் பிறேமகுமாரி, ஜெயகுமாரி காலஞ்சென்ற உதயசூரியன் மற்றும் சிவசூரியர் (பிரான்ஸ்), தனசூரியன் (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் காலஞ்சென்றவர்களான கமலாதேவி, விநாயகமூர்த்தி, சத்தியமூர்த்தி, ஆனந்தமூர்த்தி, சுந்தரமூர்த்தி மற்றும் கிருஸ்ணமூர்த்தி (புங்குடுதீவு), நல்லைவாசன் (கனடா), மணிமேகலை (புங்குடுதீவு), கண்ணகி (கொக்குவில்) ஆகியோரின் அருமை சகோதரரும் காலஞ்சென்ற சுந்தரம்பிள்ளை, பரஞ்சோதி மற்றும் கமலம், மனோரஞ்சிதம், புவனேஸ்வரி (ராணி-கனடா) கனலிங்கம், கமலா நேரு, ரதி (கனடா), வசந்தமலர், சீதாலட்சுமி ஆகியோரின் அன்பு மைத்துனரும்,

வள்ளிநாயகி, இராசாங்கம் ஆகியோரின் அன்பு சகலனும் தயாளநேசன், இயேசுநேசன், ஜெயந்தி(பிரான்ஸ்), தபோதினி (பிரான்ஸ்) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், காலஞ்சென்ற மெர்சிகா மற்றும் டிக்ஷன் (பிரான்ஸ்) டிலக்ஷிகா, ஒலிவியா, ஜெயரூபன், இவாஞ்சலின், சாகித்தியன், சகானா, சனுஜா, தாரகை, தார்மிகன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை 23.02.2021 அன்று பிரான்சில் 95 Ruemarcel Sembut, 93430 Villetaneuse, France இல் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**அன்னாரின் பிரிவுத்துயர் நிகழ்வு முத்தையன்கட்டில் அமைந்திருக்கும் அவரின் மகளான தயாளநேசன் பிறேமகுமாரி என்பவரின் இல்லத்தில் நடைபெறும் என்பதையும் அறியத்தருகின்றேம்.**

**தொடர்புகள்:-**
**மகன்மார்: 0033753280618, 0033605716767**
**மகள்மார்: 0767934322, 0774828469**
**சகோதரர்கள் கிருஸ்ணமூர்த்தி 0775473085**
**கண்ணகி 021 2052716**

**தயாளநேசன் பிறேமகுமாரி**
**இல: 126/2, முத்தையன்கட்டு,**
**ஒட்டுசுட்டான்.**

(c-1481)

**தகவல்:**
**குடும்பத்தினர்**

# கலக்கலு ஒசாகா சூப்பரு...

## ஆஸி ஓபனில் 2ஆவது கிண்ணம்

அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் ஒற்றையர் பிரிவில் ஜப்பான் வீராங்கனை ஒசாகா சம்பியன் பட்டத்தை கைப்பற்றினார்.

இறுதிப் போட்டியில் அமெரிக்காவின் ஜெனிபர் பிராடியை தோற்கடித்தார்.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்ன் நகரில் நடப்பு ஆண்டின் முதலாவது கிராண்ட்ஸ்லாம் தொடரான அவுஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் நடக்கிறது.

இதன் பெண்கள் ஒற்றையர் பிரிவு இறுதிப் போட்டியில் உலகின் 'நம்பர் 3' ஜப்பானின் நவோமி ஒசாகா, 24ஆவது இடத்தில் உள்ள அமெரிக்காவின் ஜெனிபர் பிராடி மோதினர்.

முதல் செட்டை 6-4 எனக் கைப்பற்றிய ஒசாகா, 2ஆவது செட்டை 6-3 என தன்வசப் படுத்தினார்.

ஒரு மணி நேரம், 17 நிமிடம் நீடித்த போட்டியில் அசத்திய ஒசாகா 6-4, 6-3 என்ற நேர் செட் கணக்கில் வெற்றி பெற்று கிண்ணம் வென் றார்.

இதன்மூலம் ஒசாகா, அவுஸ்திரேலிய ஓபனில் தனது 2 ஆவது பட்டத்தை கைப்பற்றி னார்.

ஏற்கெனவே 2019ல் கிண்ணம் வென்றிருந்தார். தவிர இது, இவரது 4ஆவது கிராண்ட்ஸ்லாம் பட்டம். இவர், யு.எஸ்., ஓபனிலும் 2 முறை (2018, 2020) சம்பியன் பட்டத்தை கைப்பற்றி உள்ளார்.



வெற்றிக் கிண்ணத்துடன் நவோமி ஒசாகா

**ரூ.15.5 கோடி பரிசு**

அவுஸ்திரேலிய ஓபனில் கிண்ணம் வென்ற ஜப்பான் வீராங்கனை ஒசாகா, கிண்ணத்துடன் ரூ. 15.5 கோடி பரிசுத் தொகை வென்றார். இறுதிப் போட்டி வரை சென்று 2வது இடம் பிடித்த அமெரிக்காவின் ஜெனிபர் பிராடிக்கு, ரூ. 8.5 கோடி பரிசுத் தொகை வழங்கப்பட்டது.



### சாதிப்பாரா ஜோகோவிச்

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் இன்று நடக்கவுள்ள பைனலில் உலகின் 'நம்பர் - 1' செர்பியாவின் நோவக் ஜோகோவிச், 4வது இடத்தில் உள்ள ரஷ்யாவின் டேனில் மெட்வெடேவ் மோதுகின்றனர்.

இதில் 'நடப்பு சம்பியன்' ஜோகோவிச் வெற்றி பெறும் பட்சத்தில் அவுஸ்திரேலிய ஓபனில் 9ஆவது பட்டத்தையும், கிராண்ட்ஸ் லாம் அரங்கில் 18ஆவது கிண் ணத்தையும் கைப்பற்ற லாம்.

தொடர்ச்சியாக 20 போட்டிகளில் வெற்றி நடைபோடும் மெட்வெடேவ் வென்றால், தனது முதல் கிராண்ட்ஸ்லாம் பட்டத்தை ருசிக்கலாம்.

# மரண அறிவித்தல்



## சாந்தமூர்த்தி வல்லிபுரம்

யாழ். வறுத்தலைவிளானைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸ் Parisஐ வதிவிடமாகவும் கொண்ட சாந்தமூர்த்தி வல்லிபுரம் கடந்த 17.02.2021 புதன்கிழமை அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரம் - லட்சுமி தம்பதிகளின் அன்பு மகனும் காலஞ்சென்ற பொன்னுத்துரை - பரமேஸ்வரி (மாவிட்டபுரம்) தம்பதிகளின் அன்பு மருமகனும் இரஞ்சிதமலரின் (மாலா) அன்புக் கணவரும் காயத்திரி (காயா), வினோத்ராஜ் (வினோத்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் ராகுலனின் (பாபு) அன்பு மாமனும் யனுஷா, திஷான் ஆகியோரின் அன்புப் பாட்டனும் சிவபாதேஸ்வரி, திருப்பார்த்தேவி, வியாசவதி, காலஞ்சென்ற சாந்தலிங்கம், சாந்தகுமார், சாந்ததேவி, சாந்தநிதி, சாந்தமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் கனகரட்ணம், அன்னலிங்கம், பரிமளகாந்தி, காந்தி, கோபாலசுந்தரம், ரஞ்சன், காலஞ்சென்ற வித்தியாதரன், இராஜேந்திரம் (மணிவண்ணன்), நித்தியானந்தம் (மனோ), சூரியகுமார் (அப்புச்சு), சூரியகுமாரி (வவி) ஆகியோரின் சகலனும் பவானி, வசந்தி, ஜனித்தா, பார்த்திபன் ஆகியோரின் மைத்துனரும் கிரிஜா திருக்குமார், யாழினி சிவகுமார், கிரிதரன் கார்த்திக், சடாஷசரன் அனுராதா, விநோத் கார்த்திகா, சஞ்சி உஷா, பிரகாஷ் அனு, பிரதி, வேணன், கஜானன், கம்சாயினி, சகானா, மதுசா, மதீஸ்வன் ஆகியோரின் மாமனும் சுகன்யா ரஞ்சன், வாசுகி தவச்செல்வம், அகல்யா ஆகியோரின் சிறிய தந்தையும் வாசவன், திவ்வியன் ஆகியோரின் பெரிய தந்தையும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 21.02.2021 ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 24.02.2021 புதன்கிழமை வரை பார்வைக்காக *Funérarium95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France* இல் வைக்கப்பட்டு 03.03.2021 புதன்கிழமை கிரியைகள் Funérarium95 Rue Marcel Sembat, 93430 Villetaneuse, France இல் நடைபெற்று பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தகவல்- குடும்பத்தினர்

மாலா (மனைவி) +33149731646

(5860)

# திருமலை எண்ணெய் தாங்கி விவகாரம்

# விரைவில் இலங்கை வசமாகும் என்பது மக்களின் அரசியல் சிந்தனையை திசைதிருப்பவே

## கனிய எண்ணெய் கூட்டுத்தாபனம் அதிருப்தி

(திருமலை)

திருகோணமலை எண்ணெய் தாங்கிகளை வெகு விரைவில் இலங்கை வசமாக்குவதாக சக்தி வலு அமைச்சர் குறிப்பிட்ட கருத்துக்கும் இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ள கருத்துக்கும் இடையில் பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன என கனிய எண்ணெய் கூட்டுத்தாபனத்தின் தேசிய சேவை சங்கத்தின் தலைவர் ஆனந்த பாலித குறிப்பிட்டார்.

திருகோணமலை எண்ணெய்த்தாங்கி விவகாரம் குறித்து ஊடகமொன்றுக்கு கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், "திருகோணமலை துறைமுகத்துக்கு சொந்தமான காணியில் 99 எண்ணெய் தாங்கிகள் காணப்படுகின்றன. இவற்றில் 15 தாங்கிகள் இந்திய எண்ணெய் நிறுவனத்தின் வசம் உள்ளது. மிகுதி 84 தாங்கிகள் ஒப்பந்த அடிப்படையில் இந்தியாவுக்கு வழங்கப்பட்டுள்ள.


செய்துகொள்ளப்பட்டுள்ள ஒப்பந்த அடிப்படையில் 2035 ஆம் ஆண்டு காலப்பகுதியில் எண்ணெய் தாங்கிகள் இலங்கை வசமாக வேண்டும். இதனால் திருகோணமலை எண்ணெய் தாங்கிகள் இந்திய நிறுவனத்தினால் எதிர்பார்க்கப்பட்ட அளவிற்கு அபிவிருத்தி செய்யப்படவில்லை.

கனிய வள கூட்டுத்தாபனம் இரண்டு அரச வங்கிகளுக்கு 600 பில்லியன் கடன் செலுத்த வேண்டும். அத்துடன் வெளிநாட்டு கடன் 1500 மில்லியன் காணப்படுகிறது. கூட்டுத்தாபனம் இரண்டு அரச வங்கிகளுக்கும் வட்டி செலுத்த வேண்டும். இவ்வாறான நெருக்கடியில் பிற நிறுவனங்களிடமிருந்து கடன் பெற முடியாத நிலை கூட்டுத்தாபனத்துக்கு காணப்படுகிறது.

நட்டமடைந்துள்ள கனிய வளக் கூட்டுத்தாபனம் திருகோணமலை எண்ணெய் தாங்கியை முழுமையாக அபிவிருத்தி செய்யும் என்று அரசாங்கம் குறிப்பிடுவது நகைப்புக்குரிய விடயமாகும்.

திருகோணமலைஎண்ணெய் தாங்கி தொடர்பில் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தம் 2035 ஆம் ஆண்டுடன் முடிவடையும்.

இவ்வாறான நிலையில் தற்போது வெகுவிரைவில் தாங்கிகள் இலங்கை வசமாகும் என்று குறிப்பிடுவது மக்களின் அரசியல் சிந்தனையை திசைதிருப்பும் செயற்பாடு என்று குறிப்பிட வேண்டும்.



எண்ணெய் தாங்கி குறித்து சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில குறிப்பிட்ட கருத்துக்கும் இலங்கைக்கான உயர் ஸ்தானிகர் குறிப்பிட்ட கருத்துக்கும் இடையில் பரஸ்பர வேறுபாடு காணப்படுகிறது.

எவ்வித தீர்மானமும் எடுக்கப்படவில்லை. பேச்சுவார்த்தை மாத்திரம் இடம் பெற்றுள்ளது என்றே இந்திய உயர்ஸ்தானிகர் குறிப்பிட்டுள்ளார். ஆகவே இவ்விடயத்தின் உண்மை தன்மையினை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் என்றார். (நி-4)


## அந்தியேட்டி வீட்டுக்திருத்திய அழைப்பும் நன்றி நவிலலும்



கடந்த 22.01.2021 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவி

### அமரர்.குணரத்தினம் யோகமலர்

அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் அன்னாரது இல்லத்தில் இன்று 21.02.2021 ஞாயிற்றுக்கிழமை காலை 5.00 மணியளவில் இடம்பெற்று பகல் 12.00 மணியளவில் வீட்டுக்கிருத்திய கிரியைகள் அன்னாரது இல்லத்தில் நடைபெற உள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்ம சாந்திப் பிரார்த்தனையிலும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

அன்னாரின் துயரச் செய்தி கேட்டு நேரிலும் தொலைபேசி மூலமும் தொடர்பு கொண்டு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சகல வழிகளிலும் உதவியவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

(5688)

மாறாம்புலம், அல்வாய் வடமேற்கு, அல்வாய்.

குடும்பத்தினர்


# வடக்கில் முன்னெடுக்கவுள்ள சீன மின் உற்பத்தி திட்டங்கள்

## அமைச்சரவை ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையின் வட பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள மின் உற்பத்தி திட்டங்கள் குறித்து அமைச்சரவை மேலதிக ஆய்வுகளை முன்னெடுத்துள்ளதாக ஆங்கில ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

குறித்த ஆங்கில ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில், யாழ்ப்பாணத்தின் நாகதீபம், அனலைதீவு மற்றும் நெடுந்தீவு ஆகிய மூன்று தீவுகளிலும், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிதி உதவியுடன், புதுப்பிக்கத்தக்க ஆற்றலின் மூலமான மின் உற்பத்தி திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

குறித்த மின் உற்பத்தி திட்டத்திற்காக சீனா தெரிவு செய்யப்பட்டமைக்கு, இந்தியா எதிர்ப்பு வெளியிட்டதாக கூறப்படும் நிலையில், அமைச்சரவை மேலதிக ஆய்வுகளை முன்னெடுத்துள்ளதாக கூறப்படுகிறது. அதாவது, சர்வதேச ரீதியான ஏல விற்பனை நடைமுறைகளுக்குப் பின்னரே சீன நிறுவனமொன்றுக்கு குறித்த புதுப்பிக்கத்தக்க மின் உற்பத்தி திட்டம் வழங்கப்பட்டதாக இலங்கை மின்சார சபையின் பேச்சாளர் சுலக்ஷன ஜயவர்தன கூறியுள்ளார்.

இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் கூறியுள்ளதாவது, "குறித்த மின் உற்பத்திக்கு டீசல் பயன்படுத்தப்பட்டு வருகின்றமையினால் செலவீனம் மிக அதிகமாக காணப்படுகின்றது.

ஆகவேதான் மின் உற்பத்தி திட்டங்கள் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இதற்கமைய, இலங்கையின் வட பகுதியில் முன்னெடுக்கப்படவுள்ள குறித்த மின் உற்பத்தி திட்டங்கள் தொடர்பில் அமைச்சரவை மேலதிக ஆய்வுகளை முன்னெடுத்துள்ளது.

இந்தத் திட்டத்தை இரத்து செய்வதற்கான தீர்மானம் இதுவரையேற் கொள்ளப்படவில்லை" என அவர் குறிப்பிட்டுள்ளதாக ஆங்கில ஊடகம் செய்திகள் தெரிவிக்கின்றன. (நி-4)


## அகஸ்திய இயற்கை மூலிகை மருத்துவ நிலையம்

உங்கள் அனைத்து விதமான நாட்பட்ட வலிகள், மூட்டு வியாதிகள், முள்ளந்தண்டு பிரச்சினை, கொலஸ்ரோல், நீரிழிவு, உடல் பருமன் மற்றும் அனைத்து விதமான அழகு சிகிச்சைகளும் இயற்கை முறையில் தீர்வு அளிக்கப்படும்.

மற்றும் உங்கள் குடும்ப பிரச்சினைகள், தொழில் பிரச்சினைகள், கல்வி, பொருளாதாரம், வெளியூர், கடன், இலட்சியங்களை எளிதில் அடைதல் போன்ற பல வாழ்வியல் பிரச்சினைகளுக்கு நீங்களே சுலபமாக தீர்வைக் காண யாழ். நகரில் ஒரே ஒரு மையம்.

மேலதிக தொடர்புக்கு 077 912 8944

இல. 264, ஆடியபாதம் வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

(C-1480)

# மீண்டும் ஒரு முடக்க நிலையை தடுக்க பொதுமக்களின் ஒத்துழைப்பு அவசியம்



(யாழ்ப்பாணம்)

**புதியதொரு வைரஸ் வேகமாக பரவக்கூடியதாக எதிர்வு கூறப்பட்டுள்ளது. எனவே அபாய எச்சரிக்கையை மனதில் நிறுத்தி பொதுமக்கள் தங்களுடைய அன்றாடச் செயற்பாடுகளை முன்னெடுத்தல் மிகவும் அவசியமானதாகும்.**

யாழில் மீண்டும் ஒரு முடக்க நிலையினை ஏற்படுத்தாது இருப்பதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்டத்தில் தற்போது உள்ள கொரோனா நிலைமை தொடர்பில் நேற்று கருத்துரைக்கும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தற்பொழுது யாழ்ப்பாண மாவட்டத்தில் கொரானா உறுதி செய்யப்பட்டோரின் எண்ணிக்கை நேற்று முன்தினம் மூன்று நபர்களுக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதன் அடிப்படையில் 213 ஆக உயர்வடைந்துள்ளது. அதேசமயம் 190 நபர்கள் பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

இந்த நிலைமையில் யாழ்.மாவட்டத்தில் 258 குடும்பங்களைச் சேர்ந்த 610 நபர்கள் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

யாழ்.மாவட்டத்தில் முதற்கட்டமாக சுகாதாரப் பகுதியினருக்கு தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை முடிவடைந்துள்ளது. தொடர்ந்து ஏனைய பொதுமக்களுக்கு தடுப்பூசி ஏற்றுவதற்குரிய பூர்வாங்க வேலைத் திட்டங்கள் அனைத்தும் சுகாதார பிரிவினரால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தற்பொழுது மாவட்டத்தில் இயல்பு நடவடிக்கைகள் படிப்படியாக வழமைக்கு திரும்பி உள்ளன. இருந்த போதிலும் சுகாதார அமைச்சினுடைய அறிவுறுத்தல்களின் பிரகாரம் சுகாதார வழிமுறைகள் அறிவுறுத்தல்களை கண்டிப்பாக பின்பற்ற வேண்டியது அவசியமாக உள்ளது

ஏனென்றால் தற்பொழுது ஆரம்பிக்கப்பட்டு இருக்கின்ற இயல்நிலை மீண்டும் ஒரு முடக்க நிலையினை ஏற்படுத்தாமல் இருப்பதற்கு மக்கள் பூரண ஒத்துழைப்பினை வழங்க வேண்டும்.

மேலும் கடந்தகால அவதானிப்புகளின் படி வெளிமாவட்டத்தில் இருந்து வருபவர்கள் ஊடாக தொற்று இங்கே பரவுவதற்கான சாத்தியக்கூறுகள் அதிகம் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

எனவே வெளியூரிலிருந்து வருபவர்கள் தங்களையும் பாதுகாத்து தங்களுடைய சமூகத்தையும் பாதுகாப்பதற்காக தாங்களாக முன்வந்து தங்களுடைய தனிமைப்படுத்தல் செயற்பாட்டை முன்னெடுத்தல் சிறந்தது என அவர் மேலும் தெரிவித்தார். (4-6-33)

# கண்காட்சி நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாண கிராம அபிவிருத்தி திணைக்களத்தினால் யாழ்ப்பாண பிரதேச செயலாளர் பிரிவில் இயங்கும் மகளிர் அபிவிருத்தி நிலைய மனைப் பொருளியல் டிப்ளோமா பாடநெறி மாணவர்களின் கண்காட்சி நிகழ்வு நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை 10 மணி நாவாந்துறை சென் மேரிஸ் சனசமூக நிலையத்தில் யாழ். பிரதேச செயலாளர் சா.சுதர்சன் தலைமையில் நடைபெறவுள்ளது. (4-6-106)




# வெளி மாவட்டத்திலிருந்து வந்து செல்லும் பேருந்துகள் வைத்தியசாலை வீதியைப் பயன்படுத்தத்தடை



(யாழ்ப்பாணம்)

வெளிமாவட்டங்களில் இருந்து வந்து செல்லும் பேருந்துகள் யாழ்ப்பாணம் வைத்தியசாலை வீதியால் உள் நுழைவது, வெளி செல்வது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளது.

குறித்த பேருந்துகள் நேராக புதிதாக அமைக்கப்பட்ட நெடுந்தூர பேருந்து தரிப்பிடத்திற்கு செல்ல வேண்டும். புதிய பேருந்து தரிப்பிடத்தை இலங்கை போக்குவரத்து சபையும் தனியார் பேருந்து உரிமையாளர்களும் பயன்படுத்த மறுத்து வந்த நிலையில் யாழ். மாநகர சபையால் இத்தீர் மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இம் முடிவானது யாழ்ப்பாணம் போக்குவரத்து பொலிஸாருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது. இதனை மீறுபவர்கள் மீது உடனடியாக சட்ட நடவடிக்கை எடுக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

குறித்த பேருந்துகள் வைத்தியசாலை வீதியை பயன்படுத்துவது தடை செய்யப்பட்டால் யாழ்.நகரின் போக்குவரத்து நெரிசல் பெருமளவில் குறைவடையும்.

எனவே அனைவரும் ஒத்துழைப்பு வழங்குமாறு யாழ். மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் அறிவித்துள்ளார். (4-6-18-33)

# வலி.தெற்கு பிரதேச சபை அமர்வில் அமளிதுமளி

(குப்பிழான்)

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை சுன்னாகத்தில் அமைந்துள்ள வலி. தெற்குப் பிரதேச சபையின் தலைமை அலுவலக மண்டபத்தில் தவிசாளர் க.தர்ஷன் தலைமையில் இடம் பெற்றது.

இதன்போது வலிகாமம் தெற்குப் பிரதேச சபையின் எல்லைக்குட்பட்ட 11 ஆம் வட்டாரத்தில் அமைந்துள்ள உடுவில் கட்ஸ்மன் வீதி இந்த ஆண்டு வரவு- செலவுத் திட்ட நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்பட வேண்டும் என சபையின் ஈபிடிபி உறுப்பினர் திருமதி ஜெயராஜா தனுஜா சபையில் வலியுறுத்தினார்.

குறித்த வட்டாரத்தில் நாமகள் வீதியை காப்பற் வீதியாக்குவதால் கட்ஸ்மன் வீதியை இரண்டாவதாகப் புனரமைக்குமாறு ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் த.துவாரகன் தெரிவித்தார். குறித்த காரணத்தை ஏற்க முடியாது எனத் தவிசாளர் தெரிவித்தார்.


இதன்பின்னர் தவிசாளருக்கும் உறுப்பினர் துவாரகனுக்குமிடையில் வாக்குவாதம் இடம்பெற்றபோது தவிசாளர் துவாரகனை எச்சரித்தார்.

எனினும் எச்சரிக்கையையும் மீறி துவாரகன் மீண்டும் மீண்டும் வாதங்களில் ஈடுபட்டார்.

இதனால் கோபமடைந்த தவிசாளர் ஐந்து நிமிடம் சபையை ஒத்திவைக்கின்றேன் எனத் தெரிவித்து அங்கிருந்து வெளிநடப்புச் செய்தார்.

பின்னர் ஏழு நிமிடங்கள் கழித்து மீண்டும் தவிசாளர் சபைக்கு வந்தார். (4-18)

# மனித உரிமைகள் ஆணைக்குழு யாழ்.குடாநாட்டுக்கு விஜயம்



(யாழ்ப்பாணம்)

புதிதாக நியமனம் பெற்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் யாழ்.குடாநாட்டுக்கு விஜயம் செய்து யாழ்.மாவட்ட சிவில் சமூகப் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடலில் ஈடுபட்டனர்.

குறித்த சந்திப்பு யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள மனித உரிமை ஆணைக்குழுவின் பிராந்திய அலுவலகத்தில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

மேற்படி சந்திப்பின் போது இலங்கையின் அரசியல் யாப்பில் ஒரு சமயத்தைப் பின்பற்றுபவர்களுக்கு தனிநபருக்கு உரிய உரிமைகள் மறுக்கக் கூடிய வகையில் உள்ள ஒரு விடயமாகவே கொவிட்- 19 இனால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் உடல்களை இறந்தவரின் இறுதி விருப்பத்திற்கு மாறாகத் தகனம் செய்வது காணப்படுகின்றது. இது அடிப்படை மனித உரிமை மீறலாகவே இருக்கின்ற போது இது தொடர்பான முறைப்பாடுகள் மனித உரிமை ஆணைக்குழுவிற்கு முஸ்லிம் மற்றும் ஏனைய சிவில் சமூகத்தினரால் வழங்கப்பட்ட போதிலும் தங்களால் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் என்ன? என மக்கள் பணிமனைத் தலைவர் மௌலவி பி.ஏ.எஸ் சுப்யான் கேள்வி எழுப்பினார்.

இதுதொடர்பாக தொடர்ச்சியாகத் தாங்கள் அரசாங்கத்துடன் பேசி வருவதாகவும், உரிய தரப்பினர்களினால் இது தொடர்பில் தங்களுக்கு உறுதியளிக்கப்பட்டுள்ள நிலையில் இம்மாத இறுதிக்குள் சிறந்த முடிவு ஒன்றை எதிர்பார்க்க முடியும் எனவும் புதிதாக நியமனம் பெற்ற இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உறுப்பினர்கள் பதிலளித்தனர். (4-6-18)



**சாவகச்சேரி மகளிர் கல்லூரியில் தரம்-01 மாணவர்களை இணைத்துக் கொள்ளும் கால்கோள் விழா கடந்த 15 ஆம் திகதி திங்கட்கிழமை காலை பாடசாலை அதிபர் திருமதி முகுந்தன் தலைமையில் இடம்பெற்றது.**

(படம் : சுபேசன் )

## வேலையாள் தேவை

யாழ்ப்பாண உணவகம் ஒன்றிற்கு சமையல் வேலைக்கு ஆட்கள் தேவை. 2 வருட முன் அனுபவம் இருக்கவேண்டும். வயதெல்லை: 25-35

**தொடர்பு:- 076 549 4834** (5843)



## மணமகள் தேவை

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தை சேர்ந்த 1984 ஆம் ஆண்டு பிறந்த சொந்தமாக தொழில் புரியும் மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கின்றோம். சீதனம் பெரிதாக எதிர்பார்க்கப் படமாட்டாது.

**தொடர்பு:-**
**077 161 1943** (5838)


# அரிசி விலை அதிகரிக்காது

**பந்துல**

(கொழும்பு)

அரிசிக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள அதிக பட்ச விலையை மேலும் அதிகரிப்பதற்கு எவ்விதத்திலும் இடமளிக்கப் போவதில்லை என வர்த்தக அமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். தேசிய வணிகக் கழகத்தின் மட்டக்களப்பு மாவட்ட கிளையைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்று முன்தினம் கலந்து கொண்ட போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

நெல்லுக்குரிய மிகவும் நியாயமான விலையை விவசாயிகளுக்கு வழங்கத் தேவையான சட்ட ஏற்பாடுகள் செய்யப் பட்டுள்ளன என்றும் வர்த்தக அமைச்சர் குறிப்பிட்டார். (ஙி-4)


## தேவை

நல்லூரில் அமைந்துள்ள பூக்கன்று விற்பனை நிலையம் ஒன்றுக்கு பராமரிக்கக்கூடிய ஆண் வேலையாள் தேவை.

**தொடர்பு:-**
**077 836 2408** (5823)



## மணமகள் தேவை

யாழிந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த 50 வயதைக் கடந்த கனடா இலங்கை இரட்டைப் பிரஜா உரிமை உள்ள விவாகரத்துப்பெற்ற (பிள்ளைகள் இல்லை) யாழில் அரச சேவையில் MBBS Doctor ஆக பணிபுரிபவர்க்கு 30 வயது 40 இற்குட்பட்ட மணமகள் தேவை.

**தொடர்பு:- 072 619 2526** (5852)



## PEARSON INTERNATIONAL COLLEGE

Diploma in English
IELTS Acadamic
IELTS General
IELTS Life skills.

#1 rated professional Lecturers
Weekday classess
Weekend Classess
Night Classess
# 100% Student focused.
Registered exam centre

Especially designed lessons for students who are willing to migrate foreign countries

idp IELTS

Register with us for IELTS Exam@ 29,999/=
074 188 7878-021 223 2250
infopearsonicollege@gmail.com (5417)

No.21,Ponnampalam Street 3rd lane, Power house road, jaffna



வலம்புரி
021 221 7603, 021 567 1532



# அபிவிருத்தி லொத்தர் சபை
# விற்பனை முகவர்களை நியமித்தல்

## யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்கள்

சந்தையின் முன்னணி லொத்தர்களாகிய சனிதா, ராசி அதிர்ஷ்டம், ஜயோதா, சுப்பர் போல், அபிவிருத்தி அதிர்ஷ்டம், கோடிபதி கப்ருக, அத கோடிபதி, சசிரி மற்றும் உடனடி லொத்தர்களை விற்பனை செய்வதற்காக யாழ்ப்பாணம், மன்னார், வவுனியா, முல்லைத்தீவு, திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களுக்கு விற்பனை முகவர்களாக செயற்பட விரும்பும் நிறுவனங்கள் மற்றும் நபர்களிடமிருந்து விண்ணப்பப் படிவங்கள் கோரப்படுகின்றது.

விண்ணப்ப பழவத்தில் உள்ளடங்க வேண்டிய விபரங்கள்.
I. முழு பெயர்
II. முகவரி
III. தொலைபேசி இலக்கம்
IV. தேசிய அடையாள அட்டை இலக்கம்
V. மாவட்டம்
VI. கிராம அலுவலர் பிரிவு
VII. உங்களின் வியாபாரம் தொடர்பான விபரங்கள்.

மேற்கூறப்பட்ட விபரங்கள் அடங்கிய விண்ணப்பப் படிவங்களை 2021.03.15 ஆம் திகதிக்கு முன்னர் பின்வரும் முகவரிக்கு அனுப்பவும்.

தலைவர்
அபிவிருத்தி லொத்தர் சபை
இலக்கம் 356, கலாநிதி கொல்வின் ஆர்.த சில்வா மாவத்தை, யூனியன் பிளேஸ், கொழும்பு 02.

மேலதிக விபரங்களுக்கு பின்வரும் அதிகாரிகளை தொடர்பு கொள்ளவும்

| மாவட்டம் | விற்பனை மேம்படுத்தல் உதவியாளர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|
| யாழ்ப்பாணம், மன்னார் | திரு.எம்.தவகோகுலன் | 077 105 48 84 |
| வவுனியா, முல்லைத்தீவு | திரு.கே.பிரதீபன் | 077 105 48 91 |
| திருகோணமலை | திரு.கே.டப்.ஜீ.ஏ.எஸ்.வீரசிங்ஹ | 077 880 08 64 |
| அம்பாறை, மட்டக்களப்பு | திரு.டி.ஆர்.டெரோன் ராகல் | 076 827 14 93 |

DEVELOPMENT LOTTERY
Enriching Your Life

(C-1216)



# சென்.ஜோன்ஸ் கல்லூரி
# சுண்டிக்குளி மகளிர் கல்லூரி
## தரம் 01,06 இற்கான மாணவர் அனுமதி 2022

1. அ. விண்ணப்பப்படிவங்களை அந்தந்தக் கல்லூரிகளிலிருந்து 01.03.2021 முதல் 22.03.2021 வரை பெற்றுக்கொள்ளலாம்.

   ஆ. எமது விண்ணப்பப்படிவங்கள் தவிர்ந்த ஏனைய விண்ணப்பப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

   இ. விண்ணப்பப்படிவங்கள் ஏற்கப்படும் இறுதி நாள் 22.03.2021 திங்கட்கிழமை. அத்திகதிக்கு பின்னர் எமக்குக் கிடைக்கும் விண்ணப்பங்கள் கவனத்தில் எடுக்கப்படமாட்டாது.

2. தரம் 01 இற்கான விண்ணப்பப்படிவங்களுடன் பிறப்பு அத்தாட்சிப் பத்திரத்தின் பிரதி (Photocopy) இணைக்கப்பட வேண்டும்.

3. விண்ணப்பப்படிவங்களை அலுவலக நாட்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை அந்தந்தக் கல்லூரிகளில் பெற்றுக்கொள்ளலாம்.

4. ஒரு படிவத்திற்கானதும் பரீட்சைக்கானதும் கட்டணம் ரூபா 1000.00

5. வயதெல்லைகள்:
   அ. தரம் 01 விண்ணப்பதாரி 01.02.2016 இற்கும் 31.01.2017 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.
   ஆ. தரம் 06 விண்ணப்பதாரி 01.02.2011 இற்கும் 31.01.2012 இற்குமிடையில் பிறந்திருத்தல் வேண்டும்.

6. தரம் 06 இற்கான பிரவேசப் பரீட்சை 16.10.2021 சனிக்கிழமை காலை 08.00 மணிக்கு ஆரம்பமாகும்.

குறிப்பு:
01. தகுதியுடையவர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்படும் தரம் 5 புலமைப் பரிசில் நிதி தனியார் பாடசாலையில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அரசாங்கத்தால் தொடர்ந்து வழங்கப்படுகிறது.

02. தரம் 12 (A/L தமிழ் / ஆங்கில மொழி மூலம் 2024 Batch) விண்ணப்பதாரிகள் O/L பரீட்சைப் பெறுபேறுகளின் பின்னர் விண்ணப்பிக்கவும்.

(C-1475)

அதிபர்கள்



# கல்யாணமாலை
## சர்வதேச திருமண சேவை

### இவர்களுக்கு மணமகள் தேவை

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: அத்தம்
கி.பா:24 செவ் 6 சூரி 9 இல் உயரம்:5'9"
தகைமை/தொழில்: **B.Sc m(Export Agriculture,** ஆசிரியர் நிரந்தரம்
எதிர்பார்ப்பு:படித்த வேலைபார்க்கும் பெண்
தொ.இ: **B/11476**

பிறப்பு: 1990 இந்து
நட்சத்திரம்: சித்திரை 4 ஆம் பாதம்
கி.பா: செவ் 7 சூரி 10 இல் உயரம்:5'6"
தகைமை/தொழில்:**BSC,** கிராம அபிவிருத்தி உத்தியோகத்தார்
எதிர்பார்ப்பு: படித்தபெண், அரச,தனியார் வங்கி உத்தியோகத்தார்
தொ.இ: **B/11477**

பிறப்பு: 1987 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 213/4 செவ் சூரி 3 இல் உயரம்:5.8
தகைமை/தொழில்: **A/L,** விவசாயம் வியாபாரம் தென்னந்தோட்டம்
எதிர்பார்ப்பு: சாதரண படித்த பெண்
தொ.இ: **B/11480**

பிறப்பு: றோமன் கத்தோலிக்கம்
உயரம்: 5'
தகைமை/தொழில்:**quantity surveyor, Bulding Contract**
எதிர்பார்ப்பு:படித்த பெண்
தொ.இ: **B/11481**

### இவர்களுக்கு மணமகன் தேவை

பிறப்பு: 1998 இந்து
நட்சத்திரம்: ரோகினி
கி.பா: செவ், சூரி 1 இல் உயரம்: 4'11"
தகைமை/தொழில்: **A/L** முன்பள்ளி டிப்ளோமா, முன்பள்ளி ஆசிரியர்
எதிர்பார்ப்பு: உத்தியோகம், அல்லது மத்திய கிழக்கு நாடு தவிர்ந்த வெளிநாடு
தொ.இ:**G/11501**

பிறப்பு: 1993 இந்து
நட்சத்திரம்: கார்த்திகை 2 ஆம் பாதம்
கி.பா: 67 செவ் 1 சூரி 12 இல் உயரம்: **150cm**
தகைமை/தொழில்: **A/L,** நிரந்தர ஆசிரியர்
எதிர்பார்ப்பு:**Software Engineer, Bank, GOV**
தொ.இ: **G/11503**

பிறப்பு:1990 இந்து
நட்சத்திரம்: பரணி
கி.பா: 55 செவ் 4 சூரி 10 இல் உயரம்:159
தகைமை/தொழில்:**A/L Commerce,**
எதிர்பார்ப்பு: படித்தவர், அரச அல்லது சொந்தத் தொழில்
தொ.இ: **G/11509**

பிறப்பு: 1996 இந்து
கி.பா: 33 3/4 செவ் 2 சூரி 3 இல்
உயரம்: **153.5cm**
தகைமை/தொழில்: க.பொ.த.உ. விஞ்ஞானம், தேசிய கல்வியியல் கல்லூரி விஞ்ஞான ஆசிரியை நிரந்தரம்
எதிர்பார்ப்பு: அரச உத்தியோகம்
தொ.இ: **G/11510**

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக் கட்டணம் 1000 ரூபாவுடன் தொலைத்தொடர்பு சேவைக் கட்டணமாக ரூபா 300 அறவிடப்படும்.

# கொவிட் தடுப்பூசி திட்டத்திற்கு அதிக நிதியை வழங்கும் கனடா

(ஒன்றாரியோ)

குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்கு தேவையான கொரோனா வைரஸ் தடுப்பூசியைப் பெற்றுக் கொடுப்பதை உறுதி செய்யும் நோக்குடன் உலக சுகாதார அமைப்பால் முன்னெடுக்கப்படும் கொவெக்ஸ் சர்வதேச தடுப்பூசித் திட்டத்துக்கு அதிக நிதியை ஒதுக்க கனடா முன்வந்துள்ளது.

ஏனைய செல்வந்த நாடுகளும் இந்தத் திட்டத்துக்கு அதிக நிதியை ஒதுக்க முன்வந்துள்ள நிலையில் கனடா மேலதிகமாக 75 மில்லியன் டொலர்களை வழங்குவதாக உறுதியளித்துள்ளது.

கொவிட்-19 தடுப்பூசி விநியோகத்தை துரிதப்படுத்தும் நோக்கில் இது குறித்து கனேடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் ஏனைய ஜி-7 நாடுகளின் தலைவர்களுடன் பிரிட்டிஷ் பிரதமர் போரிஸ் ஜோன்சன் மெய்நிகர் வழியில் கடந்த வியாழக்கிழமை நடத்திய பேச்சுவார்த்தையை அடுத்து இந்த அறிவிப்பு வெளியாகியுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது பிரிட்டனின் தேவைக்கு மேலதிகமாக இருக்கும் தடுப்பூசிகளை கொவெக்ஸ் சர்வதேச பொது தடுப்பூசி திட்டத்துக்கு அனுப்பவுள்ளதாக போரிஸ் ஜோன்சன் உறுதியளித்தார். (நி-4)

# சர்வதேச நாடுகளை பகைத்துக் கொள்ளாமல் அரசாங்கம் செயற்பட வேண்டும்

## பேராசிரியர் திஸ்ஸ

(கொழும்பு)

இனங்களுக்கிடையில் தேசிய நல்லிணக்கத்தை கட்டியெழுப்ப அரசாங்கம் உரிய பொறிமுறைகளை வகுக்க வேண்டும். புதிய அரசியலமைப்பில் நல்லிணக்கம் தொடர்பில் அதிக அவதானம் செலுத்தப்பட வேண்டும் என்பதை உத்தேச புதிய அரசியலமைப்பு நிபுணர் குழுவிடம் தெரிவித்துள்ளதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.



ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவை விவகாரத்தில் அரசாங்கம் சர்வதேச நாடுகளை பகைத்துக் கொள்ளாமல் நாட்டின் இறையாண்மைக்கும் பாதிப்பு ஏற்படாத வகையில் செயற்பட வேண்டும் எனவும் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் பேராசிரியர் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது, நாட்டில் அரசாங்கங்கள் காலத்திற்குக் காலம் எவ்வாறு மாற்றமடைகிறதோ, அவ்வாறே இனங்களுக்கிடையிலான நல்லிணக்கமும் காலத்திற்குக்காலம் மாற்றமடைகிறது. நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமாயின் தேசிய நல்லிணக்கம் உறுதிப்படுத்தப்பட வேண்டும். ஆட்சியில் இருந்த அரசாங்கங்கள் அனைத்தும் தேசிய நல்லிணக்கம் குறித்து உரிய கவனம்செலுத்தியுள்ளன.

அத்தோடு, தேசிய நல்லிணக்கம் குறித்து தற்போது மாறுபட்ட பல கருத்துக்களும் விமர்சனங்களும் முன்வைக்கப்படுகின்றன. ஒரு தரப்பினரது வெறுக்கத்தக்க பேச்சுக்களும் நடத்தைகளும் இனங்களுக்கிடையில் தற்போது முரண்பாட்டை தோற்றுவித்து நல்லிணக்கத்தை சவாலுக்குட்படுத்தியுள்ளது என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும்.

தேசிய நல்லிணக்கத்தை உறுதியாகச் செயற்படுத்த அரசாங்கம் புதிய அரசியலமைப்பின் ஊடாக சிறந்த பொறிமுறையினை வகுக்க வேண்டும் என்பதை தெளிவாக குறிப்பிட்டுள்ளோம். தேசிய நல்லிணக்கத்தை தவிர்த்து ஒருபோதும் முன்னேற முடியாது. சர்வதேசமும் இன நல்லிணக்கத்தையே அங்கிகரிக்கும் எனத் தெரிவித்தார். (நி-4)

# இலஞ்ச ஊழலை ஒழிக்க அதிரடி நடவடிக்கை

(கொழும்பு)

திணைக்களங்கள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் போன்ற அரச நிறுவனங்களில் இலஞ்சம் பெறுபவர்களை உடனடியாக கைது செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

கொழும்பு மற்றும் கொழும்பைச் சூழவுள்ள அரச நிறுவனங்களில் மட்டுமல்லாது நாட்டின் அனைத்து பிரதேசங்களையும் உள்ளடக்கிய வகையில் இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதாக இலஞ்சம் மற்றும் ஊழல் விசாரணை ஆணைக்குழுவின் விசாரணைப் பிரிவு பணிப்பாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் பத்மினி வீரசூரிய தெரிவித்துள்ளார்.

அத்துடன் இலஞ்சம் மற்றும் ஊழலுக்கு எதிராக மக்கள் செயற்பட வேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி-4)

# எதிர்காலத்திலும் நில நடுக்கம் தொடரும்-பேராதனை பல்கலை

(கொழும்பு)

இலங்கையிலும் இலங்கையை அண்மித்த பகுதிகளிலும் எதிர்காலத்தில் சிறிய அளவிலான நில அதிர்வுகள் பதிவாகக்கூடும் என்று பேராதனை பல்கலைக்கழகத்தின் புவிச்சரிதவியல் பிரிவு தெரிவித்துள்ளது.

இலங்கைக்கு அருகில் கடல் ஆழத்தில் 4 ரிக்டர் அளவான நில அதிர்வு நேற்று முன்தினம் பதிவாகியிருந்தது. இந்தோ-அவுஸ்திரேலிய புவித் தகட்டில் ஏற்பட்ட பிளவே இதற்கான காரணம் என்று கூறப்படுகிறது.

இந்த நிலையில் எதிர்காலத்திலும் அவ்வாறான சிறிய நில அதிர்வுகள் ஏற்படக்கூடும் என பேராதனை பல்கலைக் கழகத்தின் புவிச் சரிதவியல் பிரிவு தெரிவித்துள்ளது.

எனினும் அவை நாட்டுக்கு ஆபத்தை ஏற்படுத்துவனவாக அமையாது என்றும் அந்தப் பிரிவு தெரிவித்துள்ளது. (நி-4)

# சிகரெட் பாவனையால் நாளாந்தம் 60 பேர் வரை மரணிக்கின்றனர்

## ஆய்வில் தகவல்

(கொழும்பு)

**சில்லறை விலையில் சிகரெட்கள், 160 மில்லிலீற்றர் மதுபான போத்தல் விற்கப்படுவதை தடை செய்வது தொடர்பிலும் அரசாங்கம் அதிக கவனம் செலுத்தியுள்ளது.**

இதற்காக தேவைப்படும் சட்ட திட்டங்கள் தற்போது தயாரிக்கப்படுவதாக புகையிலை மற்றும் மதுபானங்கள் தொடர்பான தேசிய அதிகார சபையின் தலைவர் பேராசிரியர் சமாதி ராஜபக்ஷதெரிவித்துள்ளார்.

சில்லறை விலைக்கு சிகரெட்களை பெறுவோரின் எண்ணிக்கை அதிகளவில் காணப்படுவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இதனால், சிகரெட் பாவனையாளர்களின் எண்ணிக்கை நாளாந்தம் அதிகரித்து செல்வதை கருத்திற்கொண்டு, சில்லறை விலைக்கு சிகரட்களை விற்பனை செய்வதை தடை செய்வது குறித்து அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளதாக பேராசிரியர் தெரிவித்தார்.

சிகரெட் பக்கெட் ஒன்றில் குறைந்தது 20 சிகரெட்கள் இருக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனூடாக, சிகரெட் பாவனையாளர் ஒருவர் சில்லறை விலைக்கு சிகரெட்டை கொள்வனவு செய்ய முடியாமல் போகும் என்பதுடன், 20 சிகரெட் களை ஒன்றாகக் கொள்வனவு செய்ய வேண்டிய நிலை ஏற்படும்.

ஆகவே, இதற்காக செலவிடப்படும் தொகை அதி கம் என்பதால், சிகரெட் பாவனையாளர்களின் எண்ணிக்கையை இயலுமானவரை குறைத்துக்கொள்வதற்கான சந்தர்ப்பம் ஏற்படுமென பேராசிரியர் சமாதி ராஜபக்ஷ சுட்டிக்காட்டியுள்ளார்.

நாட்டில் சிகரெட் பாவனையினால் நாளாந்தம் 60 பேர் உயிரிழக்கின்றனர். அத்துடன் மதுபான பாவனையினால் நாளாந்தம் 55 பேர் உயிரிழப்பதாகவும் ஆய்வில் கண்டறியப்பட்டுள்ளது.(நி-4)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 120 | 140 | 130 | 120 |
| உருளைக்கிழங்கு | 120 | 130 | 130 | 140 |
| பச்சைமிளகாய் | 400 | 450 | 500 | 500 |
| தக்காளி | 280 | 260 | 250 | 250 |
| மரவள்ளிக்கிழங்கு | 40 | 60 | 70 | 40 |
| கோவா | 100 | 100 | 100 | 120 |
| கரட் | 160 | 180 | 180 | 200 |
| பூசணி | 100 | 100 | 100 | 100 |
| புடோல் | 160 | 190 | 150 | 120 |
| வாழைக்காய் | 60 | 60 | 60 | 100 |
| சின்ன வெங்காயம் | 300 | 360 | 350 | 300 |
| பெரிய வெங்காயம் | 140 | 140 | 120 | 150 |
| பாகற்காய் | 180 | 200 | 180 | 240 |
| வெண்டிக்காய் | 200 | 250 | 200 | 200 |
| கருணைக் கிழங்கு | 100 | 100 | 100 | 120 |
| பயற்றங்காய் | 160 | 160 | 200 | 120 |
| லீக்ஸ் | 140 | 140 | 140 | 150 |
| பீற்றூட் | 120 | 140 | 150 | 150 |
| கறிமிளகாய் | 250 | 300 | 350 | 320 |
| முருங்கைக்காய் | — | — | — | — |
| போஞ்சி | 120 | 120 | 130 | 160 |
| கத்தரிதம்புள்ள | 100 | 150 | — | 120 |
| கீரை - 1 பிடி | 60 | 25 | 40 | 300 |
| தேசிக்காய் | 120 | 120 | 120 | 80 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 90 | 70-100 | 80-110 |
| இராசவள்ளி | 250 | 240 | 200 | 200 |
| வெங்காயப்பூ | 150 | 120 | 140 | 200 |
| முள்ளங்கி | 70 | 90 | 100 | 80 |
| பொன்னாங்காணி | 50 | 60 | 50 | 40 |
| வல்லாரை | 40 | 150 | 20 | 30 |
| ஈரப்பலா | 80 | 100 | — | 80 |

# இராசிபலன்

21.02.2021
மாசி 09, ஞாயிற்றுக்கிழமை
நவமி பிற்பகல் 2.07 மணிவரை
ரோகிணி காலை 7.27 மணிவரை
சுபநேரம் 9.31-11.01 மணிவரை
இராகுகாலம் 5.01-6.31 மணிவரை
சந்திராஷ்டமம் அனுசம்
முதலாம் தவக்கால ஞாயிறு.


மேஷம்

எடுத்த காரியத்தில் கண்ணும் கருத்துமாக செயற்படுவீர்கள், குடும்பத்தேவைகள் எளிதில் பூர்த்தியாகும், அடிப்படை வசதி வாய்ப்புக் களைப் பெருக்கிக் கொள்ள முற்படுவீர்கள்.


ரிஷபம்

குடும்ப பொறுப்புக்கள் கூடும் நாள், எந்த வொரு வேலையையும் நாளையென்று தள்ளி வைக்காமல் இன்றே செய்து முடிப் பீர்கள், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வார்கள்.


மிதுனம்

சுபவிரயங்கள் கூடும் நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், பய ணத்தால் பலனுண்டு, ஆதாயமில்லாத அலைச்சல்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவுண்டு.


கடகம்

வருமானம் பெருகி வளம் காணும் நாள், குடும்பச் செலவுகளில் தாராளம் காட்டு வீர்கள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.


சிம்மம்

முன்னேற்றப் பாதையில் அடியெடுத்து வைப்பீர்கள், தொட்ட காரியங்கள் துளிர் விடும் நாள், வெளியூர்த் தொடர்புகள் அனு கூலம் தரும், ஆரோக்கியமான நாள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.


கன்னி

பற்றாக்குறை தீர்ந்து பணவரவு கிடைக்கும் நாள், மாற்றுக்கருத்துடையோர் மனம் மாறுவர், தேடிச் சென்றவர்கள் நாடிவந்து உதவுவர், எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு.


துலாம்

பொது வாழ்வில் வீண் பழிகள் ஏற்படாமல் பார்த்துக் கொள்வது நல்லது, புதிய முயற்சிகளில் சிறு தடை தாமதங்கள் ஏற் படலாம், திருடர் பயமுண்டு, வரவும் செலவும் சமமாகும் நாள்.


விருச்சிகம்

தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், சென்ற இடத்தில் செல்வாக்கு மேலோங்கும் நாள், குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம் பெறலாம்.


தனுசு

இனிமையான அனுபவங்கள் ஏற்படும் நாள், ஆற்றல் மிக்கவர்கள் உங்களுக்கு பின்னணியாகச் செயற்படுவர், கலக லப்பான செய்திகள் வந்து சேரலாம், அடுத் தவர் நலனில் அக்கறை கூடும்.


மகரம்

மறைமுகப் போட்டிகள் மாறும், வசதி வாய்ப்புக்களைப் பெருக்கிக் கொள்ள முற் படுவீர்கள்,வழிபாட்டுச் சிந்தனை மேலோ ங்கும் நாள், பிள்ளைகள் வழியில் பெருமை யான சம்பவங்கள் இடம் பெறலாம்.


கும்பம்

உறவினர் வழியில் மனதிற்கினிய சம்பவ ங்கள் இடம்பெறலாம், புண்ணிய காரியங்க ளுக்கு செலவு செய்து மகிழும் வாய்ப் புண்டு, எண்ணங்கள் எளிதில் நிறை வேறும் நாள்.


மீனம்

குடும்பத்தினர் உங்கள் குணமறிந்து நடந்து கொள்வர், இல்லத் தேவைகளை பூர்த்தி செய்ய முற்படுவீர்கள் , நீண்ட நாளைய பிணக்குகளில் திசைதிருப்பங்கள் ஏற்படலாம், போசன சுகமுண்டு.

மரியாதை கொடுத்து மரியாதை வாங்கு.

# இராணுவ வைத்தியசாலைகளில் தடுப்பூசி

# ஏற்றிக் கொள்ள மறுப்பது அக்கறையின்மையை காட்டுகின்றது

(கொழும்பு)

**தமிழ் மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதி நிதிகள் இராணுவ வைத்தியசாலைகளில் தடுப்பூசி ஏற்றிக் கொள்ள மறுப்பு தெரிவித்துள்ளமையானது, மக்கள் மீதான அக்கறையின்மையையே காட்டுவதாக இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.**

இராணுவ வைத்தியசா லைகளில் கொவிட் தடுப்பூசி பெற தயாராக இல்லை என தமிழ் கட்சிகள் சில தெரிவித் துள்ளமை தொடர்பில் கருத்து கூறும் போதே இராணுவத் தளபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

எம்மிடம் இருப்பது மனி தாபிமானமிக்க இராணுவமா கும். எங்களுக்கு மறைக்க எதுவும் இல்லை.

நாட்டு மக்கள் தங்களது மனங்களை தட்டிக் கேட்டால் இலங்கை முப்படையினர் எத் தகைய மனிதாபிமானமிக்கவர் கள் என்பது தெரியும்.

தனது முதன்மை கடமை யான நாட்டு மக்களை பாது காப்பதற்கு மேலதிகமாக நாட்டின் அபிவிருத்திக்கான பங்களிப்பு எத்தகையது என் பதையும் அத்தோடு இவர்கள் கூறிய காரணங்களுடன் நாட்டு மக்கள் உண்மைத் தன் மையை புரிந்து கொள்ள வேண்டும்.

இது நம் நாட்டின் இராணு வத்தைப் பற்றியது. இராணுவ வைத்தியசாலைகளில் இருந்து



தடுப்பூசிகளைப் பெற இவர்கள் மறுக்க முடியாது. உண்மை யான இலங்கையர் என்றால் இவ்வாறான அறிக்கையை விடுக்க முடியாது.

இலங்கையர் அல்லாதவர் களே இலங்கை இராணுவத் தினர் மீது இவ்வாறான அபிப் பிராயங்களை கொண்டிருக்க முடியும்.

இது ஜனநாயகத்தை உய ர்வாக மதிக்கும் நாடு. அத் தகைய நாட்டில் யாரும் தங்கள் விருப்பப்படி எந்த நிலைப்பாட் டையும் எடுக்க முடியும். ஏனெ னில் தடுப்பூசி பலவந்தமாக ஏற்றும் ஒன்றல்ல.

இந்த கொவிட் தடுப்பூசியை இராணுவ வைத்திய சாலை களில் வழங்குவதற்கு எடுக் கப்பட்ட தீர்மானத்திற்கு தனி நபராக அல்லது குழுவாக விரு ம்பவில்லை எனில் அது அவர்களின் தனிப்பட்ட தீர்மா னமாகும்.

அதனூடாக அவர்களின் மனோநிலை மற்றும் நிலை ப்பாட்டை தெளிவாக புரிந்து கொள்ள முடியும்.

மக்களிடம் நெருங்கி தொழி ற்படுபவர்களுக்கு முன்னு ரிமை அடிப்படையில் தடுப்பூசி வழங்கப்படுகின்றது.

தமிழ் மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் இவ்வாறு புறக்க ணிப்பதானது மக்கள் மீதான அக்கறையின்மையையே காட்டுகின்றது.

ஆனால் நாங்கள் எந்த பாகுபாடும் இன்றி அனைவரும் இலங்கையர்களாக கருதியே சேவையாற்றுகின்றோம் என சவேந்திர சில்வா தெரிவித் தார். (நி-4)

# பேருந்தில் பயணித்த இளைஞர் உயிரிழப்பு

## அச்சத்தில் மக்கள்

(கொழும்பு)

கொரோனாத் தொற்றுக் குள்ளான இளைஞன் ஒருவர் பேருந்தில் பயணித்துக் கொண்டு இருக்கும் போது திடீ ரென உயிரிழந்துள்ளார்.

கெகிராவை - மரதன் கட வல எவீரவெவ பிரதேசத்தை சேர்ந்த 29 வயதான இளை ஞன் ஒருவரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

பேருந்தினுள் குறித்த இளைஞன் மூச்சற்ற நிலை யில் காணப்பட்டதாகவும் பின் னர் வைத்தியசாலையில் அனு மதிக்கப்படும் போதும் உயிரி ழந்து காணப்பட்டதாக பிரதே சத்திற்கு பொறுப்பான பொதுச் சுகாதார பரிசோதகர் தெரிவித் தார்.

பின்னர் அநுராதபுரம் போதனா வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனையில் அவருக்கு கொரோனாத் தொற்று உறுதி ப்படுத்தப்பட்டது.

இந்த சம்பவம் அப்பகுதியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தி யுள்ளமை குறிப்பிடத்தக் கது. (நி-4)

# அருந்திகவின் வாகனம் விபத்திற்குள்ளானது

(கொழும்பு)

இராஜாங்க அமைச்சர் அரு ந்திக பெர்னாண்டோ பயணி த்த ஜீப் ரக வாகனம் விபத்துக் குள்ளானது.

பள்ளம - சேருகல பிரதே சத்தில் வீதியை விட்டு விலகிய வாகனம் மரமொன்றில் மோதி யதாலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது.

இவ்விபத்தில், சாரதி உட்பட மூவர் காயமடைந்துள்ள நிலையில் வைத்தியசாலை யில் அனுமதிக்கப்பட்டுள்ள தாகவும், அமைச்சருக்கு எது வித பாதிப்புமில்லையென பொலி ஸார் தெரிவித்துள்ளனர். (நி-4)

# சஹ்ரானிடம் பயிற்சி பெற்ற பெண் கைது

(கொழும்பு)

பயங்கரவாதி சஹ்ரானின் அடிப்படைவாத ஆயுதப்பயிற்சி பாடசாலையில் கலந்துகொண்ட பெண்ணொருவரை பயங்கர வாத தடுப்புப் பிரிவினர் கைது செய்துள்ளதாக பொலிஸ் பேச் சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார்.

ஏப்ரல் 21 தாக்குதலுடன் தொடர்புடைய சஹ்ரான் ஹஸீ மிடம் பயிற்சி பெற்ற மாவனெ ல்லையைச் சேர்ந்த 24 வய துடைய பெண் ஒருவரே இவ் வாறு பயங்கரவாத தடுப்புப் பிரி வால் கைது செய்யப்பட்டுள் ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கோ குரூப் நாடுகளால் உருவாக்கப்பட்ட வரைபில் திருப்தி இல்லை என்கிறார் கஜேந்திரகுமார்

(கண்டாவளை)

இணை அனுசரணை நாடுகளான கோ குரூப் நாடுகளால் ஐ.நா. மனித உரிமை பேரவையிலே நிறைவேற்றவுள்ள தீர்மானத்தின் முதலாவது வரைபில் திருப்தி இல்லை என பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்துள்ளார். கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமை பேரவையிலே நிறைவேற்றவுள்ள தீர்மானத்தின் முதலாவது வரைபை கோ குரூப் நாடுகள் வெளியிட்டுள்ளன. குறித்த வரைபு வெளியிடுவதற்கு முதல் இங்கு இருக்கக்கூடிய கட்சிகளும், சிவில் சமூகமும் இணைந்து கடிதம் ஒன்றை மனித உரிமை ஆணையாளருக்கும் உறுப்பு நாடுகளிற்கும் விசேடமாக கோ குரூப் நாடுகளிற்கும் அனுப்பப்பட்டிருந்தது.

பொறுப்புக்கூறல் என்ற விடயம் மனித உரிமை பேரவையிலிருந்து எடுக்கப்பட்டு மேல் இடத்திற்கு அனுப்பப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது.

இரண்டாவதாக இலங்கை தொடர்பாக தொடர்ந்து நடக்கின்ற மனித உரிமைகளை அவதானிக்க மனித உரிமை அலுவலகம் ஒன்றை அமைப்பது தொடர்பிலும், மூன்றாவதாக நீதிமன்ற விசாரணைகளை மேற்கொள்வதற்கு சாட்சியங்களை திரட்டுவது உள்ளிட்ட விடயங்கள் அதில் குறிப்பிடப்பட்டிருந்தது.

இவ்வாறான நிலையில் தற்போது வெளியான வரைபை நாங்கள் பார்க்கின்றபோது இதுவரை நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் மிகவும் பலவீனமான வரைபாகதான் நாங்கள் அதை பார்க்க வேண்டும் என அவர் குறிப்பிட்டார்.

பொறுப்புக்கூறல் என்ற விடயத்தை வெளியில் எடுக்க வேண்டும் என்று நோக்கங்களே கேட்டிருக்கின்ற இடத்தில், அவ்விடயம் பெரிய அளவில் குறிப்பிடப்படவில்லை என்பதை ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கின்றது.

சர்வதேச குற்றவியல் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்ற தேவை வலியுறுத்தப்பட்டுள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

ஆனால் துரதிர்ஷ்டவசமாக குற்றவியல் நீதிமன்றத்திற்கு கொண்டு செல்ல வேண்டும் என்ற கோரிக்கை தவிர்க்கப்பட்டுள்ளமையானது கடும் ஏமாற்றமாக உள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.(4-6-100-312)

# ஆக்கத்திறன் போட்டிகள்

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச செயலக பிரிவு அறநெறி பாடசாலைகளிடையே பாடசாலை ரீதியாக நடத்தப்படும் கலாசாரம் சார்ந்த ஆக்கத்திறன் போட்டிகளில் மாலைகட்டுதல், கோலம் போடுதல்,பேச்சு போட்டிகள் ஆகியன நுணாவில் மேற்கு பத்திரகாளி சமேத வீர பத்திரர் ஆலயத்தில் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 8 மணிக்கு நடைபெறும் என ஆலய பரிபாலனசபை செயலாளர் க.விஜயவாசன் அறிவித்துள்ளார்.

மேலதிக விபரங்களுக்கு 077 613 6575 எனும் இலக்கங்களுடன் தொடர்பு கொள்ளவும். (4-29)

# இரசாயன தொழிற்சாலை மீள இயக்கும் முயற்சியால் பொதுமக்கள் பாதிப்படையக் கூடாது

(கிளிநொச்சி)

பரந்தன் இரசாயனக் கூட்டுத்தாபனம் மீள் இயக்கும் முயற்சி ஊடாக மக்கள் குடியிருப்புகளையும் வாழ்வாதார வயல் நிலங்களையும் பறிக்க வேண்டாம் என கரைச்சி பிரதேசசபை தவிசாளர் அ.வேழமாலிகிதன் தெரிவித்தார்.

கிளிநொச்சி மாவட்ட அரச செயலக மாநாட்டு மண்டபத்தில் பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்தை மீள் இயக்குவது தொடர்பான கலந்துரையாடல் அண்மையில் மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்ற போது மேற்குறித்தவாறு தனது கோரிக்கையினை கரைச்சி பிரதேச சபை தவிசாளர் விடுத்துள்ளார்.

கடந்த பல ஆண்டுகளாக இயங்காது இருந்த பரந்தன் இரசாயன தொழிற்சாலையை அரசாங்கம் தனியார் கம்பனி ஒன்றிக்கு வழங்கி அதனை மீள இயக்குவது தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன்போது கருத்துத் தெரிவித்த தவிசாளர், பரந்தன் இரசாயன கூட்டுத்தாபனத்திற்கு 217 ஏக்கர் அளவு கொண்ட காணியினை மீளப்பெறுவது தொடர்பான முயற்சி மேற்கொள்வது உண்மையில் மீள் பரீசிலனை செய்ய வேண்டும்.

உண்மையில் குறித்த காணியில் 15 ஏக்கர் காணி இராணுவத்தின் பயன்பாட்டிற்கு வழங்குவது என்றும் கடந்த 35 ஆண்டுகாலமாக பொதுமக்கள் வாழ்ந்து வரும் வாழ்விடங்கள் 20 ஏக்கர் மற்றும் வாழ்வாதார வயல் நிலங்கள் 46 ஏக்கர் என்பவற்றை மீளப்பெற வேண்டும் என்ற தீர்மானம் பரிசீலனை செய்ய வேண்டும் என தீர்மானிப்பது சரியான தீர்மானம் அல்ல. அதாவது குறித்த காணியில் 15 ஏக்கர் இராணுவத்திற்கு வழங்க முடியும் என்றால் 35 ஆண்டு காலத்திற்கு மேலாக வாழ்ந்து வரும் குறித்த மக்களின் வாழ்விட நிலங்கள் மற்றும் வாழ்வாதார வயல் நிலங்களும் மக்களுக்கும் பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

அத்துடன் நவீன தொழில்நுட்பம் என்ற போர்வையில் மிகக் குறைந்த ஊழியர்கள் உள்வாங்கப்படும் என்னும் திட்டம் அதிகரிக்க வேண்டும். எனவே பொதுமக்கள் நன்மையை கருத்தில் கொண்டு பொதுமக்கள் மற்றும் துறைசார் வல்லுநர்களினதும் கருத்துக்கள் பெறப்பட்டு இறுதி முடிவு எடுக்க வேண்டும் என்றும் தெரிவித்தார். (நி-4)



2021 ஆம் ஆண்டுக்கான மாணவர்களை வரவேற்கும் நிகழ்வு" நேற்று முன்தினம் கிளிநொச்சி தருமபுரம் இல 1 அ.த.க. பாடசாலையில் சுகாதார நடைமுறைகளுக்கமைவாக பாடசாலை முதல்வர் தலைமையில் நடைபெற்றது .

(படம்-தேவாநந்தன்)

# பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி சேவைச் சந்தையின் பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் கடந்த 10 ஆம் திகதி கரைச்சி பிரதேச சபை செயலாளர் கா. சண்முக நாதன் தலைமையில் நடை பெற்றது.

குறித்த நிகழ்வில் தலைவராக இ. இரத்தினமணி, செயலாளராக இ. புவனேஸ்வரன், பொருளாளராக செ. கின் சிலின், உப தலைவராக க. ஜெயக்குமார், உபசெயலாளராக த. சேதுபதி தெரிவு செய்யப்பட்டனர். நிர்வாக உறுப்பினர்களாக ம. கசேணசன், த. உதயகுமார், ந. சிவரூபன், கி. கருணாகரன்,இ. ஜனசேகரம், ம. பிரசாந்தன், வ. தீபன், க.அனவரதன், சு. தர்மகுலசிங்கம், கி. சசிகுமார், சி. தவராசா, இ. பிரகாஸ் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (4-6)

# 890 ரூபாய்க்கு விதை உழுந்து கொள்வனவு

(நெளுக்குளம்)

விதை தேவைக்காக சுத்திகரிக்கப்பட்ட உழுந்து கிலோ 890 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்படும் என வவுனியா விவசாய திணைக்களம் தெரிவித்துள்ளது.

கண்டி வீதியில் அமைந்துள்ள விவசாயத் திணைக்களத்தில் விதை உற்பத்தி திட்டத்திற்கும் சாதாரண தேவைக்குமாக விதை உழுந்தினை கொள்வனவு செய்த விவசாயிகளிடம் இருந்தே குறித்த உழுந்து மீண்டும் கொள்வனவு செய்யப்படும்.

அந்தவகையில் விதைத் தேவைக்காக சுத்திகரிக்கப்பட்ட ஒரு கிலோ உழுந்தினை 830 ரூபாய் தொடக்கம் 890ரூபாய் வரை கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

விவசாயிகள் தங்களது கொள்வனவு பற்றுசீட்டுடன் பிரதி விவசாய பணிப்பாளரை தொடர்பு கொண்டு ஏனைய விடயங்களை அறிந்துகொள்ளலாம்.

இது தொடர்பான மேலதிக தொடர்புகளுக்கு: 024 222 2273, 0776321713 குறித்த இலக்கங்களிற்கு அழைப்பினை ஏற்படுத்துமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.(4-6-299)

# இலங்கை ஒரு தேசமாக இருந்தாலும் மனதளவில் இரு நாடுகளாகவே உள்ளது

(கொழும்பு)

அரச இயந்திரத்தால் ஒருமித்த நாடாகவும் மனதளவில் இரண்டு நாடாகவுமே இலங்கை இருக்கிறது எனத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்ளார்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையான மாபெரும் கவனயீர்ப்புப் பேரணியில் கலந்து கொண்டமைக்காக கிளிநொச்சி பொலிஸாரினால் வாக்கு மூலம் பெறப்பட்டது. இதன்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், இந்த நாட்டிலே தமிழர்களின் முப்படைகளால் காணிகள் வன்பறிப்பு செய்யப்பட்டிருக்கிறது. தொல்லியல் திணைக்களம் என்ற பெயரிலும் வன வளத் திணைக்களம் வனஜீவராசிகள் திணைக்களம் போன்றவை ஊடாக காணிகள் சுவீகரிப்புச் செய்யப்படுகின்றன.

இலங்கையில் பௌத்த விகாரைக்காக காணிகள் உறுதியோடு வழங்கப்படுகின்றன. ஆலயங்களுக்கு குத்தகை முறை யிலேதான் வழங்கப்படுகிறது. முப்படையினரை பயன்படுத்தி ஒரு தேசமாக இலங்கையை ஆட்சியாளர்கள் வைத்திருக் கிறார்களே தவிர மனதளவில் இரண்டு நாடாகவே இருக்கிறது. அந்த வகையில் தான் அரசும் செயற்படுகிறது.

இந்த போராட்டம் கூட இந்த நாட்டிலே தமிழ் பேசும் மக்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளுக்கு எதிராகவே இடம் பெற்றது. குறித்த போராட்டமானது வடக்கு-கிழக்கு சிவில் சமூக அமைப்பினால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

இந்த ஆர்ப்பாட்டத் தினை நாம் தேசிய பாதுகாப் புக்கு அச்சுறுத்தும் வகையிலோ இலங்கை இறையாண்மைக்கு எதிராகவோ ஆயுத வழியிலோ போராடவில்லை எனவும் அரச இயந்திரங்களால் தமிழ் மக்களுக்கு எதிராக இழைக்கப்படும் அநீதிகளுக்காகவும் அரச பயங்கரவாதத்திற்கு எதிராகவுமே அமைதி வழியில் இந்த போராட்டம் நடத்தப்பட்டது என தெரிவித்தார். (4-6)

# சுகாதார தரப்பின் ஒத்துழைப்பை பெற பரீட்சைத் திணைக்களம் தீர்மானம்

(கொழும்பு)

எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதி நடைபெறவுள்ள கல்விப் பொதுத்தரா தர சாதாரண தரப்பரீட்சை யின் அவசர நிலைமைகளுக்கு சுகாதார தரப்பினர் அடங்கிய குழுவின் ஒத்துழைப்பை பெற் றுக் கொள்வதற்கு பரீட்சைகள்திணைக்களம் தீர்மானித்து ள்ளது.

நாடு முழுவதும் உள்ள 4 ஆயிரத்து 513 பரீட்சை நிலையங்களில் இந்த பரீட்சைகள் இடம் பெறவுள்ளன.

நிலவும் கொரோனா பரவல் காரணமாக அவசர நிலை ஏற்பட்டால் சிகிச்சை வழங்குவதற்காகவும் அந்தந்த பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுடன் இணைப்பை ஏற்படுத்துவதற்காகவும் நோயாளர் காவுவண்டி உள்ளிட்ட வசதிகளை ஏற்படுத்திக்கொள்ளவும் தீர் மானிக்கப்பட்டுள்ளது.

இது தவிர பரீட்சை மையங்களில் உள்ள வசதிகளை ஏற்பாடு செய்வதற்கும் அங்கு கிருமிநாசினி தெளிக்கும் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கும் உள்ளூர் சுகா தார அதிகாரிகள் நியமிக்கப் பட்டுள்ளனர். (நி-4)

# பாக்.பிரதமரின் பாதுகாப்புப் பிரிவு இலங்கை வருகை

(கொழும்பு)

பாகிஸ்தான் பிரதமர் இம்ரான்கான் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை இலங்கைக்கு 2 நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற்கொள்ளவுள்ளார்.

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் பாகிஸ்தான் பிரதமரை வரவேற்பதற்காக விசேட இராணுவ மரியாதை அணிவகுப்பு நடத்தப்படவுள்ளது. இது தொடர்பான ஒத்திகை நிகழ்வு கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சுற்றுலா துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க அங்கு சென்று ஒத்திகை நிகழ்வு வேலைத்திட்டத்தை பார்வையிட்டார்.

பாகிஸ்தான் பிரதமரின் விஜய செயற்பாடுகளுக்காக இலங்கை வந்துள்ள பாகிஸ்தான் பாதுகாப்பு மற்றும் அரச அதிகாரிகளுடன் அமைச்சர் கலந்துரையாடினார்.(நி-4)

# உலக நாடுகள் பா.ஜ.கவின் கொள்கையால் கவரப்படும்

## இதுவே திரிபுரா முதலமைச்சர் தெரிவித்தது என்கிறார் சட்ட அமைச்சர்

(டில்லி)

உலகநாடுகள்பா.ஜ. கவின் கொள்கையால் கவரப்படும் என்பதையே எங்கள் முதலமைச்சர் தெரிவித்தார். ஆனால் அதன் அர்த்தம் பா.ஜ.க அரசாங்கத்தை அமைக்கும் என்பதில்லை என திரிபுராவின் சட்ட அமைச்சர் ரத்தன் லால் நாத் தெரிவித்துள்ளார்.

பா.ஜ.க. இலங்கையில் ஆட்சி அமைப்பது தொடர்பில் திரிபுரா முதலமைச்சர் சமீபத்தில் தெரிவித்த சர்ச்சைக் கருத்தை தெளிவுபடுத்தும் வகையில் திரிபுராவின் சட்ட அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமெரிக்கா, இலங்கை உட்பட பல நாடுகள் பா.ஜ. கவின் கொள்கையால் கவரப்பட்டு அந்தக் கொள்கையை ஏற்றுக்கொள்ளும் நிலையில் உள்ளன.

உலகநாடுகள்பா.ஜ. கவின் கொள்கையால் கவரப்படும் என்பதையே எங்கள் முதலமைச்சர் தெரிவித்தார். ஆனால் அதன் அர்த்தம் பா.ஜ.க. அரசாங்கத்தை அமைக்கும் என்பதில்லை.

முதலமைச்சரின் கருத்து தவறாக அர்த்தப்படுத்தப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் உள்ளவர்கள் பா.ஜ.கவின் சிந்தனைகளை ஏற்றுக் கொள்வது குறித்து சிந்திக்கின்றார்கள். அமெரிக்காவும் எங்கள் கொள்கையை ஏற்றுக்கொள்வது குறித்து சிந்திக்கின்றது. முழு உலகமும் இது குறித்து சிந்திக்கின்றது.

அதேபோல் நரேந்திர மோடி தெரிவித்த பின்னர் உலகம் முழுவதும் சர்வதேச யோகா தினம் கொண்டாடப்படுகின்றது.

இவ்வாறாக முழு உலகமும் அவரது சிந்தனைகள் குறித்து சிந்திக்கின்றன என அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை திரிபுரா தலைநகர் அகர்தலாவில் நடந்த பொதுக்கூட்டம் ஒன்றில் மாநில முதலமைச்சரும், பா.ஜ.க. தலைவர்களில் ஒருவருமான பிப்லாப் தேப் இந்தியாவையும் தாண்டி அதிகாரத்தை பிடிக்க பா.ஜ.க. விரும்புவதாக கூறியதாக செய்தி வெளியாகி இருந்தது.

"உள்துறை அமைச்சரான அமித்ஷா, பா.ஜ.க தேசிய தலைவராக இருந்தபோது அகர்தலா மாநில அரசு விருந்தினர் மாளிகையில் பல்வேறு தலைவர்களுடன் கலந்துரையாடினார்.

இந்திய மாநிலங்களை தாண்டி நேபாளம் மற்றும் இலங்கையிலும் ஆட்சியை விரிவுபடுத்த கட்சி திட்டமிட்டு வருவதாக திரிபுரா முதலமைச்சர் அண்மையில் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக்கிண்ணம்

## Play off சுற்றுக்கு 4 அணிகள் தெரிவு


வடநோத் கொன்கியுரஸ்


யாழ்.றோயல்


நல்லூர் புரொண்கொஸ்


வடமராட்சி வேங்கைகள்

ஞானம்ஸ் பெயின்ட் சம்பியன் வெற்றிக் கிண்ணத் தொடரின் 20 தகுதிகாண் போட்டிகளும் முடிவுற்றன. ஏ பிரிவில் முதல் இரு அணிகளும், பி பிரிவில் முதல் இரு அணிகளும் தெரிவு செய்யப்பட்டுள்ளன.

ஏ பிரிவில் முதலாவது அணி நல்லூர் பு(B)ரொண்டுகோள், பி பிரிவில் முதலாவது அணி நோத் கொண்கியூரஸ் அணியும் முதலாவது போட்டியில் (QUALIFYER NO1) கலந்து கொள்வார்கள்.

இந்தப் போட்டி நேற்று சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் காலை 9 மணிக்கு நடைபெற்றது.

ஏ பிரிவில் 2 ஆவது வடமராட்சி வேங்கைகள் அணியும் பி பிரிவில் 2 ஆவது அணி நோத் கொண்கியூரஸ் அணியும் 2 ஆவது போட்டியில் (ELEMINATOR) நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்றது.

நேற்றுக் காலை நடைபெற்ற முதலாவது போட்டியில் வெற்றி பெறும் அணி இறுதிப் போட்டிக்கு தகுதி பெறும்.

தோல்வி பெறும் அணி நேற்று பிற்பகல் ஒரு மணிக்கு நடைபெற்ற (ELIMINATOR) போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் (QUALIFIER NO2) கலந்து கொள்ளும்.

இப்போட்டி இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு நடைபெறும்.

தொடர்ந்து மதியம் 12.30 மணிக்கு நடைபெறவிருக்கும் இறுதிப் போட்டியில் (QUALIFIER NO1) போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் (QUALIFIER NO2) போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் கலந்து கொள்வார்கள். (4)

# இந்தியாவிற்கு பாதுகாப்பாக தமிழர்களை தவிர வேறு எவராலும் இருக்க முடியாது

## சிறிதரன் சுட்டிக்காட்டு

(முறிகண்டி)

**வடக்கு-கிழக்கில் தமிழர்களின் நலன்கள், அவர்களுடைய இருப்புக்கள், அவர்கள் இழந்த உரிமைகள், சுயாட்சி என்பவற்றை மீண்டும் பெற்றுக்கொடுக்க இந்தியா முன்வர வேண்டும்.**

இந்தியாவிற்கு தமிழர்களாலேயே
பாதுகாப்பு எனப் பாராளுமன்ற உறுப்பி
னர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்துள்
ளார். கிளிநொச்சியில் நேற்று அவர் ஏற்
பாடு செய்திருந்த ஊடகவியலாளர் சந்
திப்பில் கருத்துத் தெரிவிக்கையிலேயே
அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சீன
செயற்பாடுகள் என்பது இந்தியா விற்கு
ஆபத்தானது.

இந்தியா இனியும் தமிழர்களை
எதிரியாக பார்க்காது அவர்களின் நலன்
கள் என்பதற்கு அப்பால் இந்தியாவின்




நலன்களை என்பதைக் கருத்தில் கொண்டு
வட கிழக்கிலே தமிழர்களிற்கான
இழந்து போன உரிமைகள், சுயாட்
சியை வழங்குவதன் மூலம் இந்தி
யாவிற்கான ஓர் பாதுகாப்பு நண் பனாக
தமிழர்களே இருப்பார்கள். தமிழர்க
ளைத் தவிர இந்தியாவிற்கு பாதுகாப்
பாக எவராலும் இருக்க முடியாது எனத்
தெரிவித்தார்.

ஆகவே இந்தியா தனது வெளியுறவு
கொள்கையிலிருந்து மாறி இன்று சீன
அரசாங்கத்தின் ஊடாகவோ அல்லது
வெளிநாட்டு அரசாங்கத்தின் ஊடா
கவோ இலங்கை மேற்கொள்கின்ற
இந்த நடவடிக்கைகளிற்கு தமிழர்களு
டைய நலன்களையும் தமிழர்களுடைய
இருப்புக்களையும் பாதுகாத்துக்கொள்ள
இந்தியா முயற்சித்தால் அது இந்தியா
விற்கு பெரிய பலத்தை தரும்.

எமது ஆதரவு இந்தியாவிற்கே இருக்
கும் சீனாவோடு இருக்காது. இந்தச் செய்
தியை இந்த நாங்கள் மீண்டும் மீண்டும்
குறிப்பிடுகின்றோம். அதற்காக நாங்கள்
என்ன விலை கொடுக்கவும் தயாராக
இருக்கின்றோம் எனவும் அவர் தெரி
வித்தார். (4-6-100)

## கஜேந்திரகுமாரிடம் நேற்று வாக்குமூலம்



(முறிகண்டி)

பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திர
குமார் பொன்னம்பலத்திடம் கிளிநொச்சி
பொலிஸார் வாக்குமூலம் நேற்று பதிவு
செய்தனர்.

கிளிநொச்சியில் உள்ள அகில இல
ங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி அலுவல
கத்தில் வைத்து கிளிநொச்சி பொலிஸார்
இவ்வாறு வாக்கு மூலம் பதிவு செய்து
கொண்டனர்.

பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி
வரையான பேரணியில் பங்கு கொள்ள
வேண்டாம் எனத் தெரிவித்து நீதிமன்ற
தடை உத்தரவு பொலிஸாரால் பெற்றுக்
கொள்ளப்பட்டது. அதனை மீறி பேரணி
யில் கலந்து கொண்டமை தொடர்பில்
நேற்று கிளிநொச்சி பொலிஸார் வாக்கு
மூலம் பெற்றுக்கொண்டமை குறிப்பிடத்
தக்கதாகும். (4-6-100)




தேசிய மொழிக்கல்வி மற்றும் பயிற்சி நிறுவகத்தால் முல்லைத்தீவு மாவட்ட செயலக மற்றும் திணைக்களங்களைச் சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கான 150 மணித்தியாலயங்களைக் கொண்ட இரண்டாம் மொழி சிங்கள பயிற்சி நெறியின் இறுதி நாள் நிகழ்வு நேற்று முன்தினம் மேலதிக மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் தலைமையில் இடம்பெற்றது.

# 10.6 மில்லியன் ரூபாய் செலவில் கைத்தொழில் அபிவிருத்தி நிலையம்

(நெளுக்குளம்)

10.6 மில்லியன் ரூபாய்
செலவில் தாண்டிக்குளம் கைத்
தொழில் அபிவிருத்தி நிலை
யத்திற்கான அடிக்கல்லினை
வவுனியா தெற்கு தமிழ் பிர
தேச சபை தவிசாளர் ந.துரை
ராஜசிங்கத்தினால் நாட்டி வைக்
கப்பட்டது.



வவுனியா தெற்கு தமிழ்
பிரதேச சபை தவிசாளர் ந.துரை
ராஜசிங்கத்தின் தலைமையில்
இடம்பெற்ற இந்நிகழ்வில் வவு
னியா மாவட்ட மேலதிக அரசா
ங்க அதிபர் தி.திரேஸ்குமார்,
வவுனியா பிரதேச செயலாளர்.
கமலதாசன், நகரசபை தலை
வர் இ.கௌதமன், பிரதேச
சபை செயலாளர் திருமதி. சுக
ந்தி கிஷோர், உள்ளூராட்சி
சபை உறுப்பினர்கள், உத்தி
யோகத்தர்கள், பொதுமக்கள்
எனப் பலரும் கலந்து கொண்டி
ருந்தனர்.

இலங்கை உள்ளூராட்சி
மன்றங்களின் சம்மேளனம்,
பொதுநலவாய உள்ளூராட்சி
மன்றங்களின் இணையம்,
வவுனியா தெற்கு தமிழ் பிர
தேச சபை ஆகியவற்றின் நிதி
யின் கீழ் இவ் தாண்டிக்குளம்
கைத்தொழில் அபிவிருத்தி
நிலையம் அமையவுள்ளமை
குறிப்பிடத்தக்கது. (4-6-299)

# மக்கள் குடியிருப்பில் தொலைத்தொடர்பு கோபுரம்

(நெளுக்குளம்)

வவுனியா உக்குளாங்கு
ளம் திருச்செந்தூரன் மில்
வீதியில் மக்கள் குடியிருப்பில்
நிர்மாணிக்கப்பட்டு வரும்
தொலைத் தொடர்புக் கோபுரத்
தின் நிர்மாணப்பணியை தடு
த்து நிறுத்தி பொதுமக்களின்
பாதுகாப்பை உறுதிப்படுத்து
மாறு அப்பகுதி மக்கள் கோரி
க்கை விடுத்துள்ளனர்.

இவ்விடயம் குறித்து மேலும்
தெரியவருகையில்,

உக்கிளாங்குளம் திருச்
செந்தூரன் மில் வீதியில் மக்
கள் குடியிருக்கும் பகுதியில்
கிராம அபிவிருத்திச் சங்க
த்தின் அனுமதியின்றியும்
நகர சபையின் அனுமதி பெற்
றுக் கொள்ளாமல் தனியார்
தொலைத் தொடர்புக் கோபுரத்
தின் நிர்மாணப்பணிகள் தற்
போது இடம்பெற்று வருகின்றது.

இக்கோபுரத்தைச் சூழவு
ள்ள பகுதியில் வசித்து வரும்
30 தொடக்கம் 35 வரையான
குடும்பங்களுக்கு பெரும் அச்
சுறுத்தலாக மாறியுள்ளது.

இவ்விடயம் குறித்து கிராம
அபிவிருத்திச் சங்கம், நகர
சபை, பிரதேச செயலாளர், சுற்
றுச்சூழல் பாதுகாப்பு நகர சபை
உறுப்பினர், பாராளுமன்ற
உறுப்பினர்கள் எனப் பல்வேறு
தரப்பினருக்கு கடிதங்கள்
அனுப்பிவைக்கப்பட்டும் இதன்
நிர்மாணப் பணிகளைத்
தடுப்பதற்குரிய எவ்விதமான
நடவடிக்கையும் முன்னெடுக்
கப்படவில்லை.

இவ்விடயம் குறித்து வவு
னியா நகரசபைத் தவிசாளர்
இ.கௌதமன் தெரிவிக்கை
யில்,

குறித்த கோபுரம் அமைப்ப
தற்கு அப்பகுதி மக்களின் எதிர்
ப்பால் நகரசபையினால் அனு
மதி மறுக்கப்பட்டுள்ளதுடன்
இதன் பணிகளை மேற்கொள்
வதற்கு தடை அறிவுறுத்தல்
நகரசபையினால் வழங்கப்பட்
டுள்ளது.

பணிமேற்கொண்டால் அவ
ர்களுக்கு எதிராக நடவடிக்கை
மேற்கொள்ளவுள்ளதாக மேலும்
தெரிவித்தார். (4-6-299)

# பொலிஸாரின் நடவடிக்கையையடுத்து குறைவடைந்தது மணல் கொள்ளை

(தருமபுரம்)

பச்சிலைப்பள்ளி பிரதேசத்
தில் கடந்த காலங்களில் மண்
அகழ்வுகள் அதிகரித்து காணப்
பட்டது. முகமாலை, கிளாலி,
இயக் கச்சி போன்ற இடங்க
ளில் அதிகளவிலான மணல்
கொள்ளை இடம்பெற்று வந்
தமை குறிப்பிடத்தக்கது.

இது தொடர்பாக பொலிஸார்
கவனக்குறைவாக உள்ளனர்
என்று மக்கள் ஆர்ப்பாட்டங்
களை நடத்தினர்.

இதன் காரணமாகச் சென்ற
ஆண்டுகளை விட மண்கொள்
ளையானது பளை பிரதேசத்
தில் பாரிய அளவில் வீழ்ச்சி
அடைந்துள்ளதாக மக்கள் தெரி
விக்கின்றனர்.

பளை புலனாய்வு பொலி
ஸாரின் அதிரடி நடவடிக்கையி
னால் இந்த வீழ்ச்சி ஏற்பட்
டுள்ளதாக மக்கள் தெரிவிக்கி
ன்றனர்.

மேலும் இம் மணல் கொள்
ளையில் அதிகம் ஈடுபடுபவர்
கள் குறைந்த வயதுடையவர்
கள் எனவும் பொதுமக்கள்
தெரிவிக்கின்றனர். (4-6-316)



மரியாதையாய் கேட்டால், கோட்டைகளும் உனக்கு வழிவிடும்.

— செனிகா

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நாங்களும் பேரணியில் பங்குபற்றினோம் என்று அறிவித்தால் நிலைமை என்னவாகும்

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் பங்கு கொண்டார்கள் என்ற அடிப்படையில், தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர்கள், யாழ்.மாநகர முதல்வர் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்கள் என்போரிடம் பொலிஸார் வாக்குமூலங்களைப் பதிவு செய்துள்ளனர்.

பேரணியில் ஏன் கலந்து கொண்டீர்கள் என்பது பொலிஸாரின் முக்கிய கேள்வியாக இருந்ததாக கூறப்படுகிறது.

பரவாயில்லை மேலிடத்தில் இருந்து பொலிஸாருக்கு வழங்கப்பட்ட உத்தரவின் பிரகாரம் அவர்கள் சம்பந்தப்பட்டவர்களிடம் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர் என்று வைத்துக் கொள்ளலாம்.

அவ்வாறான சூழ்நிலையில், பேரணியின் இறுதியில் வாசிக்கப்பட்ட பிரகடனமே பேரணியில் கலந்து கொள்வதற்குக் காரணம் என்பது பதிலாக அமைகிறது.

இவை ஒருபுறமிருக்க, குறிப்பிட்ட சிலரிடம் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்ட போது,

அட, நானும் பேரணியில் பங்குபற்றினேன். இருந்தும் என்னிடம் பொலிஸார் விசாரணை நடத்தாதது ஏன்? என்ற குழப்பத்துக்குப் பலரும் ஆளாகியுள்ளனர்.

அதாவது பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணியில் கலந்து கொண்டிருந்தும் எங்களைப் பொலிஸார் கவனிக்காமல் விட்டுள்ளனர்.

நாங்கள் பேரணியில் கலந்து கொண்டதைப் பொலிஸார் கவனிக்கத் தவறியது எதற்காக என்று கேள்வி எழுப்புகின்ற அளவிலேயே நிலைமை உள்ளது.

அட! பேரணியில் கலந்து கொண்டது எதற்காக என்று பொலிஸார் விசாரணை செய்து வாக்குமூலத்தைப் பதிவு செய்கையில், அதன் மறுபுறத்தில் நாங்கள் பேரணியில் பங்குபற்றியிருந்தும் எங்களைப் பொலிஸார் விசாரணை நடத்தாதது எதற்கானது என்று கேள்வி எழுப்பப்படுகின்றது எனில், அது ஒட்டுமொத்த தமிழ் மக்களினதும் விருப்பத்துக்குரிய பேரணி என்பது புரிதற்குரியது.

ஆக, முன்புபோல விசாரணைகள், படப்பிடிப்புகள், தடுத்து வைப்புகள் என எதுவும் தமிழ் மக்களை அச்சுறுத்தப் போவதில்லை.

மாறாக பொலிஸார் விசாரணை நடத்துகின்றனர் என்றவுடன் இந்த விசாரணை மூலமாவது தமிழ் மக்களின் பிரச்சினை களை பொலிஸாருக்கு எடுத்துக் கூறலாம். அவ்வாறு கூறும்போது உண்மை நிலையைப் பொலிஸாரும் புரிந்து கொண்டு, எதிர்வரும் காலங்களில் மேற்போந்த பேரணிகள் முன்னெடுக்கப்பட்டால் அதற்கு பொலிஸாரின் ஒத்துழைப்பு கிடைக்கும் என்று கருதுகின்ற நிலைமை வந்துவிட்டது.

இதை நாம் கூறும்போது, உங்களில் யாராவது ஒருவர்; தம்பி ஒட்டுமொத்தத் தமிழ் மக்களும் பொலிஸ் திணைக்களத்துக்குத் தொலைபேசி அழைப்பை எடுத்து;

ஐயா! நாங்களும் பேரணியில் பங்குபற்றினோம். எங்களை விசாரிக்க எப்போது வருவீர்கள் என்று கேட்டால் நிலைமை எப்படியிருக்கும்?

உங்கள் நினைப்பு செயலுருப் பெற்றால் பேரணியின் உச்சத்தைவிட அது இன்னுமொரு மடங்கு உயர்வானதாய் அமையும்.

# நாட்டில் எச்.ஐ.வியால் சுமார் 3500 பேர் பாதிப்பு

(கொழும்பு)

இலங்கையில் தற்போது 3 ஆயிரத்து 500 இற்கும் மேற்பட்டோர் எச்.ஐ.வி. தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக தேசிய பாலியல் நோய் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டம் தெரிவித்துள்ளது.

அவர்களில் ஆயிரத்து 600 இற்கும் மேற்பட்டோர் தமக்கு எச்.ஐ.வி.தொற்று ஏற்பட்டுள்ளமை தொடர்பில் அறியாதிருந்ததாக தேசிய பாலியல் நோய் எயிட்ஸ் தடுப்பு வேலைத்திட்டத்தின் பணிப்பாளர் மருத்துவர் ரசாஞ்சலி ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் 44 சிகிச்சை நிலையங்கள் காணப்படும் நிலையில், அவற்றில் சுமார் 2ஆயிரம் பேர் வரை சிகிச்சைகளை பெற்றுக் கொள்வதாக அவர் தெரிவித்தார்.

இந்த .நிலையில், ஏனையோர் சிகிச்சை நிலையங்களுக்கு வருகை தருவதில்லை எனவும் அவர்கள் தமக்கு எச்.ஐ.வி.தொற்று இருப்பது குறித்து அறியாமல் உள்ளதாகவும் தொற்றுக்குள்ளானோர் தமது ஆரோக்கிய வாழ்க்கையை கருத்திற் கொண்டு சிகிச்சைகளை பெற்றுக்கொள்ள முன்வர வேண்டுமெனவும் அவர்கோரிக்கை விடுத்துள்ளார். (நி-4)

# முஸ்லிம் நாடுகளின் ஆதரவு இலங்கைக்கே கிடைக்கும்

## வெளிவிவகார அமைச்சர் நம்பிக்கை

(கொழும்பு)

ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46 ஆவது கூட்டத் தொடரில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவு இம்முறையும் இலங்கைக்குக் கிடைக்கும் என்று வெளிவிவகார அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நம்பிக்கை வெளியிட்டார்.

ஜனாஸா விவகாரம் இதில் தாக்கத்தைச் செலுத்தாது எனவும், முஸ்லிம் நாடுகளின் பிரதிநிதிகளுக்கு இது குறித்து தெளிவுபடுத்தப்பட்டுள்ளது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அதேவேளை, கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம் மக்களின் சடலங்களை அடக்கம் செய்வதற்கு அனுமதி வழங்கப்படும் எனப் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறிய கருத்து உண்மையே எனவும் அவர் குறிப்பிட்டார்.

சுகாதார நிபுணர் குழுவின் பரிந்துரையையே பிரதமர் தெரியப்படுத்தினார் எனவும், இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# பயிற்சி முடிவில் நிரந்தர நியமனம்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கம் 58,000 பட்டதாரிகளுக்கு நியமனங்களை வழங்கியுள்ளது என அரச சேவை மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் ஜே. ஜே.ரத்னசிறி தெரிவித்துள்ளார்.

முதலாவது கட்டமாக 50 ஆயிரம் பேருக்கும் இரண்டாவது கட்டமாக 8000 பேருக்கும் நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அவர்கள் ஒரு வருடகால பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பயிற்சிக்காலத்தில் ரூபாய் 20,000 கொடுப்பனவு வழங்கப்படுகின்றது.

பயிற்சிக் காலம் நிறைவடைந்ததும் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு நிரந்தரமாக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சின் செயலாளர் மேலும் தெரிவித்தார். (நி-4)


# மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 22 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணி வரை

**யாழ்.பிரதேசத்தில்** நயினாதீவு தபாலக வீதி, நயினாதீவு முருகன் கோவில் வீதி, நயினாதீவு பிரதான வீதி ஆகிய இடங்களிலும்

**கிளிநொச்சி பிரதேசத்தில்** கூமாங்குளம் கிராமம் ஆகிய பிரதேசங்களிலும் தடைப்படும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



## அன்பு கடவுளிடம் இருந்து வருகிறது

❖ பகைமை சண்டைகளை எழுப்பிவிடும். தனக்கு இழைத்த தீங்கு அனைத்தையும் அன்பு மன்னித்து மறக்கும்.

❖ ஒருவர் மற்றவரிடம் அன்பு செலுத்துவோமாக. ஏனெனில் அன்பு கடவுளிடமிருந்து வருகிறது. அன்பு செலுத்தும் அனைவரும் கடவுளிடமிருந்து பிறந்தவர்கள்.

❖ தொலைவில் இருக்கும் உடன்பிறந்தாரை விட அண்மையில் இருக்கும் நண்பரே மேல்.

❖ எளியோரின் நலனில் அக்கறை கொள்பவர் பேறு பெற்றோர். துன்பநாளில் ஆண்டவர் அவரை விடுவிப்பார்.

❖ உன் சகோதரர்கள் ஏழ்மைப்பட்டு இளைத்துப்போனால் அவர்களுக்கு உதவு.

❖ முழுமனத் தாழ்மையோடும் கனிவோடும் பொறுமையோடும் ஒருவரை ஒருவர் அன்புடன் தாங்குங்கள்.


❖ உங்களுக்குள் ஒருவருக்கொருவர் மட்டுமன்றி எல்லோருக்கும் எப்பொழுதும் நன்மை செய்யவே நாடுங்கள்.

❖ விருந்துக்கு அழைக்கும்போது ஏழைகளையும் உடல் ஊனமுற்றோரையும் கால் ஊனமுற்றோரையும் பார்வையற்றோரையும் அழையுங்கள்.

❖ சினமுற்றாலும் பாவம் செய்யாதிருங்கள். படுக்கையில் உங்கள் உள்ளத்தோடு பேசி அமைதியாயிருங்கள்.

# கொரோனாவின் பிறப்பிடம் குறித்து அமெரிக்காவில் ஆய்வு செய்யுங்கள்

## சீனா வலியுறுத்து



(பீஜிங்)

**கொடிய கொரோனா வைரஸின் பிறப்பிடம் குறித்து அமெரிக்காவில் ஆய்வு செய்யுமாறு, உலக சுகாதார அமைப்பிடம் சீனா வேண்டுகோள் விடுத்துள்ளது.**

கொரோனா வைரஸ் முதல் முதலில் பரவிய வுஹான் நகரில் உலக சுகாதார அமைப்பின் நிபுணர்கள் குழு மேற்கொண்ட ஆய்வில் வுஹான் வைராலஜி அறிவியல் மையத்தில் இருந்து மனித இனத்திற்கு வைரஸானது அறிமுகப்படுத்தப்பட்டது என்பது சாத்தியமில்லை என தெரிவித்தது.

எனினும், உலக சுகாதார அமைப்பின் அண்மைய புலனாய்வில் சீன அரசாங்கத்தின் தலையீட்டிற்கான சாத்தியம் உள்ளது என அமெரிக்கா குற்றஞ்சாட்டியது.

இந்நிலையில், சீனாவின் வெளியுறவு அமைச்சக செய்தி தொடர்பு அதிகாரி வாங் வென்பின், 'வைரஸ் தொற்று குறித்து அமெரிக்காவில் ஆய்வு செய்யுமாறு' தெரிவித்தார்.


இதுகுறித்து அவர் மேலும் கூறுகையில்,

'சீனாவை எடுத்துக்காட்டாக கொண்டு, கொரோனா வைரஸின் பிறப்பிடம் பற்றி கண்டறியும் விவகாரத்தில் அமெரிக்காவும் நல்ல விதத்தில், அறிவியல் அடிப்படையில் மற்றும் ஒத்துழைக்கும் வகையில் நடந்து கொள்ளும் என நாங்கள் நம்புகிறோம்.

கொரோனா வைரஸின் பிறப்பிடம் பற்றி ஆய்வு மேற்கொள்ள உலக சுகாதார அமைப்பின் நிபுணர்களை வரவேற்கும்' என கூறினார். (நி-4)

# பாரிஸ் ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைவு

## உத்தியோகபூர்வ அறிவிப்பு வெளியானது



(வோஷிங்டன்)

பருவநிலை மாற்றம் தொடர்பான பாரிஸ் ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைந்துள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.


காபன் வெளியேற்றம் போன்ற காரணங்களால் புவி வெப்பமயமாவதை தடுப்பதற்கான ஒப்பந்தத்தில் 200 நாடுகள் கையொப்பமிட்டன.

இந்த ஒப்பந்தம் காரணமாக கூடுதல் செலவு ஏற்படும் என்று கூறி அமெரிக்க முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வெளியேறினார்.

இந்த நிலையில், புதிய ஜனாதிபதியாக பதவியேற்ற முதல் நாளிலேயே, பருவநிலை மாற்றம் ஒப்பந்தத்தில் அமெரிக்கா மீண்டும் இணைவதற்கு ஜோ பிடன் உத்தரவிட்டார்.

அதன்படி ஒப்பந்தத்தில் மீண்டும் இணையும் நிகழ்ச்சி காணொலி மூலம் நடைபெற்றது. இதன்போது விஞ்ஞானிகள் மற்றும் பல்வேறு நாடுகளின் தூதர்களும் அமெரிக்காவின் நடவடிக்கைக்கு வரவேற்பு தெரிவித்துள்ளனர். (நி-4)

# மஞ்சள் நிறத்தில் பென்குயின்



(ஜோர்ஜியா)

உலகிலேயே முதன்முறையாக முழுவதும் மஞ்சள் நிறத்தினாலான பென் குயின் படம் பிடிக்கப்பட்டுள்ளது.

அண்டார்க்டிக்கா அருகில் உள்ள தெற்கு ஜோர்ஜியா கடல் பகுதியில் பறவைகள் ஆய்வாளர் ஒருவர் தனது ஆவணப்படத்தை எடுத்துக் கொண்டிருந்த போது, அங்கு முழுவதும் மஞ்சள் நிறத்தினாலான பென்குயின் ஒன்றைக் கண்டார். அதனுடன் வழக்கமான நிறத்தில் உள்ள எம்பரர் பென்குயின் ஒன்றும் உலா வருவதைக் கண்ட அவர் இரண்டையும் புகைப்படம் எடுத்துள்ளார்.

ஏனைய உயிரினங்களில் அல்பினோ எனப்படும் வெள்ளை நிறமிகள் இருப்பதைப் போல முதன்முதலாக பென்குயினிலும் பார்க்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# முயல் போன்ற பிற விலங்குகளால் மனிதர்களுக்குப் பரவியிருக்கலாம்

## கொவிட் குறித்து உலக சுகாதார ஸ்தாபனம்

(ஜெனிவா)

சீனாவில் வுஹான் நகரிலுள்ள சந்தையில் விற்கப்பட்ட பேட்ஜர்கள் மற்றும் முயல்கள் மூலம் மனிதர்களுக்கு கொரோனா வைரஸ் பரப்புவதில் ஒரு பங்கைக் கொண்டிருக்கக்கூடும் என தொற்று நோயின் தோற்றம் குறித்து ஆராயும் உலக சுகாதார ஸ்தாபனத்தின் நிபுணர்கள் தெரிவிக்கின்றனர்.



எவ்வாறாயினும், குறித்த விலங்குகள் மற்றும் பிற விலங்குகளை சந்தைக்கு விற்பனை செய்தவர்கள் குறித்து மேலும் விசாரிக்க வேண்டியதன் அவசியத்தை நிபுணர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

சந்தையில் சட்டபூர்வமாக அல்லது சட்டவிரோதமாக விற்கப்படும் உயிருடன் மற்றும் இறந்த விலங்குகளின் முழு பட்டியலை அவர்கள் இன்னும் கண்டுபிடிக்கவில்லை.

ஐரோப்பாவிலும் மனிதர்களுக்கும் மிங்க் விலங்குகளுக்கும் இடையிலான பரிமாற்றம் உறுதி செய்யப்பட்ட பின்னர் சீனா தனது மிங்க் பண்ணைகள் குறித்து பரவலான பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் நிபுணர்கள் வலியுறுத்துகின்றனர்.

உலக சுகாதார ஸ்தாபனம் நிபுணர் குழு கடந்த வாரம் சீனாவுக்கான நான்கு வார பயணத்தை முடித்தது.

ஒரு பத்திரிகையாளர் சந்திப்பில், ஒரு ஆய்வகத்திலிருந்து வைரஸ் கசிந்தமைக்கான சாத்தியமில்லை என அறிவித்தனர், அதேநேரத்தில் வுஹான் சந்தையின் பங்கு தெளிவாக இல்லை.

கொரோனா வைரஸை வௌவால்கள் சந்தைக்கு கொண்டு சென்றன என்பதையும் புலனாய்வாளர்கள் சந்தேகித்தனர். இது ஒரு இடை நிலை தொகுப்பாக இருப்பதாகப் பரிந்துரைத்துள்ளனர். (நி-4)

# ஐ.நா. அமைதிப்படைக்கு 2 இலட்சம் தடுப்பூசிகள்

## விநியோகிக்கும் இந்தியா

(சென்னை)

உலக நலனுக்காக கொவிட் தடுப்பூசி எப்பகுதியிலும் கிடைக்கப்பெறுவதை உறுதிசெய்யும் இந்தியாவின் அர்ப்பணிப்புக்கு அமைவாக ஐக்கிய நாடுகள் சபையின் அமைதிப் படையினருக்கு 2 இலட்சம் தடுப்பூசிகள் இந்திய அரசாங்கத்தால் வழங்கப்படுமென இந்திய வெளிவிவகார அமைச்சர் கலாநிதி எஸ்.ஜெய்சங்கர் அறிவித்துள்ளார்.

இது உலக ஆரோக்கியம், அதேபோல பல்தரப்பு உறவுகள், ஐ.நா. முறைமை மற்றும் இந்தியாவின் வகிபாகம் மிகவும் பாரியளவில் உள்ள ஐக்கிய நாடுகள் சபையின் அமைதி காக்கும் பணி ஆகியவற்றிற்கான இந்திய உறுதிப்பாட்டையும் மேலும் வலுவாக்குகின்றது.

கடந்த வியாழக்கிழமை திட்டமிடப்பட்ட வகையில் நடைபெற்றிருந்த சந்திப்பொன்றில் ஐக்கிய நாடுகள் சபையின் இலங்கைக்கான வதிவிட இணைப்பாளர் ஹனா சிங்கர் இலங்கைக்கான இந்திய உயர் ஸ்தானிகர் கோபால் பாக்லேவிடம் இதற்கான பாராட்டுக்களை தெரிவித்திருந்தார்.

தடுப்பூசி நட்பு திட்டத்தின் கீழ் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பல மில்லியன் கணக்கான தடுப்பூசி மருந்துகள் 25 இற்கும் அதிகமான நாடுகளுக்கு வழங்கப்பட்டிருக்கும் அதேநேரம் இவற்றில் பெருமளவானவை நன்கொடையாக வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# அடுத்த வைரஸ் ஆபிரிக்காவில் இருந்து பரவலாம்

(ஆபிரிக்கா)

சீனாவின் வுஹான் சந்தையில் இருந்து கொரோனா வைரஸ் பரவியதைப் போல அடுத்த வைரஸ் ஆபிரிக்காவில் இருந்து பரவ வாய்ப்பு இருப்பதாகக் கூறப்படுகிறது.

வுஹான் சந்தையில் பலவன உயிரினங்கள் உயிருடன் பிடிக்கப்பட்டு உணவாக்கப்பட்டதால் கொரோனா பரவியதாகக் கூறப்படும் நிலையில், ஆபிரிக்க நாடான நைஜீரியாவிலும் அதுபோன்று ஒலுவு என்ற பெயரில் சந்தை செயற்பட்டு வருவது தெரியவந்துள்ளது.

சீனாவைப் போலவே இங்கும் அலங்குகள், வௌவால்கள், குரங்குகள் ஏராளமாகப் பிடிக்கப்பட்டு உயிருடன் இருக்கும் போதே கொதிநீரில் மூழ்கடிக்கப்பட்டு உணவாகப் பரிமாறப்படுகிறது. இதற்காக சில உயிரினங்கள் சித்திரவதை செய்யப்படும் வீடியோவும் வெளியாகியுள்ளது. (நி-4)

## கடலுக்குள்...

ராட்சி திக்கம் கடற்கரையில் இடம்பெற்றுள்ளது.

இதில் சடலமாக மீட்கப்பட்டவர் கற்கோவளம் பகுதியைச் சேர்ந்த 31 வயதுடைய ஒரு பிள்ளையின் தந்தையான பபிகாந் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

வீதி அபிவிருத்தி வேலைகளில் ஈடுபடும் கம்பனியில் பணிபுரியும் மேற்பார்வையாளர் இவர் எனத் தெரியவந்துள்ளது.

இரவு பகலாக கடமையில் ஈடுபடும் இவர் நேற்று முன்தினம் இரவு திக்கம் சந்தி வீதியில் பயணித்துக் கொண்டிருக்கும்போது மோட்டார் சைக்கிள் திக்கம் கடலுக்குள் பாய்ந்துள்ளது.

திக்கம் கடற்கரை கல்லைக் கொண்டதால் இவர் நெற்றிப் பகுதியில் காயமேற்பட்டுள்ள நிலையில் சடலமாக மீட்கப்பட்டுள் ளார்.

சம்பவம் தொடர்பாக பருத்தித்துறை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-3,33,60)

## தடுப்பூசி...

கையில் உள்ள அனைத்து மதத்தலைவர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்தும் செயற்பாடு ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (ம-3)

## மரக்கறி...

சென்ற 75 வயதுடைய முதியவர் துவிச்சக்கர வண்டியில் பயணித்துக் கொண்டிருந்த வேளை மயக்கமடைந்த நிலையில் நிலத்தில் விழுந்து உயிரிழந்துள்ளார் .

இச்சம்பவம் நேற்றுக்காலை நல்லூர் கோவில் வீதியில் இடம்பெற்றுள்ளது.

இதில் கொழும்புத்துறை பகுதியைச் சேர்ந்த இரண்டு பிள்ளைகளின் தந்தையான 75 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,18,33)

## வடக்கில் நேற்று...

யப்பட்டுள்ளன.

அவர்களில் வடக்கு மாகாணத்தில் இரண்டு பேருக்குத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலைத் தரப்புத் தகவல்கள் தெரிவித்துள்ளன.

இதன்படி, கிளிநொச்சி பூநகரி வலைப்பாட்டுப் பகுதியில் கொரோனாத் தொற்றாளருடன் நேரடித் தொடர்புடைய ஒருவருக்கும் மன்னார் ஆடைத் தொழிற்சாலையில் பணியாற்றும் ஒருவருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. (ம-3,18;316)

## வலிந்து...

ஈடுபட்டனர்.

இதன்போது கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கறுப்பு துணிகளால் கண்களை கட்டி முழங்காலில் இருந்து போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

தொடர்ந்து ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தினை அவர்கள் ஊடகங்களிற்கு வழங்கியிருந்தனர். (ம-3,100,316,350)

## சர்வதேச நீதிமன்...

இலங்கை தொடர்பான தீர்மானத்தின் உத்தேச வரைவு சர்வதேச நாடுகளுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ள நிலையில் அதன் உள்ளடக்கங்கள் குறித்த தகவல்கள் வெளியாகியுள்ளன.

இந்த வரைவில் தமிழர் தரப்பில் பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட சர்வதேச நீதிமன்றம் தொடர்பான விடயங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை.

உலக நாடுகளும் ஐ.நாவும் ஈழத் தமிழ் மக்களை தொடர்ந்து ஏமாற்றுவதாக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. (ம-3)

## இணை அனுசர...

இந்த அறிக்கையை பார்த்த பின்னர் இலங்கை அரசு விருந்துகளிலும், கொண்டாட்டங்களிலும் ஈடுபடும். இப்படியான அறிக்கைகள், போர்க்குற்றத்தில் துணிந்து ஈடுபடலாமென அரசுகளை உற்சாகப் படுத்தும் என கடுமையாக சாடியுள்ளார் தமிழ் மக்கள் தேசிய கூட்டணியின் தலைவர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன்.

ஜெனிவா தூதுக்குழுக்களிடையே இலங்கை சம்பந்தமாக கையளிக்கப்பட்ட "சீரோ" வரைவு தொடர்பாக தனது அபிப்பிராயத்தை தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்,

பிரதி ஒன்று மின்னஞ்சலில் எனக்கு அனுப்பப்பட்டது. குறித்த வரைவானது குறைபாடு உள்ளதாகவும் ஏமாற்றம் தருவதாகவும் இருக்கின்றது. அதுவும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் காரியாலயத்தினதும் உயர்ஸ்தானிகர் பச்லெட் அவர்களினதும் சிபாரிசுகளுக்குக் குறைவாகக் குறித்த வரைவு காணப்படுவது மிகவும் மன வேதனை அளிக்கின்றது.

குறித்த வரைவு 30/1 தீர்மானத்தின் படிநிலைக்குக் கூட குறைவாக இருக்கின்றது. அத் தீர்மானமோ அதனுடைய குறைபாடுகளால்தான் தோல்வியடைந்தது. தமிழ் மக்களுக்குத் தேவையானதும் சர்வதேச சமூகம் எதிர்பார்ப்பதுமான குறிக்கோள்கள் சம்பந்தமாகப் பார்க்கும்போது இவ்வாறான ஒரு வரைவு இலங்கை அரசாங்கத்திற்கு முரணான ஒரு கருத்தைக் கொண்டு செல்வதாக அமைகின்றது. தாமதம் அடையும் நீதி மறுக்கப்பட்ட நீதியாகும். ஏற்கெனவே ஆறு வருடங்கள் சென்று விட்டன. இலங்கை அரசாங்கம் தான் செய்வதாகக் கூறியவற்றில் எதனையும் மனமுவந்து செய்யவில்லை.

இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் மனித உரிமைப் பேரவையின் உள்ளகக் குழுவானது வெகுஜன கொலையாளிகளையும் கற்பழிப்பாளர்களையும் பாதுகாக்கும் வண்ணம் இவ்வாறான ஒரு வரைவைத் தயாரித்தமை மனவேதனையையும் அதிர்ச்சியையும் அளிக்கின்றது. இலங்கை அரசாங்கத் தலைவர்கள் இது கண்டு விருந்துகளிலும் களியாட்டங்களிலும் ஈடுபடுவார்கள்.

இவ்வாறான வரைவானது போர்க் குற்றங்களையும் மனிதத்திற்கெதிரான குற்றங்களையும் இனப்படுகொலைகளையும் எந்தவிதப் பயமும் இன்றி இயற்றலாம் என்ற ஒரு கருத்தை உலகளாவிய அரசாங்கங்களுக்குக் கொடுப்பதாக அமையும்.

மனித உரிமைகள் சம்பந்தமாகவும் அடிப்படை நன்நடத்தை சம்பந்தமாகவும் கவனம் செலுத்தும் யாவருக்கும் இவ்வாறான ஒரு வரைபு மனவேதனையை அளிக்கும். பிரித்தானியா, கனடா, ஜேர்மனி, மொண்டிநீக்குறோ, மசிடோனியா வடக்கு ஆகிய உள்ளகக் குழு அங்கத்துவ நாடுகளின் தலைவர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். இவ்வாறான வரைவுகள் ஐக்கிய நாடுகளின் வருங்காலத்திற்கு நன்மை பயக்காது என்பதை நாம் உணர வேண்டும் என்றார். (ம-3)

## கொரோனா...

மேலும் நாட்டில் நேற்றும் +528 பேர் தொற்றுக்குள்ளாகியுள்ளனர். (ம-3)

## தமிழர்களின்...

இரா.சம்பந்தன் தெரிவித்துள்ளார்.

புதிய அரசியலமைப்பு உருவாக்கல் பணிகளுக்காக நியமிக்கப்பட்டுள்ள நிபுணர் குழுவுக்கும் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முற்பகல் இடம்பெற்றது.

இந்த சந்திப்பானது கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது.

இதன்போது, புதிய அரசியலமைப்பு உருவாக்கலுக்காக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் முன்வைக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது.

"தமது கௌரவத்தை, நீதியை பாதுகாப்பதற்கு ஆட்சியதிகாரம் தமிழர்களின் கைகளில் இருக்க வேண்டும்.

எங்களது சுயநிர்ணய உரிமை, உள்ளக சுயநிர்ணய உரிமை மதிக்கப்பட வேண்டும் என்பதை நாம் வலியுறுத்தியுள்ளோம்" என இரா.சம்பந்தன் தெரிவித்தார்.

மேலும் நாட்டின் தேசியப் பிரச்சினைக்கு தீர்வாக 87ஆம் ஆண்டுக்கு பின்னர் அர்த்தமுள்ள அதிகாரப் பரவலுக்கான பல இணக்கப்பாடுகள் காணப்படுகின்றன. அவற்றை அமுல்படுத்தினால் இணைந்து செயற்பட தயார்" என வலியுறுத்தியுள்ளதாக பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார். (ம-3)

## தான்தோன்றித்...

எதையும் தெரிவிக்கவில்லை என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

சுகாதார அமைச்சினால் நியமிக்கப்பட்ட குழுவின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, கொரோனா தொற்றில் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய முடியும் என தான் கருத்து வெளியிட்டதாக அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## யுத்த காலத்தில்...

னையை வழங்கும் நோக்கில் ஏற்கெனவே உயர் நீதிமன்ற நீதிபதி தலைமையிலான விசாரணை ஆணைக்குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ம-3)

## யாழ்.பல்கலைக்...

பூர்வமாகக் கையளிக்கும் நிகழ்வு நாளை மறுதினம் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பி.ப 4.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

இந்த நிகழ்வில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் அலைனா பி ரெப்லிற்ஸ் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளவுள்ளார். (ம-3)

### மெகா பவர்

திகதி 20/02/2021 · சீட்டிழுப்பு இலக்கம் 0771

V 13 11 23 43 76

### மஹஜன சம்பத

திகதி 2021/02/20 · சீட்டிழுப்பு இலக்கம் 4404

K 2 0 0 0 3 8

### கொவிசெத — உத்தியோகபூர்வ முடிவுகள்

சீட்டிழுப்பு திகதி 20.02.2021 · சீட்டிழுப்பு இலக்கம் 2699

T 14 49 59 78

### ஜாதிக சம்பத

சீட்டிழுப்பு திகதி 20/02/2021 · சீட்டிழுப்பு இலக்கம் 1098

6 6 9 0 9 6

### தன நிதானய

திகதி - 2021.02.20 · சீட்டிழுப்பு இலக்கம் - 441

S 10 11 16 78

### சம்வர்தன வாசனாவ — உத்தியோகபூர்வ முடிவுகள்

வெற்றி வாரம் 412 · திகதி 20.02.2021 · வர்ணம் சிவப்பு

E 02 39 60 · 4

எதிர்வரும் சுப்பர் பரிசுத்தொகை ரூ. 10,137,144

### SUPER BALL

சீட்டிழுப்பு வாரம் 1374 · நிறம் கடும் நீலம் · சீட்டிழுப்பு திகதி 20/02/2021 · தினம் சனிக்கிழமை

S 21 32 58 63

அடுத்த சுப்பர் ஜக்பொட் 70,008,171/=

### ராசி

சுப்பர் ஜக்பொட் 2,000,000/= · திகதி: 20.02.2021 · வெற்றி வாரம்: 3081 · வர்ணம்: இள நீலம்

கன்னி 12 38 40 58

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 12,021,720

### அத கோடிபதி

சீட்டிழுப்பு இல: 1200 · வர்ணம்: மஞ்சள் · சீட்டிழுப்பு திகதி: 20.02.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 110,169,460

02 50 58 70 L

### சனிதா

சீட்டிழுப்பு இல: 3530 · வர்ணம்: பச்சை · சீட்டிழுப்பு திகதி: 20.02.2021

இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 33,699,983

15 25 39 74 Q

### சசிரி

சீட்டிழுப்பு வாரம் 054 · சீட்டிழுப்பு திகதி 20.02.2021

வெற்றி இலக்கங்கள் 01 12 26

வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,466,240/=

# அரசுடன் தொடர்ந்து பயணிக்க முடியுமா என உறுதியாக கூற முடியாது

## அமைச்சர் விமல் வீரவன்ச

"நான் ஒருபோதும் அரசை விட்டு வெளியேறப் போவதில்லை. ஆனால், அரசு என்னை நீக்கி விடுமா என்பதை உறுதியாகக் கூற முடியாது." - இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பங்காளிக் கட்சியான தேசிய சுதந்திர முன்னணியின் தலைவரும் அமைச்சருமான விமல் வீரவன்ச தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் தலைவராக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச நியமிக்கப்பட வேண்டும் என்ற அவரின் கருத்து, கட்சிக்குள் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள நிலையில், கொழும்பில் நிகழ்வொன்றில் கலந்துகொண்டபோது ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்குப பதில் அளித்த அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து அரசுடன் இருப்பீர்களா? என அவரிடம் கேட்கப்பட்டபோது, குழப்பம் அடைந்து முடிவுகளுக்கு வரக்கூடாது என்று கூறிய விமல் வீரவன்ச, தற்போதைய அரசு ஆரோக்கியமான முறையில் முன்னோக்கிச் செல்லும் எனத் தான் நம்புகின்றார் எனவும் குறிப்பிட்டார்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் தொடர்பில் கேட்கப்பட்டபோது, "நான் பாராளுமன்ற உறுப்பினர்கள் மீது குறை கூற மாட்டேன். அவர்களுக்கு எவராவது அந்தப் பொறுப்பை வழங்கி இருக்கலாம்" என்றார்.

தேசிய வளங்கள் விற்பனை செய்வதற்கு எதிராகத் தான் செயற்பட்டமை இதற்குக் காரணமாக இருக்கலாம் எனத் தெரிவித்த அவர், இருப்பினும் தான் அரசியலுக்குப் பிரவேசித்தது முதல் தேசிய வளங்கள் குறித்து அக்கறையுடன் செயற்பட்டு வருகின்றார் எனவும் மேலும் கூறினார். (ம-03)

# காடுகளை வெட்ட எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை

## ஜனாதிபதி கோட்டா

(கொழும்பு)

காடுகளை வெட்ட எவருக்கும் அனுமதி வழங்கப்படவில்லை என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ச தெரிவித்துள்ளார்.

கிராமத்துடன் உரையாடல் நிகழ்ச்சி திட்டத்தின் 11ஆவது கட்டம் புத்தளம், கருவலகஸ்வெவ பிரதேசத்தில் நேற்று நடைபெற்றதுடன் அதில் கலந்துகொண்டு கருத்து வெளியிடும் போதே ஜனாதிபதி இதனை கூறியுள்ளார்.

இந்த நிகழ்ச்சி திட்டத்திற்கு எதிராக பலர் இருக்கின்றனர். அவர்களுக்கு இதில் உள்ள தவறான பக்கங்கள் மாத்திரமே தெரிகின்றன. நாட்டின் அரச தலைவர் சென்று மக்களை சந்தித்து உரையாடும் போது அவர்களுக்கு சந்தர்ப்பம் இல்லாமல் போகும் என்ற அச்சம் இருக்கலாம்.

அஞ்சும் போது தொடர்ந்தும் அதனை செய்து அச்சமூட்ட வேண்டும். அதுதான் வழிமுறை. அத்துடன் நான் கூறுவதை தவறாக அர்த்தப்படுத்துகின்றனர். நான் சென்ற அனைத்து இடங்களிலும் காணி பிரச்சினைகள் பற்றி கூறினார்கள். பாரம்பரிய விவசாய நிலங்களை வன பாதுகாப்பு மற்றும் வனஜீவராசிகள் திணைக்களம் என்பன ஏதோ ஒரு குறைப்பாடு காரணமாக எல்லைகளை வரையறுத்து பாரம்பரிய விவசாய நிலங்களை கைப்பற்றியுள்ளன.

இதனை அனைத்து இடங்களிலும் கூறினார்கள். இதனால், விவசாயம் செய்த காணிகளில் விவசாயம் செய்ய இடமளிக்குமாறு நான் கூறினேன். இதனை ஏன் புரிந்துக்கொள்ளாமல் இருக்கின்றனர் என்பது எனக்கு தெரியவில்லை. காடுகளுக்கு சென்று காடுகளை அழிக்க அனுமதி வழங்கவில்லையே என்றார். (ம-03)


### ஊர்க் கோழிக்குஞ்சு விற்பனைக்கு

3 கிழமை நிரம்பிய ஊர்க்
கோழிக் குஞ்சு உடன் விற்பனைக்கு.
(கழுத்து வெட்டியும் உண்டு.)
(5858)
077 477 5603

### காணி விற்பனைக்கு

பருத்தித்துறை நகருக்கு அண்மையில் (C-1500)
தும்பளை வீதிக்கு அருகில் உட்புறமாக
2 1/4 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.
077 436 6704, 077 179 1963

### பெண் வேலையாள் தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும்
நிறுவனம் ஒன்றிற்கு
பெண் வேலையாட்கள்
தேவை. (5857)
077 408 8241

### 31ஆம் நாள் நினைவு அழைப்பு



கடந்த 24.01.2021 ஞாயிற்றுக்கிழமை
இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவி
அமரர். கந்தையா இராசம்மா
அவர்களின் சிவபதப்பேறு குறித்த
அந்தியேட்டிக் கிரியை இன்று
(21.02.2021) ஞாயிற்றுக்கிழமை
கீரிமலை தீர்த்தக் கரையிலும்
வீட்டுக்கிருதியை (23.02.2021)
செவ்வாய்க்கிழமை அன்று மதியம்
எமது இல்லத்திலும் நடைபெற
வுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள்
குடும்பசகிதம் வருகைதந்து
அன்னாரின் ஆத்ம சாந்திக்காக
பிரார்த்திப்பதுடன்
மதியபோசனத்திலும் கலந்து
சிறப்பிக்குமாறு உற்றார்,
உறவினர், நண்பர்கள்
அனைவரையும் தனிப்பட்ட
அழைப்பாக ஏற்றுக்கொள்ளுமாறு
அன்புடன் அழைக்கின்றோம்.
(C-1477)
குடும்பத்தினர்
கணுக்கேணி கிழக்கு,
முள்ளியவளை.
077 288 0773
சிவலிங்கம் (ஓய்வுநிலை அதிபர்)
(மு/வித்தியானந்தா கல்லூரி)

### வேலையாட்கள் தேவை

பளையில் இயங்கும் சிறிய கைத்தொழிலகத்திற்கு
தச்சுவேலை தெரிந்தவர்கள் தேவை.
◆ சிரட்டை, ஈர்க்கு
கொள்வனவு செய்யப்படும்.
◆ விளக்குமாறு, அகப்பை, திருவு
பலகை விற்பனைக்கு உண்டு.



(5851)
077 210 5286, 077 559 1778

### மணமகன் தேவை

யாழ்ப்பாணம், 1994, கௌரவ
குடும்பம், Degree ஆசிரியர்
(தனியார்), Hindu, அழகிய மண
மகளுக்கு Sri Lanka or Foreign
மணமகன் தேவை.
(5857)
077 408 8241

### வேலை வாய்ப்பு

அதிகூடிய வருமானத்தை பெறுவதற்கும் உரிய பதவிகளை வகிப்பதற்கும் உலகெங்கும் சுற்றுலா செல்லவும் உங்களுக்கு விருப்பமா?
அப்படியானால் நீங்கள் LOLC உடன் இணையுங்கள்...
கோண்டாவிலில் அமைந்துள்ள LOLC நிறுவனத்திற்கு
கீழ்வரும் வேலை வாய்ப்புக்கள் உள்ளன.
Cluster Manager, Team Manager / Agency Team Manager, Financial Planner, Senior Financial Planner, Financial Planning Consultant
அடிப்படை தகைமையாக
க.பொ. த. சாதாரண தர பரீட்சை சித்தி கொள்ளப்படுகிறது.
(5853)
076 882 0551

### விரைவு பொதிகள் சேவை

V2 TRAVELS
UK-1000/=Kg
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவீஸ் 1150/=Kg
எமது நேரடிக்கிளைகள்
● யாழ்ப்பாணம் ● புத்தூர் ● கோப்பாய்
● நெல்லியடி ● கொடிகாமம் ● மானிப்பாய்
● புதுக்குடியிருப்பு ● சுன்னாகம் ● கிளிநொச்சி
● பருத்தித்துறை ● வல்வெட்டித்துறை ● சாவகச்சேரி
(C-1456)
0768226240 DHL

### கொக்குவில் இந்துக் கல்லூரி
### பழைய மாணவர் சங்கம்
### (தாய்ச் சங்கம்)

வருடாந்த பொதுக்கூட்டமும் 2021-2022 காலப்பகுதிக்கான நிர்வாக சபை தெரிவிற்கான வாக்கெடுப்பும்

எதிர்வரும் 28.02.2021 ஆம் திகதி நடைபெறவிருந்த கொக்குவில் இந்துக் கல்லூரி பழைய மாணவர் சங்க (தாய்ச் சங்கம்) வருடாந்த பொதுக்கூட்டமும் 2021 / 2022 காலப்பகுதிக்கான நிர்வாக சபை தெரிவிற்கான வாக்கெடுப்பும் கல்வி அமைச்சின் COVID- 19 அறிவுறுத்தலின் பிரகாரம் குறித்த தினத்தில் நடைபெறாது என்பதனை அறியத்தருவதோடு வருடாந்த பொதுக்கூட்டமும் 2021 / 2022 காலப்பகுதிக்கான நிர்வாக சபை தெரிவிற்கான வாக்கெடுப்பும் நடைபெறும் திகதி தொடர்பாக பின்னர் அறியத்தரப்படும் என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றோம்.

வி. தயாபரன்
செயலாளர்
(C-1498)

### வேலையாட்கள் தேவை

ஹோட்டல் ஒன்றிற்கு பின்வரும்
வேலையாட்கள் தேவை.
இருபாலாரும்
1. சப்ளேயர் (வெயிட்டர்)
2. சமையல் உதவியாளர்
3. சகல சமையலும் நன்கு தெரிந்தவர்.
(5856)
077 545 6420
077 548 8044

### சோபா கிளீனிங்

சோ (F) பாக்கள், அலுவலக
கதிரைகள் மற்றும் மெத்தைகள்
என்பனவற்றை நவீன இயந்திரங்கள்
மூலம் கறை நீக்கி புதுப்பொலிவு
பெற அழையுங்கள்.
(5836)
Mr. Tidy
077 224 2787

### வீடு வாடகைக்கு

ARK மடத்திற்கு முன்னால் KKS வீதி, உடுவில் மகளிர் கல்லூரிக்கு அண்மையில் 4 அறை, 2 குளியல் அறை, சமையல் அறை, பெரிய விறாந்தை, 4 வாகனங்கள் நிறுத்தக்கூடிய தரிப்பிடம் கொண்டவீடு வாடகைக்கு உண்டு. வியாபார நோக்கத்திற்கோ அல்லது வசிப்பிடத்திற்கோ உகந்தது.
(3842)
071 628 6612
075 272 4888

### அன்னா EXPRESS

விரைவுப் பொதிகள் சேவை
3-6 நாட்கள்
லண்டன் 1000/=
070 3305500
075 3305500
(C-1418)
976, கே.கே.எஸ் வீதி நாச்சிமார்கோவிலடி யாழ்ப்பாணம்
சங்கானை ஆவரங்கால் நெல்லியடி சங்கத்தானை
பளை கிளிநொச்சி புதுக்குடியிருப்பு முல்லை
மல்லாவி மன்னார் வவுனியா கொழும்பு
லண்டன், பிரான்ஸ், ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /= பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும். (யாழ் மாவட்டம் முழுவதும்)

விலை : 30.00
Registered as a Newspaper in Srilanka
வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 297
Viber 076 636 3378
வள்ளுவர் ஆண்டு 2052 21.02.2021 தொலைபேசி : 021 222 3378




# அச்சமில்லை... அச்சமில்லை...



உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில ஆலடி மாநாடு கூடியது. மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

என்ன மூப்பர் மாஸ்க்கைக் கழற்றிப் போட்டு இருக்கிறியள். கொரோனாத் தொற்று இல்லாமல் போயிற்றுதோ விதானையார் விசுவலிங்கம் கேள்வி எழுப்பினார்.

**மூப்பர்:** விதானையார் இப்ப கொரோனாத் தொற்று ஆருக்கு இருக்குது, ஆருக்கு இல்லை எண்டு சொல்லுங்க பார்ப்பம்.

ஒரு குத்துமதிப்பில கொஞ்சப் பேரை எடுத்து பி.சி.ஆர். செய்தால் அதில இரண்டு பேருக்கு எண்டாலும் கொரோனா இருக்கத்தானே செய்யுது.

**கங்காணி:** மூப்பர் சொல்லுறதிலும் நியாயம் இருக்கத்தான் செய்யுது. எங்களுக்கு பி.சி.ஆர். பரிசோதனை செய்யாததால நாங்கள் கொரோனா இல்லை எண்டு நிம்மதியாக இருக்கிறம்.

வேணுமெண்டால் கல்வித்துறை சார்ந்த கொஞ்சப் பேரை எழுமாறாக எடுத்துச் சோதிச்சுப் பாருங்க. அதிலும் இரண்டு, மூன்று பேர் கொரோனாத் தொற்றுக்கு ஆளாகி இருப்பினம்.

**விதானையார்:** இப்ப கொரோனாவின்ர தாண்டவம் வடபகுதியில தானே.

**சாத்திரியார்:** ஏதோ கடவுள்தான் எங்களைக் காப்பாற்ற வேணும்.

**சிறாப்பர்:** அதுசரி, இந்தியாவில ஆளும் கட்சியாக இருக்கிற பாரதிய ஜனதாக் கட்சி இலங்கையிலும் செயற்படப் போகுதாம்.

**விதானையார்:** அப்படி நடந்தால் அதுவும் ஆச்சரியப்படுகிறதுக்கு இல்லை.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைப் பொறுத்தவரை அவர் ஒரு பலமான தலைவர் மட்டுமல்ல இந்தியாவின்ர அண்டை நாடுகளை எப்படி தன்ர கட்டுப்பாட்டில வைத்திருக்கிறதெண்ட திட்டங்களும் அவரிட்ட இருக்குது.

**பண்டிதர்:** ஒரு பெரிய விடயத்தை எங்கட விதானையார் வலு சிம்பிளாச் சொல்லிப் போட்டு இருக்கிறார்.

பிரதமர் நரேந்திர மோடியைப் பொறுத்த வரை இலங்கையானது இந்தியாவின்ர பூரண கட்டுப்பாட்டிற்குள்ள இருக்க வேணும். அப்பதான் இந்தியாவின்ர பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படும். அதற்கான வேலைத் திட்டங்கள் நடந்து கொண்டுதான் இருக்குது.

**விதானையார்:** சாத்திரியார் எங்கட பிரச்சினையில இந்தியாவின்ர தலையீடு என்பது எங்களுக்கானதல்ல. இந்தியாவுக்கும் அதில சிலபல நன்மைகள் இருக்க வேணும்.

இப்ப பார்த்தியள் எண்டால், இலங்கையில போர் முடிந்த கையோட சீனா உள்நுழைஞ்சிட்டுது. சீனாவுக்கு இவ்வளவு தூரம் இலங்கை அரசாங்கம் இடம் கொடுக்குமெண்டு இந்தியா இம்மியும் எதிர்பார்த்திருக்க ஆக வேணும். இதற்கு மேலாக யாழ்ப்பாணத் தீவுகளிலும் சிலவற்றை இந்தியா எடுத்துக் கொள்ளும். இப்படிப் பார்க்கக்கில தான் இலங்கையில பாரதிய ஜனதாக் கட்சியின்ர உற்பவம் சாத்தியப்படும் போல தெரியுது.

**வாத்தியார்:** பண்டிதர் சொல்லுறதைப் பார்க்கும் போது தான் சில விடயங்கள் பற்றி நாம சிந்திக்க வேண்டியிருக்குது.

**கங்காணி:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.



## பாரதிய ஜனதாக் கட்சி இங்கும் கால்பதிக்குமா?

**மூப்பர்:** அதுதானோ யாழ்ப்பாணத் தீவுகளை எங்களுக்குத் தாங்க எண்டு இந்தியாவும் சீனாவும் போட்டி போடுகினம்.

**சாத்திரியார்:** நீங்கள் இப்படிச் சொல்லுறியள். அப்ப ஏன் இதுவரைக்கும் தமிழ் மக்களின்ர பிரச்சினைக்குத் தீர்வைப் பெற்றுக் கொடுக்க இந்தியா விரும்பவில்லை?

வில்லை. இப்ப இலங்கையில இருந்து சீனாவை வெளியேற்றிப் போட்டு, இலங்கையைத் தன்ர கட்டுப்பாட்டிற்குள்ள கொண்டு வருவதுதான் பிரதமர் மோடியின்ர மாஸ்டர் பிளான்.

**மூப்பர்:** தெரியாமல் தான் கேட்கிறன் அது நடக்குமோ.

**பண்டிதர்:** ஏன் நடக்காது. கிழக்கு முனையம், மேற்கு முனையம் இதில ஏதாவது ஒண்டை இந்தியாவ 5க் கொடுத்தே

**வாத்தியார்:** இலங்கைக்கு விஜயம் செய்த இந்தியப் பிரதமர் மோடி யாழ்ப்பாணத்திற்கும் மலையகத்திற்கும் விஜயம் செய்வதில மிகுந்த ஆர்வம் காட்டினவர். மலையகத் தமிழ்மக்கள் மீது அவர் தனது அன்பை வெளிப்படுத்தியிருந்தார்.

இலங்கையில பாரதிய ஜனதாக் கட்சியை ஆரம்பிக்கிறதுக்கு மலையகத் தமிழ்மக்கள் நல்லதொரு களம்தானே.

**சாத்திரியார்:** அதுவும் சரிதான். இந்தியா இனியொரு இந்து நாடாகத்தான் இருக்கும்.

இந்துத்துவம் தான் அங்க ஆட்சி செய்யும். இதில எந்த மாற்றமும் இல்லை.

**சிறாப்பர்:** என்ன சாத்திரியார் சோதிடத்தின்ர கணிப்பில சொல்லுறியளோ அல்லது அரசியல் பார்வையில கூறுகிறியளோ.

**சாத்திரியார்:** இந்து சமயம் தவிர்ந்த ஏனைய சமயங்கள் எல்லாம் மதம் பரப்பிறதில மிகத் தீவிரமாக ஈடுபட்டுள்ளன.

இந்த நிலையில மதச்சார்பற்ற நாடாக இந்தியா இருக்க, அங்க மத மாற்றம் பல்கிப் பெருகுது.

இதால இந்துத்துவம் சார்ந்த பாரதிய ஜனதாக் கட்சியும் சிவ சேனையும் களத்தில இறங்கி இந்தியாவில இந்து மதம் அழியப் போகுது எண்ட எச்சரிக்கையை விடுத்தினம்.

அவர்களின்ர எச்சரிக்கையில நியாயம் இருப்பதை கோடிக்கணக்கான இந்துக்கள் உணர்ந்து கொண்டனர். அதின்ர விளைவுதான் இரண்டாவது தடவையும் நரேந்திரமோடி இந்தியாவின் பிரதமராகத் தெரிவு செய்யப்பட்டிருக்கிறார்.

**வாத்தியார்:** ஓ! இலங்கையிலும் இந்து சமயம் படாப்பாடு படுகுது. இதுபற்றியெல்லாம் பிரதமர் மோடி கவனம் செலுத்தாமல் இருக்க மாட்டார்தானே.

**விதானையார்:** அவர் கவனம் செலுத்தினாலும் இலங்கையில இருக்கிற இந்து அமைப்புக்கள் இந்தியாவோட நெருங்கிய தொடர்பை ஏற்படுத்த வேணும்.

உண்மையில இந்தியப் பிரதமராக மோடி இருக்கிறபோது இங்க இருக்கிற இந்து அமைப்புக்கள் களமிறங்கினால், இனப்பிரச்சினைக்கான தீர்வும் சாத்தியமாகும்.


**பண்டிதர்:** அப்ப இதுவிடயத்தில எங்கட இந்து அமைப்புக்களை உசார்படுத்த வேணும்.

இப்படிப் பண்டிதர் சொல்ல, அதனை ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# ஐ.நாவின் பிடிக்குள் இலங்கை-மியன்மார்





இலங்கை விவகாரம் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் இம்முறை கூட்டத்தில் தீவிர கவனம் செலுத்தப்படும் ஒன்றாக மாறியுள்ள நிலையில் தான், மியன்மாரில் இராணுவப் புரட்சி ஏற்பட்டிருக்கிறது.

ஆங் சான் சூகியின் தலைமையிலமைந்த ஆட்சியை அகற்றி விட்டு, இராணுவத் தளபதி தன்னைத் தானே ஆட்சியாளராக அறிவித்திருக்கிறார்.

மியன்மாருக்கு இராணுவ ஆட்சி புதியதல்ல. எனினும், அங்குள்ள மக்கள் முன்னரைப் போல இராணுவ ஆட்சியை சகித்துக் கொண்டு வாழ முனையவில்லை.

நாட்டின் தலைநகர் நேபிடோவிலும் யாங்கூனிலும் மற்றும் பிற பகுதிகளிலும் நடக்கும் மக்கள் போராட்டங்கள், இராணுவ ஆட்சிக்கு கடுமையான அழுத்தங்களைக் கொடுக்கத் தொடங்கியிருக்கிறது. அதனை விட, அங்கு நடக்கும் போராட்டங்கள் சர்வதேச கவனத்தையும் ஈர்க்கும் வகையில் அமைந்திருக்கிறது.

பொதுவாகவே கேந்திர முக்கியத்துவம் மிக்க நாடுகளில், ஜனநாயகம் பலவீனப்படும் போது, மேற்குலக நாடுகளும் மனித உரிமை அமைப்புகளும் மற்றும் ஐ.நாவும் அதில் தலையீடு செய்வது வழக்கம்.

2009இல் போர் முடிவுக்கு வந்த போதே, இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றன என்பது சர்வதேச சமூகத்துக்கு நன்றாகத் தெரியும்.

ஆனால், அப்போது இலங்கைக்கு எதிராக நகர்வுகளை மேற்கொள் வதற்கு எல்லாத் தரப்புகளும் தயங்கின.

அதனால் தான், இலங்கைக்கு எதிராக கொண்டு வரப்பட்ட தீர்மானம், தோற்கடிக்கப்பட்டு இலங்கைக்கு ஆதரவான தீர்மானமாக மாறியது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கம் தனது வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறியதுடன், சீனாவின் பக்கமும் சாயத் தொடங்கியது.

அது சர்வதேச அரங்கில் இலங்கை மீதான பொறுப்புக்கூறல் அழுத்தங்கள் தீவிரம் பெறுவதற்கு காரணமாகியது.

புவிசார் அரசியல் தான் இவ்வாறான நகர்வுகளில் முக்கியத்துவம் பெறுகிறது.

மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தின் போக்கும், சீனாவின் நகர்வுகளும் தான், ஜெனிவாவை மையப்படுத்திய நகர்வுகளின் பிரதான காரணியாக இருந்தது.

ஆனால், போரில் பாதிக்கப்பட்டவர்களுக்கான நீதியும் பொறுப்புக்கூறலும் நல்லிணக்கமும் மற்றும் மனித உரிமைகளுமே அங்கு முக்கியத்துவப்படுத்தப்பட்டன. அவை துணைக் காரணிகளே தவிர, பிரதான காரணிகள் அல்ல. இவ்வாறான பின்புலத்தில் இருந்து தான், தற்போதைய சூழலை அவதானிக்க வேண்டும்.

தற்போது மீண்டும், ராஜபக்ஷ வினரின் அரசாங்கம் பதவிக்கு வந்திருக்கிறது. வழக்கம் போலவே சீன சார்பு நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டும் செயற்படுகிறது.

இந்தநிலையில் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிரான நகர்வுகளை மேற்குலக நாடுகள் தீவிரப்படுத்துவதில் ஆச்சரியமில்லை.

தாங்கள் எப்போதெல்லாம் ஆட்சிக்கு வருகிறோமோ அப்போதெல்லாம் மனித உரிமை குற்றச்சாட்டுகளை மேற்குலக நாடுகள் முன்வைக்கின்றன என்று பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கூறியிருக்கிறார்.

ஆனால், இது ராஜபக்ஷவினரை இலக்கு வைத்த நகர்வுகள் அல்ல. அவர்களின் அணுகுமுறைகள் மற்றும் கொள்கைகளை அடிப்படையாக கொண்டவை.

அதேவேளை, நடுநிலை என்ற போர்வைக்குள் இருந்து கொண்டு, மேற்குலக, இந்திய விரோத நிலைப்பாட்டை முன்னெடுத்துச் செல்வதும், சீன சார்பு நிலைக்குள் இருந்து கொண்டு பாதுகாப்புத் தேட முனைவதும் த்ான் இலங்கையின் இந்த நிலைக்குக் காரணம்.

தற்போதைய அரசாங்கம் சீனா, பாகிஸ்தான், ரஷ்யா, கியூபா போன்ற நாடுகளின் துணையுடன் சர்வதேச அரங்கில் தன்னைக் காப்பற்றிக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கையில் இருக்கிறது.

இவ்வாறான நிலையும் கூட, இலங்கைக்கு எதிரான நகர்வுகளை மேலும் தீவிரப்படுத்தி வருகிறது. புவிசார் அரசியல் ரீதியாக இலங்கையின் அமைவிடமும், அரசியல் நகர்வுகளும், ஜெனிவாவில் இலங்கை அரசாங்கத்துக்கு நெருக்கடிகளைத் தீவிரமாக்கி வருகிறது.

இந்தநிலையில், புதிய தீர்மானத்தை ஜெனிவாவில் முன்வைப்பதை அனுசரணை நாடுகளின் குழுவின் சார்பில் பிரித்தானிய பிரதிநிதி ஜூலியன் பிரைத்வெய்ட் உறுதிப்படுத்தியிருக்கிறார். அதுமாத்திரமன்றி, இந்த அரங் கிற்குள் அமெரிக்காவும் நுழையப் போகிறது.

மீண்டும் கண்காணிப்பாளராக ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் இணைந்து கொள்ளவிருப்பதாக அமெரிக்க இராஜாங்கச் செயலர் அன்ரனி பிளிங்கன் தெரிவித்திருக்கிறார்.

ஆக, இலங்கை விவகாரம் வரும் கூட்டத்தொடரில் முக்கியத்துவம் மிக்க ஒரு பிரச்சினையாக மாறும் அறிகுறிகள் தென்படுகின்றன.

இந்தச் சூழலில் தான், மியன்மாரின் ஆட்சிக்கவிழ்ப்பு நடந்திருக்கிறது. அங்கு ஜனநாயகத்துக்கு பாரிய அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளது. இராணுவ ஆட்சி மக்களின் பிரதிநிதிகளை சிறைபிடித்துள்ளது.

இவ்வாறான நிலை ஏற்பட்டுள்ளமை சர்வதேச கவனத்தைப் பெற்றுள்ளதானது, ஜெனிவாவில் இலங்கை விவகாரத்தின் மீதான கவனத்தைக் குறைத்து விடுமோ என்ற கவலையும் பலரிடத்தில் தோன்றியிருக்கிறது.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவை என்பது பல நாடுகளின் விவகாரங்கள் குறித்துப் பேசப்படுகின்ற களமாக இருந்தாலும், அவ்வப்போது சில விவகாரங்கள் தீவிர கவனத்தைப் பெறுவது வழக்கம். சில சந்தர்ப்பங்களில், சில விவகாரங்களின் முக்கியத்துவத்தையும் இல்லாமல் செய்து விடும்.

உதாரணத்துக்கு போர் முடிவுக்கு வந்த பின்னர், இலங்கையின் மனித உரிமை மீறல்களுக்கு பொறுப்புக்கூறும் விவகாரம் தீவிரமாகப் பேசப்பட்டுக் கொண்டிருந்த போது, லிபியாவிலும், சிரியாவிலும் மூண்ட போர்கள் இந்த விவகாரத்தை திசை திருப்பின.



சிரியாவிலும், லிபியாவிலும் ஏற்பட்ட மனிதப் பேரவலங்களின் மீது சர்வதேச கவனம் குவிக்கப்பட்டதால், தமிழர்களுக்கான நீதி பற்றி குறைந்தளவு கவனமே செலுத்தப்பட்டது.

அவ்வப்போது இதுபோன்ற நிலை இலங்கை அரசாங்கத்தின் மீதான அழுத்தங்களைக் குறைத்திருக்கிறது. 'தலைக்கு வந்தது தலைப்பா கையு டன் போனது' போலவும் நடந்திருக்கிறது. மீண்டும் அவ்வாறான நிலை ஏற்படக் கூடிய வாய்ப்புகள் இருப்பதை மறுக்க முடியாது. ஏனென்றால் மியன்மாரின் ஜனநாயகம் மீது உலக நாடுகளுக்கு அதிக அக்கறை உள்ளது.

மியன்மாரில் இராணுவ ஆட்சி தொடர்ந்தால் பொருளாதார தடை விதிக்கப்படும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பிடன் எச்சரிக்கை விடுத்திருக்கிறார்.

எனவே மியன்மார் விவகாரத்தில் வரும் நாட்களில் ஐ.நாவினதும், சர்வதேசத்தினதும் தலையீடுகள் அதிகரிக்கும். அதுவும், மக்கள் போராட்டங்கள் அங்கு தீவிரம் பெற்று வருவது, சர்வதேச அளவிலான நெருக்கடிகளை தீவிரப்படுத்துவதற்கு வழிவகுக்கும் என்ற எதிர்பார்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

ஒரு நாட்டின் மீது சர்வதேச சமூகம் தலையிடுவதற்கு அடிப்படையான காரணிகள் அவசியம். அவ்வாறான அடிப்படைகளை ஏற்படுத்திக் கொடுப்பதில் மக்களின் போராட்டங்களும், பேரணிகளும் முக்கிய பங்கு வகிக்கின்றன.

அதாவது அரசுகளுக்கு எதிராக மக்கள் போராட்டத்தை நடத்துகிறார்கள். கிளர்ந்தெழுந்து எதிர்ப்பை வெளிப்படுத்துகிறார்கள் என்னும் போது, சர்வதேச அமைப்புகள் தமது நகர்வுகளைத் தீவிரப்படுத்தும்.

இலங்கை அரசாங்கத்துக்கு எதிராக முன்னெடுக்கப்படும் போராட்டங்களின் பின்னணி கூட அது தான். சர்வதேச அளவில் எடுக்கப்படும் தீர்மானங்களை வலுப்படுத்துவதற்கே இவ்வாறான போராட்டங்கள் இடம்பெறுகின்றன.

மியன்மாரில், மக்களின் போராட்டங்கள் தீவிரமடைந்து வரும் நிலையில், அங்குள்ள மக்களின் மனித உரிமைகள், ஜனநாயகத்துக்கான அச்சுறுத்தல் குறித்த கவலைகள் மீது சர்வதேசம் கூடுதல் கவனத்தை செலுத்த வேண்டிய சூழலை ஏற்படுத்தி வருகிறது. இது இலங்கையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கோரும் நடவடிக்கைகளில் தாக்கத்தைச் செலுத்தக் கூடும். பேரவையில் இலங்கை விவ காரத்தை முந்திக் கொண்டு மியன்மார் விவகாரம் முன்னிலைப்படுத்தப்பட லாம்.

'முந்தி வந்த செவியை பிந்தி வந்த கொம்பு மறைப்பதில்லையா?' அது போன்ற நிலை இலங்கைக்கும் ஏற்படலாம். ஆனாலும் இலங்கை மீதான அழுத்தமும் கவனமும் அதிகளவில் குறைவதற்கு வாய்ப்புகள் இருப்பதாக தெரியவில்லை.

ஏனென்றால் மியன்மாரைப்போலவே இலங்கையும் சர்வதேச சமூகத்துக்கு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு இடம் என்புதை மறந்து விட முடியாது.

நன்றி: இணையம்



# சிறுவர் அரங்கம்

## இன்னா செய்தாரை ஒறுத்தல்...

ஒரு கோவில் மண்டபத்தில் ஆன்மிகச் சொற்பொழிவாற்றிக் கொண்டிருந்த துறவியின் பேச்சுப் பிடிக்காமல், ஒருவன் ஒரு கல்லை அவர்மீது வீசினான், அக்கல் துறவியின் தலையில் பட்டுக் காயத்தை ஏற்படுத்தியது.

துறவியின் துன்பத்தைக் கண்ட மற்ற பக்தர்கள், எழுந்து ஓடி, அந்த இளைஞனைப் பிடித்துத் தாக்கத் தொடங்கினர்.

அதைக் கண்ட துறவி, அவனை அடிக்க வேண்டாம், அவனைத் தன்னிடம் அழைத்து வருமாறும் சைகை செய்தார்.

அவரது சொற்களுக்கு இணங்கிய பக்தர்கள், இளைஞனை மேடைக்கு இழுத்துச் சென்றார்கள்.

பயத்தோடு நின்ற அவனைப் பார்த்துச் சிரித்துக்கொண்டே துறவி, அருகில் வைக்கப்பட்டிருந்த தட்டிலிருந்த மாம்பழம் ஒன்றை எடுத்து அவனிடம் நீட்டினார், அவன் பயத்துடன் தயங்கினான்.

“அவனைத் தண்டிக்காமல் அவனுக்குப் பழம் தருகிறீர்களே சுவாமி.” என்று பக்தர்கள் கூச்சலிட்டார்கள்.

அவர்களை அமைதிப்படுத்திய துறவி, கூட்டத்தினரைப் பார்த்துக் கூறினார்.

“ஓரறிவு உடைய மரமானது தன்மீது கல் எறிபவனுக்கு பழத்தைத் தருகிறது. ஆறறிவு உடைய நான், எனக்குத் துன்பம் செய்தவனுக்கு ஏதேனும் நன்மை செய்ய வேண்டாமா?”

துறவி கூறியதைக் கேட்டவுடன் அவர் பாதங்களில் தடால் என்று விழுந்து அழுதான் அந்த இளைஞன்.



இன்னா செய் தாரை
ஒறுத்தல் அவர்
நாண நன்னயம் செய்து
விடல்" குறள்: 314

## மகா அலெக்சாண்டரின் வரலாறு

### சிரஞ்சீவி அலெக்சாண்டர்

123



அப்படியே செய்கின்றேன் மன்னா. கடற்படை வீரர்களை வழியனுப்பிவிட்டு தனக்குரிய படைகளுடன் புறப்பட்டார் அலெக்சாண்டர்.

கலகம் செய்தவர்களையெல்லாம் கபளீகரம் செய்யத் தொடங்கினார். துரோகம் செய்த தளபதிகளின் தலைகள் கொய்து எறியப்பட்டன.

ஒவ்வொரு நாடாகச் சென்று தாக்குதல் நடத்தி துரோகிகளை வீழ்த்தினார். எல்லா நாடுகளும் மீண்டும் அவருடைய கட்டுப்பாட்டுக்குள் வந்தன.

ஒருவழியாக மாசிடோனியப் படைகள் பாரசீகத்தை அடைந்தன. பாரசீக மக்கள் திரண்டு வந்து அலெக்சாண்டரைப் பார்த்தார்கள்.

சூசா என்கிற இடத்தில் நடைபெற்ற விழா ஒன்றில் பேசினார் அலெக்சாண்டர். அவரது பேச்சு கலப்புத் திருமணம் பற்றியதாக அமைந்தது.

கலப்புத் திருமணங்கள் மூலம் எல்லா மக்களிடமும் ஒற்றுமை மேம்படும். கலாசார உறவு ஏற்படும். உடனே பொதுமக்கள் அலெக்சாண்டரிடம் ஒரு கேள்வி கேட்டனர்.

தாங்கள் ஏன் பாரசீக மன்னன் டேரியஸின் மகள்களில் ஒருவரைத் திருமணம் செய்து கொள்ளக் கூடாது. பலமாகச் சிரித்தார் அலெக்சாண்டர்.

நான் திருமணமானவன். ராக்சேனா என்கிற அழகிய மனைவி எனக்கு இருக்கிறாள். பின்னர் எதற்காக மீண்டும் ஒருமுறை திருமணம் செய்துகொள்ள வேண்டும்.?

கலப்பு மணம் மூலம் கலாசார மேம்பாட்டுக்கு நீங்கள்தான் முன்னுதாரணமாக இருக்க வேண்டும்.

போரில் நீங்கள் முன்னால் செல்கிறீர்கள். களத்தில் நீங்களே முதலில் இறங்குகிறீர்கள். ஏன் இந்த விடயத்திலும் நீங்களே ஆரம்பப்புள்ளியாக இருக்கக்கூடாது?

யோசித்தார் அலெக்சாண்டர். சரி. கலப்புத் திருமணத்திற்கு நானே முதல் ஆளாக இருக்கிறேன். அலெக்சாண்டருக்கும் டேரியஸின் மகள் ஸ்டேடிராவுக்கும் திருமணம் நடந்தது.

(தொடரும்)



பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போராட்டத்தில் பங்கு கொண்டவர்களை விசாரணை செய்யும் படலம் ஆரம்ப மாகிவிட்டதே?






அழகான நினைவுகளை சுமந்து வாழும் வாழ்வு சொர்க்கம் தானே

**தாரா — இனுவில்**

**அழகான நினைவுகளை சுமந்து வாழும் வாழ்வு சொர்க்கம் தானே**

பிறர் அருவருக்கத் தக்கதாய் இருந்த மயிர்க் கொட்டி வண்ணத்துப் பூச்சியானதும் அதன் அழகும் ரசனையும் வேறாகிறது.

எங்கோ இருந்து பறந்து வந்து உறவு தந்தது. விரல் வரை வந்து வாழ்வில் வசந்தம் தந்தது. ஏனே அந்தப்பட்டாம் பூச்சி பறந்து விட அது விட்டுச் சென்ற நிறம் மட்டும் விரலிடுக்கில் எஞ்சிக் கிடக்க, வாழ்ந்த அந்த அழகான நினைவுகளை எண்ணி வாழ்வதில் சொர்க்கம் கண்டு வாழ்வதே உண்மையான அன்பின் அடையாளம்.

**பரா — யாழ்ப்பாணம்**

**தமிழரின் எதிர்காலம் எப்படியாக இருக்கப் போகிறது?**

அதை நினைத்துப் பயங்கொள்ளத் தேவையில்லை. எப்போதும் நீதிக்கு அழிவில்லை.

தமிழினம் நீதி தவறிச் செயற்படவில்லை. அதற்கு அழிவே இல்லை.

எவ்வளவுதான் தமிழினத்தை பாடுபடுத்தினாலும் அந்த இனம் அழிந்து விடும் என்று மட்டும் யாரும் நினைத்துவிடக் கூடாது.

இதைப் புரிந்து கௌ்ள வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரி.

**சிவன் — வடமராட்சி**

**தமிழருக்கு ஒரு நீதி சிங்களவருக்கு ஒரு நீதி என்பது சரியானதா?**

நீதி என்பது ஏழைக்கு ஒரு மாதிரியும் செல வந்தருக்கு வேறொரு மாதிரியும் அமைந்து விட்டால் அதன் பெயர் நீதி ஆகாது.

ஆட்சி அதிகாரங்கள் இருப்பதால் தமிழினத்தை பலவீனப்படுத்த நினைக்கிறது பேரினவாதம்.

அதற்காய் பெரும்பான்மைக்கு சலுகை வழங்கி சிறுபான்மைத் தமிழினத்திற்கு ஓரவஞ்சகம் செய்து வஞ்சிக்கிறது.

கடிகாரம் ஒரே மாதிரி ஓடும். காலம் அப்படி அல்ல என்பதை இவ்விடத்தில் அழுத்திப் பதிவிடுவதில் மகிழ்ச்சி.

**நேதாஜி — வதிரி**

**சணக்கியனைப் பார்த்து சிலர் பொறாமைப்படுகிறார்களே?**

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையிலான போராட்டத்தில் அதிகம் பேசப்பட்டவர்களில் ஒருவர் சாணக்கியன்.

தமிழினத்தின் விடிவுக்காக யார் செயற்பட்டாலும் இருகரம் கூப்பி வரவேற்கிறோம். இதுவே எமது நிலைப்பாடு.

ஏனென்றால் எமது நோக்கம் அரசியல் அல்ல, மக்களுக்கான விடுதலையே.

எதிர்ப்பவர்கள் அரசியல் வாதிகளாகத் தான் இருப்பார்கள்.

**சயன் — யாழ்ப்பாணம்**

**பொத்துவில் முதல் பொலிகண்டி வரை போராட்டத்தில் பங்கு கொண்டவர்களை விசாரணை செய்யும் படலம் ஆரம்பமாகிவிட்டதே?**

இது எதிர்பார்த்த விடயம் தானே. இதற்கு அதிர்ச்சியாகி பயனேதும் இல்லை.

மக்களின் அறவழிப் போராட்டத்தை அடக்க நினைப்பது எப்பேர்ப்பட்ட மனித உரிமை மீறல் என்பதைப் புரிந்து கொண்டால்– மனித உரிமைகளை மதித்து நடந்தால் இப்பேர்ப்பட்ட விசாரணைகள் நடைபெறாது.

ஆனால் விசாரணைகள் நடைபெறுகின்றன. நடக்கட்டும் என்ன நடக்கின்றது என்பதை பொறுத்திருந்து பார்ப்போம்.

**சுதன் — குப்பிழான்**

**இலங்கை தான் குற்றம் செய்யவில்லை என மார்தட்டி நிற்க காரணம் என்ன?**

ஒருவர் மற்றவர் மீது குற்றம் சுமத்தினால் முதலில் செய்ய வேண்டியது குற்றத்தை நிரூபிக்கச் சொல்ல வேண்டியதே.

அதைவிடுத்து நான் எந்தக் குற்றமும் செய்யவில்லை எனச் சொல்வது முறையன்று.

குற்றம் செய்யவில்லை என மறுக்கலாம். ஆனால் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்தால் அந்தக் குற்றத்தை செய்தவன் நானே என்ற முடிவுக்கே வரமுடியும்.

**தர்மி — விசுவமடு**

**யாராவது உங்களைத் தவறாக நினைத்தால் என்ன செய்வீர்கள் வியாசரே?**

காகம் திட்டி மாடு சாவதில்லை என்று ஒரு பழமொழி உண்டல்லவா. நாம் செல்லும் பாதை சரியானது என்றால் ஊர் என்ன பேசுகிறது, உலகம் எப்படி பார்க்கிறது எனும் கவலை மறந்து எமது பாதையில் சென்று கொண்டே இருக்க வேண்டும்.

எமது பாதையின் முடிவு நல்லதாக அமையும் போது ஏசிய உலகம் தலையில் தூக்கி வைத்துக் கொண்டாடும்.

அதனால் எமது பாதையில் சலனமின்றி நடைபோட வேண்டியதே தர்மம்.

**தமிழ் — யாழ்ப்பாணம்**

**குருந்தூர் மலையில் கிடைத்தது சிவலிங்கம் இல்லையாமே உண்மையா வியாசரே?**

தமிழர் பிரதேசங்களில் மட்டுமல்ல இலங்கையில் எங்கு தோண்டி என்ன வந்தாலும் அது பௌத்தத்திற்குரியதே. இது எழுதாத விதி அல்ல, எழுதப்பட்ட விதி.

அங்கு சிவலிங்கம் வந்தது. ஆனால் அது சிவன் இல்லை. இனி சிவன் உருவம் வந்தாலும் அது சிவன் அல்ல.

வேலை தொடங்கும் போதே பௌத்த சின்னத்தை வைத்து தொடங்கும் போது விளங்கவில்லையா உங்களுக்கு.



**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

# மறைக்கப்பட்ட உறவுகள்



கனவுகள் நோக்கி சென்ற தமிழனை
சிறகுகள் அடைத்து சிறையில் அடைத்தீரோ?

அலைகள் புரளும் கடலில் கூட
கரைக்க முடியுமோ எம் உறவுகளை

கண்ணீர் சொரியும் காலங்கள் நீண்டு
கண்ணில் குருதி நிறைந்தது இன்று

உடைமை கேட்கும் உலகம் தனில்- பிரிந்த
உறவுகள் கேட்கும் இனமே இது

தீர்வு கேட்ட மனுக்கள் இன்று
திண்ட கையின் அழுக்கை துடைக்குதோ?

வேதனை சூழ்ந்த தாயின் உணர்வு
தட்டிக் கேட்குமோ உறவின் விடிவை


மறைந்து கிடக்கும் ஈழ உறவு
விரைந்து வருமோ இக்கவியில்

ந.விதுஷன்
யா/ கற்கோவளம்
மெ.மி.த.க.பாடசாலை

# வெட்டும் இடமெல்லாம் வெளித் தெரிவாய்

**தி.சாந்தகுமார்**

குருந்தூர் மலையுறையும் சிவனே நின்னைக் கைகூப்பிக் கும்பிட்டு
வருந்தி அழைக்கின்றோம் எம்மருகே வருக- என்றும்
மருந்தாகிப் பிறவிப்பிணி அகற்றும் அப்பனே அருகே வந்து எம்மை
ஆற்றுப்படுத்திடுக ஐயனே எங்கெங்கு அகழ்ந்தாலும் என்றும்
ஈழத்தின் ஆழத்தில் எல்லாம் நீயே வருவாய்
பொங்கி மடைபரவி உன்னைப் பொலிவாக்குவோம் ஆதலால்
இங்கேயே தங்கி விடு தந்தையே
உந்தன் தொன்மையைக் காணச்சகியாதோர் சரியச்
சங்கெடுத்து ஊதிச் சங்காரம் செய்திடுக
கட்டுவாப்பிட்டி முதல் கந்தரோடை வரை
வெட்டும் இடமெல்லாம் வெளித்தெரிவாய் அப்பா
எட்டுத் திசைகளிலும் ஏறமர்ந்த எம்பிரானே
பட்டதுயரகற்றி எம் பாவங்களைப் பொடியாக்கு
உடுக்கை ஒலியோடு உருவேறும் உன் தாண்டவத்தில் இனி
வெடுக்குநாறி மலையினிலும் வெளிவருவாய் ஐயா
அடுக்கடுக்காய் இங்கு நீ மேலேறும் போதுதான் எம்மைத்
தடுக்கின்ற தடைகளெல்லாம் தகரும்
தமிழர் தம் வாழ்வு தடையுடைத்து நகரும்




# பரிதவிப்பு



காதல் என்ற மூன்றெழுத்தில்
கண்ணியமாய் கவரப்பட்டு
காத்திருந்து காத்திருந்து என்
மனம் கவி பாடுதையா!
கவிப்பாட்டினிலே கானக்குயில்கள் எல்லாம்
தாளம் போடுதையா
பழரசக் குவளையில் விழுந்த எறும்பினைப் போல்
என் மனம் துடிக்குதையா
சொல்லொணா வார்த்தையிலே என் மனம்
சொக்கித் தவிக்க ஏங்குதையா
காதல் என்ற அன்பு மழை என்மீதினில்
பூமழையாக சொரியக் காத்திருப்பேன்
நானும் யுகம் யுகமாய் என்னை
தேட வாருமையா?

ஏ.கண்ணிகை
புலோலி,
பருத்தித்துறை.

# மௌனத்தின் தேடல்- 516




## உணர்வற்றுப் போகிறது

உணர்வற்ற கைபேசியால்
உண்மை உறவை தூரமே தள்ளி
வெறும் வேசத்தோடு வெறுமையாய்
நொடியினில் பிடிப்பில்லாமல்
உணர்வற்றுப் போகிறது
நான் உன், நீ என்
மீது கொண்ட அன்பு

ம.சங்கரி,
கோண்டாவில் வடக்கு

# மௌனத்தின் தேடல்- 517



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி– சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## காதல் நாடகம்

ஒருவருக்கொருவர்
மனதில் அன்பின்றி
போலியாய்க் கட்டியணைத்தபடி
மறைவாய் செல்போன்
மோகத்தில் மூழ்கிக் கிடக்கும்
காதல் வேடதாரிகளே!
ஆம், நம் உலகில்
இன்று இப்படித்தான் சிலர்
காதலென்ற பெயரில்
நாடகமாடுகிறார்கள்

சு.ஜெயரூபன்
பருத்தித்துறை

## தூய காதல் எங்கே?

ஈருடல்களும் ஓர் உடலாய்
சங்கமிக்கும் வேளையில்
இருமனங்களும் கைபேசியில்
சங்கமிக்கும் மனங்களோ வேறு
இதுதான் நவீனக்காதலா?
காதலுக்கான புதிய அத்தியாயத்தை
எழுதவில்லை இவர்கள்
கலாசாரச் சாவுமணியின்
புதிய அத்தியாயத்தைச்
செதுக்குகிறார்கள்!

சண். தியாளேஸ்
நுணாவில் மத்தி

## அன்பின் தழுவல்

உயரிய காதல் தனை
உணர்ச்சி பொங்கிடச் செய்திடவே
அன்புத் தூறலிலே
ஆனந்த ஜாலங்கள் புரிந்திடவே
கட்டியணைத்து அன்புமழைதனில்
நனைந்திடும் பொழுதினிலே
உன் கையிலோ தொலைபேசி
என் கையிலோ திறன்பேசி
இரண்டும் சேர்ந்து கவிபாடிடவே நம்
பாசப்பிணைப்பானது
பரிதவித்திடும் வேளையினிலே
கலியுகக் காலத்தின் காலக்கேடா
என என் மனமானது சொல்லொணா
வார்த்தையிலே சொக்கித் தவிக்கின்றதே

ஆ.பாலமதுஜா
யா/ மெ.பெ.உ.பா

## களங்கம்

அறிவியல் ஆட்டத்தில்
காதலையே வென்றது
கைபேசி
ஆதலினால்
கட்டியணைப்பு இங்கே
தோல்வியானது

நல்லூர் தேன்நிலா

## காதல்

கண்ணொடு கண்
நோக்கின் காதல்
கருணையுடன் மண்ணில்
நிலைத்து மனிதம் வாழ
மலரும் வகை இயற்கையை
மதித்து சமூக நீதியுடன்
மலரும் அன்பு வாழட்டும் நீடு

செகதஸ்
கொக்குவில்

# வஞ்சிக்கப்படும் தமிழினம்!

"போர் முடிவுற்றுவிட்டது. பயங்கரவாதம் வேரோடு அழிக்கப்பட்டு விட்டது எனக் கூறுகிறது அரசு. ஆனால் தமிழர்களுக்கான அரசியல் தீர்வைத் தர இன்னும் தயாராக இல்லை என்பதே உண்மையானது."

பாவ புண்ணியம் என்பது எம் சைவத் தமிழ் மரபில் மிகவும் முக்கியமான இடத்தை வகிக்கிறது. வாழும் போது மனிதன் மற்றவருக்கு தீங்கிழைக்காது அனைத்து உயிர்கள் மீதும் அன்பு செலுத்தி கருணையுடன் நடந்து கொள்ள வேண்டும் எனப் போதிக்கிறது சைவ சமயம்.

நீ பாவத்தைச் செய்வாயாயின் நரகத்துக்குச் சென்று துன்பத்தை அனுபவிப்பாய் என்று கூறுவதுடன் உனது சந்ததிக்கே மீட்சி இராது. நிம்மதி இராது.

காலாதி காலத்திற்கும் உன் பரம்பரை துன்பத்தையே அனுபவிக்கும். நரகத்திற்கே செல்லும். சொர்க்கம் என்பதை அடைய வேண்டுமா? நீ செய்ய வேண்டியது, அனைவரையும் சமமாய்ப் பார். மற்றவரை துன்புறுத்தி அதில் மகிழ்ச்சி கொள்ளாதே. உன் வியர்வை சிந்திய உழைப்பில் வாழ். மற்றவருக்குக் கொடுக்க வேண்டியதைக்கொடு.

பிறருக்குக் கேடு செய்து நீ பணம் சம்பாதிக்க நினைக்காதே. மனிதம் என்பதில் பாகுபாடு காட்டாதே என்கிறது.

இது சாமானிய மனிதன் முதல் நாட்டை ஆளும் அரசன் வரை கடைப்பிடிக்க வேண்டும்.

சாமானியனுக்கு ஒரு சட்டமும் நாட்டை ஆளும் அரசனுக்கு மற்றொரு சட்டமும் அல்ல.

இறை சிந்தனை என்பது அனைவருக்கும் சமமானதே.

நீதி நெறி நின்று செயற்பட்டால் தர்மம் தோற்காது என்பதையே இதிகாச புராணங்களான மகா பாரதமும் இராமாயணமும் கூறி நிற்கிறது.

இலங்கைத் திருநாடு மிகவும் அழகானதும் வளம் நிறைந்த நாடாக விளங்கினாலும் இந்த நாட்டில் வாழும் சிறுபான்மை இனங்களுக்கு வழங்க வேண்டிய உரிமைகள் வழங்கப்பட்டதா? என்றால் அதற்கு இல்லை என்றே பதில் தரப்படும்.

தமிழர், சிங்களவர், முஸ்லிம் என மூவின மக்கள் இலங்கைத் தீவில் வாழ்ந்தாலும் ஆட்சி அதிகாரங்கள் பேரின சிங்கள ஆட்சியாளர்களிடமே இருக்கின்றமையும் இலங்கைத் திருநாடு சிங்களவருக்கே சொந்தம். சிங்களவரே இந்த நாட்டின் ஆதிக் குடிகள். மற்றையவர்கள் வந்தேறு குடிகள் என ஓரவஞ்சகம் செய்து வந்த பேரிவாத ஆட்சியாளர்களின் அடக்குமுறை தாங்காமல் கிளர்ந்தெழுந்த ஆயுதப் போராட்டம் 2009 இல் மௌனிக்கப்பட்டதுடன் தமிழர்களின் உரிமை முற்று முழுதாகப் பறிக்கப்பட்டு விட்டது என்றே சொல்ல முடியும்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்தினூடே தமிழர்களை சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதும் அதனூடே தமிழர்களை அடக்குமுறைக்குள் தள்ளுவதும் பேரினவாத அரசுகளின் பொழுது போக்காக மாறி விட்டன என்றே கூற வேண்டும்.

போர் முடிவுற்று விட்டது. பயங்கரவாதம் வேரோடு அழித்தொழிக்கப்பட்டு விட்டது எனக் கூறிக் கொள்கிறது அரசு. ஆனால் இன்றுவரை தமிழினத்திற்கான அரசியல் தீர்வு தருவதற்கான சிறு சமிக்ஞைகூட தென்படவில்லை.

தமிழினம் தனது உரிமையைக் கேட்கக் கூடாது. மீறிக் கேட்டால் அது பயங்கரவாதச் செயற்பாடாகப் பார்க்கப்படும் நிலையே இப்போதைய நிலையாக உள்ளது.

தமிழர்களின் பூர்வீக நிலங்களைப் பறித்தெடுக்கும் செயற்பாடுகள் தீவிரமடைந்து வருவதுடன் தமிழர் பிரதேசங்களில் அகழ்வாராய்ச்சி எனும் பெயரில் பௌத்த சின்னங்களை அடையாளப்படுத்தி அவற்றை பௌத்த அடையாளங்களாகக் காட்ட முனைவது பெரும் முனைப்புடன் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது.

அரசாங்கத்தால் அமைக்கப்பட்ட தொல்லியல் திணைக்களத்தில் அங்கம் வகிப்பவர்களில் ஒருவர் கூட தமிழர் இல்லை.


ஆனால் அகழ்வாராய்ச்சிகள் தமிழர் பிரதேசங்களில் நடைபெறுகின்றன என்றால் அதன் உள்நோக்கம் என்ன என்பதை சிறு பிள்ளைகூடக் கூறிவிடும்.

அண்மையில் முல்லைத்தீவு குருந்தூர் மலைப் பகுதியில் அகழ்வாராய்ச்சிப் பணிகள் ஆரம்பமான போது பௌத்தத்திற்கு முதன்மை கொடுக்கப்பட்டதுடன் இராணுவத்தின் பலத்த பாதுகாப்புடன் ஒரு தமிழர் கூட அங்கம் வகிக்காத அகழ்வுப் பணி ஆரம்பமானது.

அகழ்வுப்பணியில் பல்லவர் காலத்து சிவலிங்கத்தை ஒத்த சிவலிங்கம் ஒன்று கண்டுபிடிக்கப்பட்டது நம் அனைவருக்கும் தெரிந்ததே.

குருந்தூர் ஆதி சிவன் கோவிலில் சிவலிங்கம் கண்டெடுக்கப்பட்ட பின்னர் அது பௌத்த விகாரையின் தூண் என தொல்லியல் திணைக்கள அதிகாரிகள் கூறியிருக்கின்றனர் எனின், எவ்வாறு இந்த நாட்டில் நல்லிணக்கத்தை ஏற்படுத்த முடியும்.

இது இவ்வாறு இருக்க தமிழர் பிரதேசங்களை கையகப்படுத்தும் செயற்பாட்டை நிறுத்தக் கோரியும் காரணமில்லாமல் சிறைகளில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அரசியல் கைதிகளை விடுவிக்கக் கோரியும் தமிழர் பிரதேசங்களை பௌத்தமயமாக்கும் செயற்பாட்டை அரசு உடன் நிறுத்த வேண்டும் என்று பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான அறவழிப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.



அறவழிப் போராட்டம் ஆரம்பமான உடனேயே அதை தடுத்து நிறுத்த பாரிய பிரயத்தனங்களைச் செய்த பேரினவாதம் அதில் தோற்றுப் போனது.

யாரும் எதிர்பாராத வகையில் பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான போராட்டம் மக்களின் மாபெரும் எழுச்சிப் போராட்டமாக உருமாறியிருந்தது.

பல்வேறு வகையில் தமிழர் போராட்டங்களை நசுக்கி உருக்குலைய வைக்க காத்திருந்தவருக்கு இப்போராட்டத்தை தடுத்து நிறுத்த முடியாமல் போனதும் போராட்டத்தில் கலந்து கொண்டவர்களை ஒளிப்படம் எடுத்தும் வாகன இலக்கங்களை பதிவு செய்து அதனூடே விசாரணைக்கு அழைக்கும் செயற்பாடுகள் பொலிஸாரினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அத்துடன் போராட்டத்தில் கலந்து கொண்ட அரசியல் பிரமுகர்களை அழைத்து விசாரணை செய்து வருகின்றமையை அவதானிக்க முடிந்துள்ளது.

பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டது. இனி அதற்கு இடமே இல்லை என அரசு அதட்டிக் கூறிக் கொள்ளும் இந்த வேளையில் அறவழிப் போராட்டத்தில் ஈடுபட்டவர்களை அழைத்து விசாரணை செய்ய வேண்டிய தேவை என்ன இருக்கிறது என்பதே இப்போதைய முக்கியமான கேள்வி.

அறவழிப் போராட்டத்தில் பங்கேற்றவர்கள் பயங்கரவாத செயற்பாடுகளில் ஈடுபட்டார்களா? பயங்கரவாதத்தைத் தூண்டும் வகையில் நடந்து கொண்டார்களா? இல்லையே.

தமது உரிமைகளைக் கேட்டு அறவழியில் போரிட்டவர்களை அழைத்து விசாரணை செய்வதற்குள் என்ன இருக்கிறது என்பதை நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

ஆம், தமிழினம் ஆயுத வழியில் இல்லை, அறவழியில் கூடப் போராடக் கூடாது. மீறிச் செயற்பட்டால் விசாரணை அது, இது என அச்சுறுத்தப்படுவீர்கள் என்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறது இச் செயற்பாடு.

அரசாங்கத்தின் இத்தகைய செயற்பாடானது எதிர்வரும் மார்ச் மாதம் கூடவுள்ள ஐக்கிய நாடுகள் சபையின் கூட்டத் தொடரில் பேசுபடுபொருளாக அமையும்.

அத்தோடு இலங்கையில் இறுதிப் போரில் நடந்த மனித உரிமை மீறல்களுக்கு இலங்கை அரசு பொறுப்புக்கூற வேண்டும் என பல்வேறு தரப்பினர் வலியுறுத்தி வரும் நிலையில் இலங்கை அரசோ இலங்கையில் போர்க்குற்ற மீறல்கள் ஏதும் நடைபெறவில்லை எனக் கூறி வருகிறது.

அத்துடன் ஐ.நாவை அதட்டும் தொனியில் பேசி வருவது மேலும் ஐ.நாவை கோபத்துக்குள்ளாக்கும் என்பதைப் புரிந்து கொள்ளாமல் நடந்து கொள்வது மேலும் இலங்கை அரசை இறுக்கத்துக்குள்ளேயே தள்ளுவதாக அமையும்.

ஆக, பாவ புண்ணியம் என்பவற்றில் புண்ணியம் செய்து சொர்க்கத்தை அடைவதை விடுத்து மேலும் மேலும் பாவத்தைச் செய்து தம்மையும் தம் வம்சத்தையும் நரகத்தில் தள்ளும் செயற்பாடு அரங்கேறுகிறதோ என எண்ணத் தோன்றுகிறது.

"பொறுத்திருப்போம் பூமி ஆள்வோம்"

அபிமன்யு

# வேற்றுக்கிரகவாசிகளுடன் சந்திப்பு?






**1969** ஆம் ஆண்டு ஜனவரி 6 ஆம் திகதி, ஜோர்ஜியாவிலிருக்கும் சிறிய நகரொன்றின் உணவகத்தில், இரவு உணவருந்திவிட்டு நண்பர்கள் சிலர் வெளியே வந்தனர். அவர்கள் மொத்தமாக 26 பேர் இருந்தார்கள். உணவகத்துக்கு வெளியே வந்து சிறிது நேரம் உரையாடினார்கள். அப்போது ஒரு நண்பன், "அங்கே பாருங்கள்..." என்று வானத்தைக் காட்டி அலறினான். அவன் காட்டிய திசையில், பிரகாசமான வெளிச்சத்துடன் ஒரு பொருள் மிதந்து கொண்டிருந்தது. இவர்களை நோக்கி மெல்லக் கீழே வரவும் ஆரம்பித்தது.

சற்றுத்தூரத்திலிருந்த பைன் மரங்கள் வரை வந்த பிறகு அசையாமல் நின்று கொண்டது. அசையும்போதும், மிதந்தபடி நிற்கும்போதும் அதிலிருந்து எந்தவித ஒலியும் வரவில்லை. தங்களுக்கு முன்னால் ஒரு பறக்கும்தட்டு நிற்கிறது என் பதை நண்பர்கள் அனைவரும் புரிந்து கொண்டார்கள்.

புறக்கும்தட்டையே எல்லோரும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அப்போது, அதிலிருந்து வந்த வெள்ளை நிற வெளிச்சம் திடீரென நீல மாக மாறியது. பின்னர் சிவப்பாக மாறி, மீண்டும் வெள்ளை நிற ஒளி யானது. பத்து நிமிடங்கள் வரை அது வானில் நின்றிருக்கலாம். திடீரென வேகமெடுத்து மறைந்துபோனது. என்ன நடக்கிறது என்றே அவர்களுக்குப் புரியவில்லை. அவர்கள் கண்டது அந்த ஊர் முழுவதும் பேசப்பட்டாலும், வெளியே அதுபற்றிப் பெரிதாகத் தெரியவில்லை. அங்கிருந்த 26 பேரில் ஒருவர், 1970ஆம் ஆண்டு ஜோர்ஜியாவின் ஆளுநரானார்.


அமெரிக்காவில் ஆளுநர் என்பது மிகப்பெரிய ஒரு பதவி. அதன் பின்னர், 1973 ஆம் ஆண்டு ஜோர்ஜியாவில் மீண்டும் பறக்கும் தட்டுகள் தோன்றியதைப் பலர் பார்த்தார்கள். அது, பத்திரிகைகளில் பரபரப்பாகப் பேசப்பட்டது. வழக்கம் போலப் பார்த்தவர்களுக்கும் மற்றவர்களுக்கும் இடையில் விவாதப் பொருளானது. பார்த்தவர்களில் இராணுவத் தளபதி ஒருவரும், சில மதிக்கத்தக்க பிரஜைகளும் இருந்தார்கள். அதுவரை, தனக்கு நடந்த சம்பவத்தை எவருக்கும் சொல்லாமலிருந்த ஆளுநர் முதன்முதலாக வாயைத் திறந்தார்.

"பறக்கும்தட்டைப் பார்த்ததாக அவர்கள் சொல்வது உண்மைதான். மூன்று ஆண்டுகளுக்கு முன்னர் நானும் ஒரு பறக்கும் தட்டைக் கண்டிருக்கிறேன்" என்று வெளிப்படையாகத் தெரிவித்தார். தன் கைப்பட எழுதிய கடிதத்திலும் அது பற்றிக் குறிப்பிட்டார். அந்தச் சமயத்தில் நடைபெற்ற லயன்ஸ் கிளப் கூட்டமொன்றில், பறக்கும் தட்டைப் பார்த்ததாகப் பேசியிருந்தார். அவர் பேசியதும், அவர் கைப்பட எழுதியதும் இன்றுவரை உயிர்ப்புடன் இருக்கும் சாட்சியங்கள். ஆனால் அந்த ஆளுநருக்கு, அமெரிக்காவின் மிகப்பெரிய பதவியை தான் வகிக்கப்போகிறோம் என்பது தெரிந்திருக்கவில்லை. தனது ஊரின் மக்களைப் பொய்யர்களாக்கக் கூடாது எனும் எண்ணத்துடன், தனது சாட்சியத்தை அன்று பதிவு செய்திருந் தார். அதுவே பின்னாட்களில் வினை யாகும் என்று அவர் நினைக்கவில்லை.

பறக்கும் தட்டைக் கண்ட 26 பேரில் ஒருவராக இருந்தவர், 1977 ஆம் ஆண்டு அமெரிக்காவின் 39ஆவது ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட 'ஜிம்மி கார்ட்டர்' பறக்கும் தட்டைக் கண்டதாக ஜிம்மி கார்ட்டர் தெளிவாகவே பதிவு செய்திருந்தார். ஆனால், வெள்ளிக்கோள் மின்னுவதைப் பார்த்துத்தான் அப்படிச் சொல்லிவிட்டார் என்றும், கால நிலையை கணிக்கும் பலூனைக் கண்டு தவறிச் சொன்னார் என்றும் வரிசையாகக் கதைகள் அமெரிக்க அரசின் சார்பில் அடுக்கப்பட்டன.

அமெரிக்க ஜனாதிபதியே பறக்கும் தட்டு இருக்கிறது என்று சொல்ல முடியுமா... அவரின் வாக்குமூலங்களிலிருந்து அவரையும் அமெரிக்காவையும் காப்பாற்ற வேண்டுமல்லவா? கார்ட்டரும் அப்படித்தான் இருக்க வேண்டும் என்று சொல்லி, தன் குரலைத் தாழ்த்திக் கொண்டார். "வெள்ளிக்கோள் எது, வெதர் பலூன் எதுவெனத் தெரியாத ஒருவரையா அமெரிக்காவின் ஜனாதிபதியாக்கினோம்?" என்று சொல்லிச் சிரிக்கிறார்கள்.

என்னவொரு முட்டாள்தனமான காரணம் இது... எதையெடுத்தாலும் வெதர் பலூனென்று சொல்லிவிடுவதா... வெள்ளிக்கோள் கூடவா ஜிம்மி கார்ட்டருக்குத் தெரியாது... அவருக்குத்தான் தெரியவில்லையென்றால், கூட இருந்த நண்பர்களும் முட்டாள்களா என்ன? பறக்கும்தட்டைக் கண்டவர்களைவிட, அதை மறுப்பதற்கு அமெரிக்க அரசு மிகவும் பதற்றம் காட்டுகிறது. மறுப்பதற்காக எதைச் செய்யவும் தயாராக இருக்கிறது. எதற்காகப் பதற்றப்படுகிறது அமெரிக்க அரசு... எதை மறைக்க இவ்வளவு பாடுபடுகிறது? இந்தக் கேள்விகளுக்கான பதிலைச் சொன்னால், நீங்கள் சிரிப்பீர்கள். விழுந்து விழுந்து சிரிப்பீர்கள். 'இதையெல்லாமா நம்புகிறார்கள்?' என்றும் கேட்பீர்கள். பறக்கும் தட்டுகள் பூமிக்கு வந்தன என்பதைக்கூட நம்பிவிடுவீர்கள். ஆனால், இதை உங்களால் நம்பவே முடியாது.



1954 ஆம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக இருந்தவர் ஐசனோவர் ஓய்வுக்காகக் குடும்பத்துடன் 'பாம் ஸ்பிரிங்ஸ்' எனும் இடத்துக்குச் சென்றார். பாதுகாப்பு பலமாக இருந்தது. அந்தப் பாதுகாப்புகளையும் மீறி அவர் காணாமல்போனார். 1954 ஆம் ஆண்டு, பெப்ரவரி 20 ஆம் திகதி மாலை காணாமல்போனவர், அடுத்த நாள் மதியமே திரும்பி வந்தார். 18 மணி நேரம் அமெரிக்க ஜனாதிபதியைக் காணவில்லை என்பது பலவிதங்களில் பேசப்பட்டது. அவர் திரும்பி வந்ததும், கோழி இறைச்சியைச் சாப்பிட்டபோது பல்லில் பிரச்சினை ஏற்பட்டு உடனடியாகப் பல் மருத்துவரைச் சந்திக்கச் சென்றார் என்று தெரிவிக்கப்பட்டது.

சொல்லப்பட்ட காரணத்தை யாரும் நம்பவில்லை. அவர் ஏன் மறைந்தார், எங்கு சென்றார் எனும் மர்மம், பல ஆண்டுகளின் பின்னரே கசிந்தது. வேற்றுக்கோள்வாசிகளான ஏலியஸ்களையே அமெரிக்க ஜனாதிபதி ஐசனோவர் சந்திக்கச் சென்றார் என்று சொல்லப்பட்டது. கலிபோர்னியாவில் இருக்கும் அமெரிக்க வான்படைக்குச் சொந்தமான எட்வர்ட் விமானப் படைத் தளத்தில் அந்தச் சந்திப்பு நடந்ததாம். அது பற்றிப் பலவிதமான கதைகள் உலாவருகின்றன. அவற்றில் எது உண்மை, எது பொய்யென்று என்னால் உறுதியாகச் சொல்ல முடியாததால், அனைத்தையும் சொல்லாமல் சுருக்கமாகச் சொல்கிறேன்.

அந்தச் சந்திப்பின்போது, ஐசனோவருடன் மிக முக்கியமான நான்கு பேர் கலந்துகொண்டார்கள். இயற்பியல் ஆராய்ச்சியாளரான 'ஜெரால்டு லைட்' பொருளாதார மேதையான 'எட்வின் நோர்ஸ்', லொஸ் ஏஞ்சல்ஸின் கத்தோலிக்க பிஷப்பான 'ஜேம்ஸ் பிரான்சி மக்கின்டயர்' பிரபல ஊடகவியலாளரான 'பிராங்ளின் விந்த்ரோப் ஆலென்' ஆகிய நால்வரும் அந்தச் சந்திப்பில் இருந்தார்கள்.

இவர்கள், இரண்டு ஏலியன்களுடன் பேச்சுவார்த்தை நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. 'நோர்டிக்ஸ்' எனப்படும் ஒரு வகை ஏலியன்ஸ்கள். மனிதர்கள் போலவும், உயரமான உருவத்துடனும், நீல நிறக் கண்களுடனும், வெள்ளைத் தலைமுடியும் கொண்டவர்களாகக் காணப்பட்டார்கள். டெலிபதி மூலம் உரையாடல்கள் நடந்ததாகவும் சொல்கிறார்கள். தங்களால் மனிதர்களுக்கு எந்தவித ஆபத்தும் வராதெனவும், கிரே ஏலியன்ஸ்களிடம் அவதானமாக இருக்க வேண்டுமெனவும் அவர்கள் சொன்னார்களாம்.

அவர்களின் பறக்கும் தட்டை ஆராய்வதற்கும் அனுமதியளித்திருக்கிறார்கள். பேச்சுவார்த்தைகள் அந்த வகையிலேயே நடைபெற்றிருக்கின்றன.

ஜனாதிபதி ஐசனோவர் மூன்று தடவை ஏலியன்ஸ்களுடன் சந்திப்பு நடத்தியதாகச் சொல்லப்படுகிறது. அவர் இரண்டு வகையான ஏலியன்ஸ் களைச் சந்தித்ததாகவும் சொல்லப்படுகிறது. யாராலும் இலகுவில் இந்தக் கதைகளை நம்ப முடியாது.


யாரோ சதிக்கோட்பாட்டாளர்கள் கட்டிவிட்ட கதைகளையெல்லாம் எப்படி நம்புவது என்றே தோன்றும். ஆனாலும், ஒரு சில முக்கிய சாட்சியங்கள் இவற்றை நம்பவைப்பதாகவே அமைந்திருக்கின்றன.

அந்தச் சந்திப்பில், ஐசனோவருக்குப் பாதுகாப்புக்காக நின்றவர், 'சார்ல்ஸ் சக்ஸ் சீனியர்' எனும் கடற்படைத் தளபதி. பேச்சுவார்த்தைகளில் பங்குகொள்ளாது தள்ளி நின்றிருக்கிறார். அவர், தன்னுடைய மகனான சார்ல்ஸ் சக்ஸ் ஜுனியருக்கு அந்தச் சந்திப்பில் நடந்தவற்றைச் சொல்லியிருக்கிறார்.

தந்தை கூறியவற்றை, ஜுனியர் சக்ஸ் பேட்டியொன்றில் வெளியிட்டிருக்கிறார். கிட்டத்தட்ட அந்தச் சம்பவத்தை நேரில் பார்த்த சாட்சியாக அதை எடுத்துக்கொள்ளலாம். அது தவிர்த்தும் வேறு பல ராணுவத் தளபதிகளும் உண்மை என உறுதிப்படுத்தியிருக்கிறார்கள். இல்லாத ஒன்றை இந்த அளவுக்கு வடிவமைத்து, பலரால் ஒரே மாதிரியாகச் சொல்ல முடியாது.

நிச்சயமாக ஏதோவொன்று நடந்துதான் இருக்கிறது. ஆனாலும், எந்த விபரமும் சரியாகத் தெரியவில்லை. நம்புவதா, விடுவதா என்று இருந்த போது, இன்னுமொரு முக்கியமானவர் அந்தச் சம்பவங்கள் எல்லாம் உண்மையானவைதான் என்று அண்மையில் கூறியிருக்கிறார். இன்னும் தேடுவோம்.

# ஒரு கண்கொத்திப் பாம்பின் கதை



காலையில் எழுந்ததும் வழக்கம்போல் கலண்டரில் அன்றைய தினத் திகதியைக் கிழித்துக் கசக்கிப் போட்டேன். பின்பு, சட்டென்று எடுத்து அதை நீவி, சட்டைப் பையில் வைத்துக் கொண்டேன். வேறொன்றுமில்லை... 'எது பாவம், எது புண்ணியம்?' என்ற கேள்விக்கு, 'வெறுப்பது பாவம் நேசிப்பது புண்ணியம்' என்று சுவாமி விவேகானந்தரின் பொன்மொழி அதில் அச்சிடப்பட்டிருந்தது. என் வீட்டு கலண்டரில், ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு பொன்மொழி அச்சிடப்பட்டிருக்கும். கிழித்த திகதியைக் குப்பைக் கூடையில் போடுவது, பொன்மொழியையே குப்பையில் போடுவது போன்று மனசுக்குக் கஷ்டமாக இருக்கும்.
இதைச் சொன்னதற்கு என் மனைவி பலமாகச் சிரித்துவிட்டு, "நல்லா இருக்கு கதை! அந்தப் பொன்மொழியை நாலு தரம் படிச்சு, மனசுல வாங்கிக்கிட்டு, காகிதத்தைக் குப்பைத் தொட்டில போடுவீங்களா... இதுக்குப் போய் இவ்ளோ யோசனை பண்ணிக்கிட்டு!" என்றாள். அதன்படி, 'வெறுப்பது பாவம், நேசிப்பது புண்ணியம்' எனும் வாசகத்தை மீண்டும் மீண்டும் படித்தேன். சட்டென்று பெரியவர் மாசிலாமணியின் ஞாபகம் வந்தது.
மாசிலாமணி, நான் வேலை பார்த்த தனியார் கம்பனியின் விற்பனைப் பிரிவு மேலதிகாரி. அலுவலகத்தில், அவருக்குப் போதுமான வசதிகளைச் செய்து தரவில்லை என எப்போதும் புலம்பிக்கொண்டே இருப்பார். 'அறையில் ஏ.சி. வசதி இல்லை; போக்குவரத்து அலவன்ஸ் தருவதில்லை; இன்ஸென்டிவ் வழங்குவதில்லை' எனக் குறைகளைப் பட்டியலிட்டுக்கொண்டே இருப்பார். சீனியரான அவரிடம் மதிப்பு உண்டு என்றாலும்,' நிர்வாகிகளைக் குறை சொல்லியபடியே இருக்கும் அவர் பேச்சை நான் ரசிப்பதில்லை.
ஒருவழியாக அவர் ஓய்வு பெற்றார். ஒருநாள், அவருடைய உறவினர் போன் செய்து, "உங்களை மாசிலாமணி சேர் பாக்கணும்னார்" என்றார்.
போய்ப் பார்த்தேன். அலுவலகத்தில் இருந்து சிறு தொகை ஒன்று அவருக்கு வரவேண்டியிருந்தது. 'கொஞ்சம் சீக்கிரம் செட்டில் பண்ணச் சொல்லுப்பா' என்றார். சிறிது நேரம் பேசிக்கொண்டு இருந்து விட்டுக் கிளம்பியபோது, 'இதைப் பார்த்தியா?' என்று கேட்டு, புகைப்படம் ஒன்றைக் காட்டினார்.
அது ஒரு குரூப் போட்டோ. ஓர் ஆண்டு விழாவின்போது அதிகாரிகளும் ஊழியர்களுமாகச் சேர்ந்து எடுத்துக் கொண்ட புகைப்படம்.
அதைப் பார்த்ததும் திடுக்கிட்டுப் போனேன். 30 பேர் கொண்ட அந்த போட்டோவில் சிலருடைய கண்கள் கிழிக்கப்பட்டிருந்தன. அதிர்ந்து போய் அவர் பக்கம் திரும்பினேன். "எனக்கு அநியாயம் பண்ணினவங்க, வசதி செய்து தராதவங்க கண் அவிஞ்சு போயிடணும்னு வேண்டிக்கிட்டு, அவுங்க கண்ணை நோண்டிட்டேன்" என்றார். வெறுப்பு, வெறுப்பு, வெறுப்பு! அலுவலகத்திலிருந்து ஓய்வு பெற்ற பிறகுகூடவா, அலுவலகத்தின்மீது ஒருத்தர் இவ்வளவு வெறுப்புடன் இருக்க முடியும் என்று அவர் மீதே எனக்கு வெறுப்பாக இருந்தது!
சற்று நிதானமாக யோசிக்கையில், 'இப்படி வெறுக்கிறாரே' என்று அந்த ஆசாமியை நான் வெறுப்பது மட்டும் சரியா என்று தோன்றியது. மனிதர்களில் சிலர் இப்படியும்தான் இருப்பார்கள். உண்மையான அன்பு உள்ளம் கொண்டவர்கள், இப்படியானவர்களிடமும் அன்பாகத்தான் இருக்க வேண்டும் என்கிறார்கள் சான்றோர்கள்!

# கரப்பந்தாட்டக்காரன்



-இந்திரபுத்திரன்-

அன்பர்களுக்கு வணக்கம். கடந்த வார பேய்க் கதைக்கு அன்பர் ஒருவர் தனது கருத்தைத் தெரிவித்திருந்தார். பேய் இருக்கிறது என்பதை நிரூபிக்கும் பத்தி இதுவல்ல. 1980 களில் நடந்த சுவாரஷ்ய விடயங்களின் மீள் பார்வையே இப்பகுதி என்பதை குறித்த அன்பருக்கும் வாசகர்களுக்கும் தெரிவித்துக் கொள்வது நயத்தக்க நாகரிகமாகும்.
இராசமணி அண்ணருக்கு பொலிபோல் (கரப்பந்தாட்டம்) என்றால் உயிர். இப்போது போல பாய்ந்து பாய்ந்து அடிக்கும் செட்டப் கரப்பந்தாட்டம் 80 களில் அறிமுகமாகவில்லை.
ஓவர் கேம் என்று சொல்லப்படும் அக்கால கரப்பந்தாட்டத்தில் பந்து நிலத்தில் விழாமல் அங்குமாறி இங்கு மாறி சீறிப் பாய்வது மணித்தியாலக் கணக்காக நிகழும். இதைக் காணவே ரசிகர் கூட்டம் கூடும். மாலை நான்கு மணிக்கு மச் என்றால் காலை எட்டு மணிக்கே இராசமணி அண்ணன் ரணிங் சோட்ஸ் போட்டு விடுவார். மாவை.உதயதாரகை அணிக்காக உயிரையும் கொடுத்து விளையாடும் ஒரு வீரரே இராசமணி அண்ணன். அன்று தட்டாதெரு சந்தியில் உள்ள கரப்பந்தாட்டத்திடலில் மச் ஆரம்பமானது.
இரண்டு ரீமும் மரண அடி அடித்துக் கொண்டிருந்தனர். மாறி மாறி சுற்றுக்களை வெல்ல இறுதிச் சுற்றில் யார் வெல்கிறார்களோ அவர்களுக்கே வெற்றிக் கிண்ணம். வெற்றி யாருக்கு என்ற ரசிகர்களின் பாரிய எதிர்பார்ப்புகளுடன் இறுதிச் சுற்றுப் போட்டி ஆரம்பமானது.
இரண்டு அணியும் 12-12 புள்ளிகளுடன் சமநிலையில் நின்றன. ஒரு புள்ளி எடுக்க இரு அணிகளும் அசுர வேகத்தில் பந்தை எதிரணியிடம் செலுத்திக் கொண்டிருந்தனர். கிட்டத்தட்ட 20 நிமிடங்களுக்கு மேல் பந்து நிலத்தில் விழவில்லை.
ஒரு கட்டத்தில் மாவை.உதயதாரகை அணி வீரர் அடித்த பந்து அவுட் (வெளியே) பறந்து சென்றது.
எதிரணியினர் வெற்றி தமக்கே என போட்டியை விடுத்து ஆர்ப்பரிக்கத் தொடங்கினர். சிட்டாகப் பறந்த இராசமணி அண்ணன் அருகில் இருந்த மதில் மேல் கால் ஊன்றி பாய்ந்து பந்தை எதிரணி எல்லைக்கொட்டுக்குள் அடித்தார். இதை எதிரணியினர் எதிர் பார்க்கவே இல்லை.
கணப் பொழுதில் யாரும் எதிர்பாராத செயலைச் செய்ததால் மாவை.உதயதாரகை அணி கிண்ணம் வென்றது. பிறகென்ன இராசமணி அண்ணர் தோளில் வெற்றிக் கிண்ணம். ரசிகர்களின் தோளில் இராசமணி அண்ணன்.ஊர்வரை ஊர்வலம் தான்.

# கதை கதையாம் காரியமாம்




P2P போராட்டத்திலை கலந்துகொண்ட ஆக்களை விசாரணை செய்ய கூப்பிடுகினமாமே! → அப்ப பழிவாங்கும் படலம் ஆரம்பமாகிட்டுது எண்டு சொல்லுங் கோவன். → விசாரணை எண்டு பயமுறுத்தினா போராட ஆரும் போகமாட்டினம்தானே.

எண்ணங்களைத் திசை திருப்பப் பாத்தினம். சரிவரேல்ல. இப்ப புதிசா ஒன்றைத் துவக்கி இருக்கினம். → புதிதெண்டால் புரியல்லைக் காணும்? → அதுதான் விசாரணை எண்டுற பேரிலை மிரட்டி அனுப்புற வேலைதான்.

அப்படியெண்டால் அடக்குமுறையைப் பிரயோகிப்பினம். அதை முதுகிலை வாங்கிக் கொண்டிருக்க வேணுமோ? → ம்ம்ம்... அதெண்டால் சரி. அவையின்ர எண்ணம் அதுதான். → யாழ்.மாநகர முதல்வர் சிங்களத்திலை எழுதின ஸ்ரேற்மெண்டில கையெழுத்துப் போட மறுத்திட்டாராமே?

இந்தத் துணிவு எல்லாரிட்டையும் வரவேணும். வருமோ? → வரும் வரும் P2P அறவழிப் போராட்டம் அவைக்கு நல்ல பாடத்தைக் கற்பிச்சுட்டுது போல.

# கைகோர்த்த மோடி! கைவிடப்பட்டாரா சசி?




அ.தி.மு.க பிளவுபடுமா? அல்லது அ.ம.மு.கவுடன் இணையுமா? என்ற கேள்விகள் தொண்டர்களின் மனதைக் குடைந்துகொண்டிருந்த நிலையில் தான், எடப்பாடி- பன்னீருடன் கைகோர்த்து, அ.தி.மு.க. தரப்புக்கு உற்சாக டொனிக் கொடுத்திருக்கிறார் பிரதமர் மோடி. அரசியல் கலப்பு ஏதுமில்லாமல் நடைபெற்றதாகச் சொல்லப்படும் இம்மாதம் 14ஆம் திகதி விழாவே, முழுக்க முழுக்க அரசியலுக்காக நடத்தப்பட்டது என்பது தான் இதிலிருக்கும் டுவிஸ்ட்!

## "சர்ப்ரைஸ் டு மீ!"

பல்வேறு திட்டங்களைத் தொடங்கி வைப்பதற்காக, இம்மாதம் 14 ஆம் திகதி சென்னை வந்திருந்த பிரதமர் மோடிக்கு பிரமாண்டமான வரவேற்பு அளிக்க வேண்டும் என்று இம்மாதம் 6ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.க. உயர்மட்ட நிர்வாகிகள் கூட்டத்திலேயே முடிவு எடுக்கப்பட்டிருந்தது.

'கட்சி என் கட்டுப்பாட்டில்தான் இருக்கிறது' என்பதை மோடியிடம் காட்ட வேண்டும் என்பதற்காகவே, ஜெயலலிதாவுக்கு அளிக்கப்படும் வரவேற்புக்கு இணையான ஏற்பாடுகளை முதல்வர் பழனிச்சாமி செய்திருந்தார். இதற்காக திருவள்ளூர், விழுப்புரம், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களிலிருந்து அ.தி.மு.க நிர்வாகிகள் குவிந்திருந்தார்கள்.

இம்மாதம் 14 ஆம் திகதி காலை 11.32 மணிக்கு ஐ.என்.எஸ்.அடையாறு கடற்படைத்தளத்தில் வந்திறங்கிய மோடி, செண்டை மேள தாளங்கள் முழங்க தனக்கு அளிக்கப்பட்ட பிரமாண்டமான வரவேற்பைப் பார்த்து உச்சி குளிர்ந்தார் என்கிறார்கள். இதையடுத்தே, நேரு உள்விளையாட்டு அரங்குக்குள் நுழைந்தவுடன் பழனிச்சாமியின் தோளில் தட்டிக் கொடுத்தவர், 'திஸ் இஸ் சர்ப்ரைஸ் டு மீ' என்று பாராட்டினாராம்.

மேடையில் முதல்வர் பழனிச்சாமி தனது பேச்சில் இரண்டுமுறை, தனக்காகவே பிரதமர் மோடி தமிழகம் வந்திருப்பதாக அழுத்தமாகக் கூறி, 'மோடி எனக்காகத்தான் வந்திருக்கிறார். டில்லி சப்போர்ட் எனக்குத்தான்' என்பதை அமைச்சர்களுக்கும், சசிகலா முகாமுக்கும் உணர்த்தினார். தனது பேச்சை முடித்தவுடன், பன்னீரையும் பழனிச்சாமியையும் அருகே அழைத்த மோடி, இருவரின் கரங்களையும் பிடித்து உயர்த்தி போட்டோவுக்கு போஸ் கொடுத்தார். கூட்டத்தில் இதுவே ஹைலைட்டாக மாறிப்போனது.

## பதறவைத்த எடப்பாடி!

கடந்த ஐந்தாண்டுகளாகவே மாநிலங்களின் அரசியல் தொடர்பான நடவடிக்கைகளில் மோடி நேரடியாக ஈடுபாடு காட்டியதில்லை என்கிறார்கள் பா.ஜ.க நிர்வாகிகள். கூட்டணிப் பேச்சுவார்த்தை, சீட் பங்கீடு என்று அரசியல் ரீதியாக எதுவாக இருந்தாலும் கட்சித் தலைமையிடம் அனுப்பிவிடுவது மோடியின் வழக்கமாம். ஆனால், "இப்போது மோடியையே தன் அரசியல் சதுரங்கத்துக்குள் கொண்டு வந்து, எதிராளிகளுக்கு மெசேஜ் சொல்லியிருக்கிறார் எடப்பாடி" என்று புல்லரிக்கிறார்கள் எடப்பாடியின் ஆதரவாளர்கள்.

பிரதமருடன் அ.தி.மு.க. தலைவர்கள் பன்னீர், பழனிச்சாமி இருவரும் ஒன்றாகச் சந்திப்பதற்குத்தான் முதலில் ஏற்பாடாகியிருந்தது. ஆனால், 'மோடியிடம் தனிப்பட்ட ரீதியில் சில விடயங்கள் பேச வேண்டும்' என்று எடப்பாடி அழுத்தமாகக் கேட்டுக்கொண்டதால் அவரை மட்டும் சந்திப்பதற்கு பத்து நிமிடங்கள் ஒதுக்கப்பட்டன. பிரதமர் அலுவலக அதிகாரிகள், 'ஐ.என்.எஸ்.அடையாறு கடற்படைத் தளத்தில் சந்திப்பை வைத்துக் கொள்ளலாம்' என்றதற்கு, 'அங்கேயெல்லாம் வேண்டாம். பலரும் இருப்பார்கள்.

நேரு உள்விளையாட்டு அரங்கத்துக்குள்ளேயே ஓர் அறையில் சந்திப்பை வைத்துக்கொள்ளலாம்' என்று முதல்வர் தரப்பிடமிருந்து ஆலோசனை சென்றிருக்கிறது. இதன் பிறகே, பிரதமரின் பாதுகாப்பு அதிகாரிகள் அரங்கத்திலுள்ள அறைகளைச் சோதனையிட்டு க்ளியரன்ஸ் அளித்திருக்கிறார்கள். விழா முடிந்தவுடன் அரங்கத்துக்குள்ளேயே மோடியும் பழனிச்சாமியும் தனியாகச் சந்தித்து பத்து நிமிடங்கள் ஆலோசனை நடத்தினர்.

இந்தச் சந்திப்பு குறித்துப் பலதரப்பட்ட தகவல்கள் உலாவருகின்றன. 'சசிகலா தொடர்பாகத்தான் இருவரும் பேசினார்கள். விரைவிலேயே சசிகலா தொடர்புடைய இடங்களில் ரெய்டுகள் அரங்கேறலாம். பினாமி சொத்துகள் எனச் சில இடங்கள் குறிவைக்கப்படலாம்' என்றெல்லாம் யூகங்கள் றெக்கை கட்டின.

## பன்னீருடன் தனிச் சந்திப்பு ஏன் இல்லை?

கடந்த காலங்களில் நினைத்த போதெல்லாம் டில்லிக்குச் சென்று பிரதமர் மோடியைச் சந்தித்துவிட்டு வந்தார் பன்னீர். பன்னீரின் தர்மயுத்தத்தின் போது, அவருக்குத் துணை முதல்வர் பதவியில்லாத காலத்திலேயே அவரைச் சந்திக்க நேரம் ஒதுக்கியது டில்லி. ஆனால், தற்போது சென்னைக்கு பிரதமர் வந்ததும் ஒரே மேடையில் பன்னீரும் மோடியும் சந்தித்திருக்கும் சூழலில் பன்னீருடன் தனிச் சந்திப்பைத் தவிர்த்துவிட்டார் மோடி. இத்தனைக்கும் பன்னீர் தரப்பிலிருந்து மோடியைச் சந்திக்க நேரம் கேட்கப்பட்டிருந்தது என்றும் கூறப்படுகிறது. தனிச் சந்திப்புக்கு நேரம் தரவில்லை பிரதமர்" என்கிறார்கள் கட்சி நிர்வாகிகள்.



## கைவிடப்படுகிறாரா சசி?

ஆனால், இதையெல்லாம் நம்ப சசிகலா தரப்பு தயாராக இல்லை என்கிறார்கள். சில வாரங்களுக்கு முன்புவரை, தினகரன் டில்லிக்குச் சென்றதாகவும், பா.ஜ.க. தலைவர்கள் சிலருடன் அ.தி.மு.க - அ.ம.மு.க இணைப்பு குறித்து அவர் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் தகவல்கள் பரவின. ஜனவரி 19ஆம் திகதி மோடியை டில்லியில் பார்த்துவிட்டு வெளியே வந்த பழனிச்சாமி, "சசிகலா கட்சியில் இணைய நூறு சதவிகிதம் வாய்ப்பில்லை" என்று அதிரடி பேட்டி தட்டினார். அப்போதே சசிகலா தரப்பில் உற்சாகம் குறைந்துவிட்டது. இப்போது, அ.தி.மு.க தலைவர்களின் கரம்பிடித்து மோடி கையை உயர்த்திய பிறகு, 'டில்லி தரப்பு சசிகலாவைக் கைவிட்டுவிட்டதா?' என்கிற கேள்வியை எழுப்பியிருக்கிறது.

இது குறித்து நம்மிடம் பேசிய டில்லி பிரமுகர்கள், "ஜனவரி மாதம் துக்ளக் ஆண்டு விழாவில் பேசிய ஓடிட்டர் குருமூர்த்தி, சசிகலாவை 'சாக்கடை' என்கிற ரீதியில் குறிப்பிட்டார். ஆனாலும், 'தி.மு.கவை வீழ்த்த சசிகலாவின் உதவியையும் பெறலாம்' என்றார். அதனால்தான், அ.ம.மு.க- அ.தி.மு.க இணைப்பில் பா.ஜ.க. ஆர்வம் காட்டுவதாகப் பேச்சு கிளம்பியது. பெங்களூரிலிருந்து சென்னைக்குத் திரும்பியபோது தொண்டர்கள் இடையே பேசிய சசிகலா, 'அடக்குமுறைக்கு ஒருபோதும் நான் அடிபணிய மாட்டேன். தொண்டர்களுக்காகத் தீவிர அரசியலில் ஈடுபடுவேன்' என்று சொன்னார். இது பா.ஜ.க. தரப்புக்கான எச்சரிக்கை போலவே கருதப்பட்டது.

தவிர, வரும் நாட்களில் அவர் மாவட்டம்தோறும் சுற்றுப்பயணம் செய்து அ.தி.மு.க. தொண்டர்களைச் சந்திக்கத் திட்டமிட்டிருக்கிறார். இதையெல்லாம் டில்லி மேலிடம் ரசிக்கவில்லை. அதே சமயம், சசிகலாவால் ஏற்படும் பின்னடைவைச் சமாளிக்க சமூக ரீதியிலான சில கணக்குகளுக்கும் தயாராகிவிட்டது பா.ஜ.க. தெற்கில் கணிசமாக இருக்கும் தேவேந்திரகுல வேளாளர் சமூக மக்களை உயர்த்திப் பிடித்திருப்பதுடன், வன்னியர் சமூகத்தவரான மேல்மருவத்தூர் பங்காரு அடிகளாரையும் சென்னையில் சந்தித்துப் பேசியிருக்கிறார் மோடி. முத்தரையர் சங்கத் தலைவர் கே.கே.செல்வக்குமார், தமிழக மக்கள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ஜோன் பாண்டியன் ஆகியோரையும் விமான நிலையத்தில் சந்தித்துப் பேசியிருக்கிறார்.

பிரதமர் மூலம், கட்சி தனது கட்டுப்பாட்டுக்குள் இருப்பதைக் காட்டிவிட்டார் பழனிச்சாமி. சசிகலா தரப்பிலிருந்துதான் சலனமில்லை. இன்றைய சூழலில் டில்லியால் அவர் கைவிடப்பட்டிருக்கிறார். வரும் வாரங்களில் சசிகலா தன் செல்வாக்கை நிரூபிக்க முயற்சிகள் எடுக்கக் கூடும். அதற்குக் கிடைக்கும் ஆதரவைப் பொறுத்தே, அவருக்கு டில்லியின் ஆசி கிடைக்குமா? என்பது உறுதியாகும்.

**ஜூனியர் விகடன்**

# கடல் புறா

## நீர்க்குடங்கள் நான்கு

காலத்தின் பதிவு

58




சாண்டில்யன்

"அமீர் சொல்லுவதுபோல் இந்த நீர்க்குடங்களில் ஒளிந்து சென்றாலும் இவற்றைப் பாலூர் சுங்க அதிகாரிகள் சோதிக்கமாட்டார்கள் என்பது என்ன நிச்சயம்?" என்று தன்னைத்தானே கேட்டுக் கொள்ளவும் செய்தான் சிறிது சந்தேகத்துடன்.

அநபாயன் மனத்திலோடிய எண்ணங்களை அமீர் புரிந்து கொண்டிருக்க வேண்டும். ஆகவே அவன் சொன்னான். "இந்த நீர்க்குடங்களையும் சுங்க அதிகாரிகள் சோதிக்கலாமென்று நினைக்கிறீர்கள். ஆனால் நீர்க்குடங்கள் சுங்கச் சாவடிக்குச் செல்லவேண்டிய அவசியமில்லை."

"ஆம் அவசியமில்லை" என்று அதுவரை மௌனமாயிருந்த சுங்க அதிகாரி கண்டியத்தேவனும் சொன்னான்.

"உண்மையாகவா?" என்று இடையே புகுந்து கேட்டான் இளைய பல்லவன்.

"ஆம், இளைய பல்லவரே! மரக்கலங்களுக்குச் செல்லும் நீர்க்குடங்களைச் சாதாரணமாகச் சோதிப்பதில்லை. குடிநீருக்குத் தீர்வை போடும் அளவுக்குக் கலிங்கம் இன்னும் உயரவில்லை" என்றான் கண்டியத்தேவன்.

"இருக்கலாம். ஆனால் இன்றைய சூழ்நிலையில் அவர்கள் நீர்க்குடங்களையும் சோதிக்கமாட்டார்களென்று எப்படிச் சொல்ல முடியும்?" என்று மீண்டும் வினவினான் இளையபல்லவன்.

"சொல்ல முடியாது" என்று ஒப்புக்கொண்ட கண்டியத்தேவன், "நிலமார்க்கங்களை அடைத்துவிட்டு பீமனும் அனந்தவர்மனும் உங்களை நீர் வழியிலும் தப்ப விட' மாட்டார்கள். இத்தனை பெரிய நீர்க்குடங்கள் வண்டியில் போய் நீர்க்கரையில் படகுகளில் ஏற்றப்படு முன்பு சோதிக்கப்படலாம். அப்படிச் சோதிக்கப்பட்டால் அதில் ஆபத்து இருக்கத்தான் செய்யும்" என்று வலியுறுத்தினான்.

"ஆபத்து இரு வகையானது" என்று சுட்டிக் காட்டினான் இளைய பல்லவன்.

நீர்க்குடங்கள்மீது கண்களை நிலைக்கவிட்டு மற்றவர்களுக்கு முதுகைக் காட்டிக் கொண்டு நின்ற அமீர் சரேலெனத் திரும்பி, இளைய பல்லவனை "ஆபத்து இரு வகைப்பட்டதா?" என்று ஆச்சரியத்துடன் வினவினான். "ஆம் அமீர். இரு வகைப்பட்டது" என்று உறுதியுடன் கூறிய இளையபல்லவன் குரலில் வெறுப்பும் மண்டிக் கிடந்தது.

"எனக்குப் புரியவில்லை இளைய பல்லவரே" என்றான் அமீர்.

"புரியச் சொல்லுகிறேன், கேளுங்கள் அரபுநாட்டு வணிகரே உமது திட்டத்தில் உயிரைப் பற்றிய ஆபத்து ஒன்று. ஆனால் அதைவிட நாங்கள் பெரிதாக மதிக்கும் மானத்தைப் பற்றிய ஆபத்து ஒன்று. ஆக இரண்டு ஆபத்துக்கள் இருக்கின்றன. உயிரைப் பற்றி நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால் மானம், அதன் கதை வேறு" என்று உஷ்ணத்துடன் கூறிய இளையபல்லவன், "நீர்க்குடங்களில் நாங்கள் பதுங்கிச் சென்று சுங்க அதிகாரிகளிடம் அகப்பட்டுக் கொண்டால் பீமன் கையில் உயிர் போகும்.

ஆனால் மக்கள் கண்ணெதிரில் மானம் போய்விடும். உயிருக்காகக் குடங்களில் பதுங்கிய வீரர்கள் எனக் கலிங்கத்தின் நாவலர் கவிதைகளைப் பொழிவார்கள். சரித்திரத்தில் நாங்கள் பெரும் இடம்..." என்று கூறி? பேச்சை முடிக்காமலே விட்டான். உள்ளெழுந்த கோபம் அவன் நாவைக் கூடக் கட்டியிருந்தது. அவன் குரலிலிருந்த சீற்றம் காஞ்சனா தேவியின் கண்களிலும் தெரிந்தது.

ஆனால் ஆந்தச் சீற்றத்தைச் சிறிதும் இலட்சியம் செய்யாத அமீர் சொன்னான்: "தவறு, இளைய பல்லவரே? தவறு. தந்திரத்தால் தப்புவதை வீரத்தில் கண்ணியக் குறைவென்று சரித்திரத்தில் யாரும் கூறியதில்லை. எங்கள் நாட்டிலிருந்த பேரரசனான "கான்" மாளிகைக்குள் புரட்சி வீரர்கள் குடங்களில் பதுங்கிச் சென்று அரசனை வெற்றி கண்டதாகப் பழங்கதை இருக்கிறது. இந்த வீரர்களைப் பேடிகளென்று சரித்திரம் கூறவில்லை. பதுங்கித் தப்பிச் சென்ற வீரர் கதைகள். மாறுவேடம் பூண்டு மாவீரர் தப்பிய கதைகள் சரித்திரத்தில் பல உண்டு. அரக்கு மாளிகையிலிருந்து சுரங்க வழியில் தப்பி வேதியர் வேடம் தாங்கி மறைந்துறைந்ததாக மாவீரர் ஐவரைப் பற்றி உங்கள் மகாபாரதமும் கூறுகிறது.

அவர்களைக் கோழைகளாகப் புராணமோ சரித்திரமோ கூறவில்லை. பதுங்குவதும் மறைவதும் தவறல்ல. புலி பதுங்குவது பாய்வதற்காக பதுங்கும் புலியைக் கோழையென்று யாரும் சொல்வதில்லை" என்றான் அமீர் திட்டமாக.

"அப்படிப் பதுங்கித் தப்ப நான் இஷ்டப்படவில்லை" என்றான் இளைய பல்லவன்.

"எனக்கும் இஷ்டமில்லை" என்றாள் காஞ்சனாதேவி. அமீரின் பெருத்த உதடுகளில் புன்முறுவல் தவழ்ந்தது. "இந்தத் திட்டத்தில் ஆபத்தில்லை. வீரமில்லையென்று நினைக்கிறீர்கள்.

ஆனால் பேராபத்து இருக்கிறது. அதைச் சொன்னால் புரியும் உங்களுக்கு. கேளுங்கள்" என்று ஆபத்தையும் விளக்கினான் அமீர். அவன் விளக்கத்தைக் கேட்டதும், ஆபத்து பலத்த ஆபத்துதான் என்பதை இளையபல்லவன் புரிந்து கொண்டான்.

அந்த ஆபத்தில் தங்களுக்கு உயிர் போகவும் கூடும் என்பதும் அவனுக்குப் புரிந்திருந்தது. வாளுக்கு நிரம்ப வேலை இருக்கத்தான் செய்தது. அமீர் திட்டத்தில் ஆனால் திட்டம் சிறிது தவறினால்? காத்திருந்தது பெரும் படுகுழி!

### வீரர்கள் திடம்

சீனத்து மரக்கல நீர்க்குடங்களில் அநபாயன், இளையபல்லவன், காஞ்சனாதேவி, குணவர்மன் ஆகிய நால்வரையும் பதுங்க வைத்துத் துறைமுகம் கொண்டு சேர்த்து, அங்கிருந்து மரக்கலம் மூலம் சோழநாடு அனுப்பி விட அமீர் இட்ட திட்டம் வீரர் ஏற்க முடியாத பெரும் கோழைத் திட்டமாக ஆரம்பத்தில் இளைய பல்லவனுக்குத் தோன்றிய தென்றாலும், அந்தத் திட்டத்தையும், சூழ்ந்து நின்ற ஆபத்தையும் அமீர் விளக்கியதும் அது அத்தனை தூரம் கோழைத் திட்டமல்ல என்பதையும் தனது வீரமும் வாளின் இலாகவமும் அதில் பெரிதும் சோதிக்கப்படும் என்பதையும் இளைய பல்லவன் இறுதியில் புரிந்து கொள்ளவே செய்தான்.

அப்படிப் புரிந்து கொண்டதால் அந்தத் திட்டத்தின் மூலம் தனக்கு ஏற்படக்கூடிய ஆபத்தைப் பற்றி அவன் சிறிதும் பொருட்படுத்தவில்லையென்றாலும், அந்தத் திட்டத்தின் விளைவாகக் காஞ்சனா தேவிக்கு ஏற்படக்கூடிய கொடிய ஆபத்தைப் பற்றி உள்ளுக்குள் இலேசாக நடுங்கவும் செய்தான் சோழர்களின் படைத்தலைவன். இத்தனை ஆபத்து சூழ்ந்திருந்த அந்தத் திட்டத்தை தீவிர சிந்தனைக்குப் பின்பே அமீர் வகுத்திருக்கின்றான் என்பது அதைவிடச் சிறந்த ஒரு திட்டத்தைப் பாலூரின் அந்தச் சூழ்நிலையில் வேறு யாரும் வகுக்க முடியாது என்பதும் புலனாகிற்று அந்த வாலிப வீரனுக்கு.

அமீர் திட்டத்தை நிறைவேற்ற வேண்டிய முறைகளை விளக்க முற்பட்டது முதலே அதில் கலந்து கிடந்த பல ஆபத்துகளையும் புரிந்து கொண்ட இளையபல்லவன், அமீரின் சொற்களைக் குருவிடம் பாடம் கேட்கும் சீடன் போல் மிகுந்த எச்சரிக்கையுடனும் கவனத்துடனும் கேட்டான்.

"இந்தத் திட்டத்தில் ஆபத்தில்லை. இது கோழையின் திட்டம் என்று நினைக்கிறீர்கள் இளைய பல்லவரே! நன்றாகக் கேளுங்கள் நான் சொல்வதை!" என்று கூறி அறையைப் பெரிதும் அடைத்து நின்ற அந்த நான்கு நீர்க்குடங்களையும் காட்டி "இந்த நீர்க் குடங்களின் பரிமாணத்தைப் பாருங்கள்.

இந்த ஒவ்வொரு குடத்தையும் உள்ளே நீரோ வேறு பொருளோ இன்றித் தூக்குவதற்குக் குறைந்த பட்சம் நான்கு ஆட்கள் தேவை. அதில் ஒரு மனிதரையும் பதுங்க வைத்தால் ஆறு ஆட்கள் இல்லாமல் தூக்க முடியாது. ஆகவே இந்த நான்கு குடங்களில் உங்களையும் அநபாயரையும் கடாரத்து அரச குலத்தார் இருவரையும் பதுங்க வைத்தால் வண்டியில் இவற்றைத் தூக்கிவைப்பதற்கும் இறக்குவதற்கும் இருபத்து நான்கு அடிமைகள் தேவையாயிருக்கும்.

அதுமட்டுமல்ல. இந்த நீர்க்குடங்கள் நான்கை மட்டும் நாம் கொண்டு போக முடியாது. இவற்றுடன் குருநாதர் மரக்கலத்திலிருந்து வரும் இன்னும் ஐந்தாறு குடங்களையும் கலக்க வேண்டும். (தொடரும்)

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : எங்க ஊர் ராஜா
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : எம்.எஸ்.விஸ்வநாதன்
பாடியவர் : ரி.எம்.சௌந்தரராஜன்



யாரை நம்பி நான் பொறந்தேன்
போங்கடா போங்க
என் காலம் வெல்லும் வென்ற பின்னே
வாங்கடா வாங்க

யாரை நம்பி நான் பொறந்தேன்
போங்கடா போங்க
என் காலம் வெல்லும் வென்ற பின்னே
வாங்கடா வாங்க

குளத்திலே தண்ணி இல்லே
கொக்குமில்லே மீனுமில்லே
குளத்திலே தண்ணி இல்லே
கொக்குமில்லே மீனுமில்லே
பெட்டியிலே பணமில்லே
பெத்த புள்ளே சொந்தமில்லே

யாரை நம்பி நான் பொறந்தேன்
போங்கடா போங்க
என் காலம் வெல்லும் வென்ற பின்னே
வாங்கடா வாங்க

தென்னைய பெத்தா இளநீரு
பிள்ளைய பெத்தா கண்ணீரு
தென்னைய பெத்தா இளநீரு
பிள்ளைய பெத்தா கண்ணீரு
பெத்தவன் மனமே பித்தம்மா
பிள்ளை மனமே கல்லம்மா
பானையிலே சோறிருந்தா
பூனைகளும் சொந்தமடா
சோதனையை பங்கு வச்சா
சொந்தமில்லே பந்தமில்லே


யாரை நம்பி நான் பொறந்தேன்
போங்கடா போங்க
என் காலம் வெல்லும் வென்ற பின்னே
வாங்கடா வாங்க

நெஞ்சமிருக்கு துணிவாக
நேரமிருக்கு தெளிவாக
நெஞ்சமிருக்கு துணிவாக
நேரமிருக்கு தெளிவாக
நினைத்தால் முடிப்பேன் சரியாக
நீ யார் நான் யார் போடா போ

ஆடியிலே காத்தடிச்சா ஐப்பசியில் மழை வரும்
தேடி வரும் காலம் வந்தா
செல்வமெல்லாம் ஓடி வரும்

யாரை நம்பி நான் பொறந்தேன்
போங்கடா போங்க
என் காலம் வெல்லும் வென்ற பின்னே
வாங்கடா வாங்க
என் காலம் வெல்லும் வென்ற பின்னே
வாங்கடா வாங்க
வாங்கடா வாங்க வாங்கடா வாங்க

# உங்களுக்கு 40 வயதாகி விட்டதா?



**வா**ழ்க்கையில் பல விடயங்களைத் தப்பும் தவறுமாகச் செய்து அடிபட்டு அனுபவப்பட்டு புரிந்து கொள்ளும் போது வயது 40 ஆகிவிடுகிறது.

இந்த வயதுக்குப் பிறகு எதைச் செய்ய வேண்டும், எதைச் செய்யக் கூடாது என்று முடிவெடுப்பார்கள். முக்கியமாக முதலீட்டு விடயங்களில் 40 வயதுக்காரர்களுக்கு கவனம் கொஞ்சம் அதிகமாகவே இருக்கும்.

இப்போது நீங்கள் 40 வயதுக்காரராக இருந்தாலும் 40 வயதை நெருங்குபவராக இருந்தாலும் இனி நீங்கள் என்ன செய்ய வேண்டும். 40 வயதில் ஒருவர் முதலீட்டுத் திட்டங்களை எப்படி வகுத்துக்கொள்ள வேண்டும், இந்த வயதுக்குப் பிறகு பொருளாதார ரீதியாக செய்ய வேண்டிய விடயங்கள் என்னென்ன, தவிர்க்க வேண்டிய தவறுகள் என்னென்ன என்கிற கேள்விகளை நிதி ஆலோசகர் யு.என்.சுபாஷிடம் கேட்டோம். நாம் கேட்ட அனைத்து கேள்விகளுக்கும் விளக்கமான பதிலைத் தந்தார் அவர்.

### பதற்றம் வேண்டாம்...

"40 வயதுவரை எந்த வகையிலும் திட்டமிடாமல் வாழ்ந்து விட்டோமே, இனி இருக்கிற 10, 20 ஆண்டுகளில் பணம் சேர்க்க வேண்டுமே என்று நினைத்து பதற்றப்படாதீர்கள். பதற்றம் மேலும் சில தவறுகளைச் செய்ய வைத்து விடும்.

இனிமேலாவது வாழ்க்கையை நீங்கள் திட்டமிட்டு நடத்தினால்தான் சிக்கலின்றி தப்பிக்க முடியும். அடுத்த 15 முதல் 20 ஆண்டு காலத்துக்கு முறையாக முதலீடு செய்து வருமானம் ஈட்டலாம்.

நீண்டகால முதலீட்டுக்கான வாய்ப்பு உங்களுக்கு உள்ளதால், முறையான அஸெட் அலகேஷன் செய்து முதலீடு செய்தால் நீங்கள் ஓரளவுக்காவது பணம் சேர்க்க முடியும் என்பது நிச்சயம்.

### செலவுத் திட்டம் உள்ளதா...?

இந்த வயதில் உள்ளவர்களுக்கு வீட்டுக் கடன், வாகனக் கடன் அல்லது வேறு ஏதாவது கடன்கள் இருக்க அதிக வாய்ப்பிருக்கிறது.

அதனால் கடன் இருப்பவர்கள் தங்களுடைய மாத வருமானத்தில் 30% தொகையை இ.எம்.ஐ.க்காக ஒதுக்கலாம். மாத/வருட வருமானத்தில் 30 சதவிகிதத்துக்கு மேல் இ.எம்.ஐ. கட்டுகிற மாதிரி கடன்களை வாங்கி வைத்திருப்பது ஆபத்தானது. மீதமிருக்கும் 70% தொகையில் 35% தொகையை வீட்டுத் தேவைகளுக்காகப் பயன்படுத்திக் கொள்ளலாம்.

அதாவது; மளிகைச் செலவுகள், கல்விச் செலவுகள், மருத்துவச் செலவுகள், வீட்டு வாடகை போன்ற தேவைகளுக்காக ஒதுக்கிக் கொள்ளலாம். மீதமிருக்கும் 35% தொகையைக் கட்டாயமாக முதலீட்டுக்காக ஒதுக்க வேண்டும். கடன் எதுவும் இல்லை அல்லது கடன் களுக்கான இ.எம்.ஐ. பெரிய அளவில் இல்லை என்றால் அதையும் சேமிப்பு மற்றும் முதலீட்டுக்காக ஒதுக்கும்போது, நீண்டகால இலக்குகளை நீங்கள் எதிர்பார்க்கும் காலத்தை விட முன்பாகவே அடைந்து விடலாம்.

### முதலீட்டு போர்ட்ஃபோலியோ!

40 வயது என்றவுனே பயமும் பதற்றமும் அடையத் தேவை யில்லை. உங்களுடைய முதலீட்டுக்காக ஒதுக்கியிருக்கும் தொகையில் 60% வரை ஈக்விட்டி சார்ந்த முதலீட்டுத் திட்டங்களில் முதலீடு செய்யலாம்.

### தங்கம், சிட் ஃபண்ட், ரியல் எஸ்டேட்...

பெரும்பாலான மக்கள் தங்க நகைகளை வாங்கி வைப்பதை சிறந்த முதலீடாகப் பார்க்கிறார்கள். ஆனால், தங்க நகைகளை வாங்கி வைத்து, பயன்படுத்துவதால் நாம் மனம் மகிழலாமே தவிர, அதில் பல அசௌகரியங்களும் கண்ணுக்குத் தெரியாத இழப்புகளும் இருக்கும் என்பதால் அது சரியான முதலீட்டு முறை இல்லை.

### டேர்ம் மற்றும் ஹெல்த் இன்ஷூரன்ஸ்!

"ஆயுள் காப்பீடு என்று வரும்போது பலரும் என்டோவ் மென்ட் பாலிசிகளையே எடுக்கிறார்கள். இரண்டு காரணங்களுக்காக இந்த என்டோவ் மென்ட் பாலிசிகளை எடுப்பதைத் தவிர்க்கலாம்.

ஒன்று, அதிகமான பிரீமியம் இரண்டாவது, குறைவான கவரேஜ். ரூ.2 இலட்சம், ரூ.3 இலட்சம் என்பது போல் கவரேஜ் கொண்ட பாலிசியின் இழப்பீடு மூலம் மனைவியும் இரண்டு குழந்தைகளும் எப்படிச் சமாளிப்பார்கள்? எனவே, குறைந்த பிரீமியத்தில் அதிகம் கவரேஜ்தரும் டேர்ம் இன்ஷூரன்ஸ் பாலிசிகளை எடுப்பதே சரி.

### அவசரகால நிதி அவசியம் வேண்டும்!

ஒருவர் சம்பாதிக்க ஆரம்பித்துவிட்டால், அவர் செய்ய வேண்டிய முதல் நடவடிக்கை, டேர்ம் மற்றும் ஹெல்த் இன்ஷூரன்ஸ் எடுப்பது, அவசரகால நிதியைச் சேமிப்பது. இந்த இரண்டும் செய்து விட்டாலே மற்ற முதலீடு சார்ந்த விடயங்கள் ஸ்மூத்தாக இருக்கும்.

நீங்கள் இந்த 40 வயதில் கூட, அவசரகால நிதியைச் சேமித்து வைக்காமல் இருந்தால், முதலில் அதற்கான சேமிப்புத் தொகையை மாதம்தோறும் ஒதுக்க ஆரம்பியுங்கள்.

குறைந்தபட்சம் 9 மாதங்கள் குடும்பத்தை வழிநடத்த தேவையான தொகை கையிருப்பாக இருக்க வேண்டும். அதிகபட்சம் 12 மாதங்களுக்கான தொகையை சேமித்து வைக்கலாம். கொரோனா காலத்தில், இந்த நிதி இல்லா மல்தான், பலரும் கஷ்டத்தைச் சந்தித்தார்கள் என்பதைக் கவனத்தில் கொள்ளுங்கள்.


### அதிகம் செல்வு வேண்டாம்!

இந்த வயதில்தான், பெரும்பாலானவர்கள் அலுவலகத்தில் சீனியராக இருப்பார்கள். அதனால் அதற்கு ஏற்றவாறு அவர்களுடைய வருமானமும் அதிகமாக இருக்கும். பொதுவாக வருமானம் அதிகமாக இருக்கும் போது மனம் அதிகமாகச் செலவு செய்ய நினைக்கும்.

ஆனால், இந்த நேரத்தில்தான் சிக்கனப்படுத்த வேண்டும். சேமிப்பு, முதலீடு போக செலவு செய்ய ஆரம்பிப்பவர்கள்தான், தன் எதிர்கால இலக்குகளை விரைவில் அடைகிறார்கள். அதனால் செலவுகளை அதிகம் செய்பவர்கள் உடனடியாகக் குறைத்துக் கொள்ளுங்கள்" என்றார் அவர்.

40 வயதை எட்டவிருப்பவர்கள் இந்த விடயங்களை எல்லாம் மனதில் கொண்டு நடப்பார்களா?

## சைக்கோ வில்லனாக பிரபுதேவா



திரிஷா இல்லன்னா நயன்தாரா, அன்பானவன் அசராதவன் அடங்காதவன் படங்களை இயக்கிய ஆதிக் ரவிச்சந்திரன் தற்போது பிரபுதேவா நடிப்பில் இயக்கியுள்ள படம் பஹீரா. இப்படத்தின் டீசர் தற்போது வெளியிடப்பட்டுள்ளது. அதில், பெண்களை வேட்டையாடுவதை பொழுதுபோக்காக வைத்திருக்கும் ஒரு அதிரடியான சைக்கோ கொலையாளி வேடத்தில் நடித்துள்ளார் பிரபுதேவா. இதுவரை இல்லாத அளவுக்கு முதன் முறையாக நெகட்டிவ் ரோலில் பிரபுதேவா மிரட்டலாக நடித்துள்ள இந்தப் படத்தில் அமைரா தஸ்தூர், ஜனனி அய்யர், சஞ்சிதா ஷெட்டி, சாக்ஷி அகர்வால், காயத்ரி சங்கர் உள்ளிட்ட நடிகைகள் நாயகிகளாக நடித்துள்ளனர்.

## சித்துவின் "கால்ஸ்" புகைப்படங்களுக்கு யு/ஏ சான்று





சின்னத்திரை மூலம் தமிழ் ரசிகர்களுக்கு அறிமுகமாகி மக்கள் மனதில் நீங்கா இடம் பிடித்தவர் வி.ஜே சித்ரா. கடந்த டிசெம்பர் மாதம் திடீரென தற்கொலை செய்து கொண்டது அவரது ரசிகர்களை அதிர்ச்சிக்கு ஆளாக்கியது. இன்னமும் அவரது மரணம் பற்றிய பல்வேறு சந்தேகங்களை சமூக வலைத்தளங்களில் எழுப்பி வருகின்றனர்.அவர் கடைசியாக நடித்த படமான கால்ஸ் இம்மாதம் 26ஆம் திகதி ரிலீசாக இருக்கிறது. ஜெ.சமரீஷ் இயக்கியுள்ள இப்படத்தின் டிரைலர் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற்பை பெற்றது. சித்ராவின் சமீப கால நிகழ்வுகள் படத்தின் டிரைலருடன் ஒத்துப்போவது ரசிகர்களை அதிர்ச்சி அடைய வைத்துள்ளது. இதுவரை 1.70 மில்லியனுக்கு மேற்பட்ட பார்வையாளர்களால் பார்க்கப்பட்டு வருகிறது.இதனால் கால்ஸ் படம் மீதான எதிர்பார்ப்பும் அதிகரித்துள்ளது. இந்நிலையில் அப்படத்தின் படப்பிடிப்பின் போது எடுக்கப்பட்ட சில புகைப்படங்கள் இணையத்தில் வெளியாகியுள்ளன. அதனை சித்துவின் ரசிகர்கள் வைரலாக்கி வருகின்றனர். அதோடு இந்தப்படத்திற்கு சென்சாரில் யு/ஏ சான்று கிடைத்துள்ளது

## சகோதரியை பாராட்டிய கீர்த்தி



தமிழ் சினிமாவில் முன்னணி நடிகையாக வலம் வரும் கீர்த்தி சுரேஷ். இவர் தற்போது ரஜினிகாந்துடன் அண்ணாத்த, செல்வராகவனுடன் சாணிக் காயிதம் உள்ளிட்ட தமிழ் படங்களிலும், ஒரு சில மலையாளம் மற்றும் தெலுங்கு படங்களிலும் கவனம் செலுத்தி வருகிறார். இந்நிலையில் தனது சகோதரி ரேவதி சுரேஷ் உடல் எடையைக் குறைத்திருப்பதை அறிந்து தான் பெருமைப்படுவதாக கூறியுள்ளார். உடல் எடை அதிகமாக இருந்தபோது எடுக்கப்பட்ட புகைப்படத்தையும் தற்போதைய புகைப்படத்தையும் இன்ஸ்டாகிராமில் பதிவிட்டிருக்கும் ரேவதி சுரேஷ், "நான் அதிக எடையுடன் குண்டாக இருந்ததால் என்னை எப்போதும் என் தாய் மற்றும் தங்கையுடன் ஒப்பிட்டு பலரும் விமர்சிப்பார்கள்.ஒரு கட்டத்தில் என்னைப் பார்த்து நானே வெறுக்க ஆரம்பித்தேன். என்னை எனது சகோதரி கீர்த்தி சுரேஷ் எப்போதும் பாதுகாத்திருக்கிறார். என்னை வலிமையான, திறமையான பெண்ணாக பார்ப்பதாக எனது அம்மா என்னிடம் கூறியிருக்கிறார்.அதையே என் கணவரும் சொல்லக்கேட்கும் போது வியப்பாக இருந்தது. எனது யோகா டீச்சர் எனக்குள் இருக்கும் பலத்தை புரிய வைத்து எனக்கு பயிற்சி அளித்தார்கள். அதன் விளைவாக இப்போது 20 கிலோவுக்கும் மேல் எடை குறைந்துள்ளது" எனக் கூறியுள்ளார். தனது சகோதரியின் இந்த பதிவுக்கு கமெண்ட் செய்திருக்கும் நடிகை கீர்த்தி சுரேஷ், "அப்படி போடு லவ், லவ், லவ். உன்னை நினைத்து பெருமைப்படுகிறேன்" என்று கூறியுள்ளார்.

## மார்ச் 12 இல் மீண்டும் கூட்டுக் குடும்பத்தோடு வருகிறார் சசிகுமார்



சசிகுமார் படங்கள் என்றால் ஒன்று நட்பை பேசும் இல்லாவிட்டால் கூட்டு குடும்ப பிரச்சினைகளை பேசும். இதில் இரண்டாவது வரிசையில் வருகிறது ராஜவம்சம். செந்தூர் பிலிம் இன்டர்நஷனல் சார்பில் டிடி.ராஜா தயாரித்துள்ள இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் கதிர்வேலு இயக்கியுள்ளார்.இவர் இயக்குநர் சுந்தர்.சியின் உதவியாளர். அதனால் அவரைப்போலவே பெரிய நட்சத்திர கூட்டத்தை வைத்து படத்தை இயக்கி உள்ளார். சசிகுமார் ஜோடியாக நிக்கி கல்ராணி நடித்துள்ளார். இவர்களுடன் ராதா ரவி, தம்பி ராமையா, விஜயகுமார், சதிஷ், மனோபாலா, ரமேஷ் கண்ணா, சிங்கம் புலி, யோகி பாபு, கும்கி அஸ்வின், ஆடம்ஸ், சரவணா சக்தி,மணி சிலம்பம் சேதுபதி, ரமணி, ராஜ்கபூர், தாஸ், நமோ நாராயணன், சுந்தர், சாம்ஸ், சமர், ரேகா, சுமித்ரா, நிரோஷா, சந்தான லட்சுமி, சசிகலா, யமுனா, மணி சந்தனா, மணிமேகலை, மீரா, லாவண்யா, ரஞ்சனா, ரஞ்சிதா, ரம்யா, தீபா என ஒரு நட்சத்திர பட்டாளமே நடித்துள்ளனர்.சித்தார்த் ஒளிப்பதிவு செய்ய, சாம்.சி.எஸ் இசை அமைத்துள்ளார். எதிர்வரும் மார்ச் 12ஆம் திகதி இத்திரைப்படம் வெளிவருகிறது.

## ரிஸ்க் எடுக்க தயாராகும் பிரணிதா



பொதுவாக ஹீரோக்கள் தான் மிக வித்தியாசமான கதாபாத்திரங்களுக்காக ரிஸ்க் எடுத்து தங்களது உடல் எடையை கூட்டி குறைப்பார்கள். நடிகைகளில் அனுஷ்கா, கங்கனா போன்று ஒரு சிலர் தான் அப்படி செய்தார்கள். இஞ்சி இடுப்பழகி படத்திற்காக அப்படி உடல் எடையை கூட்டிய அனுஷ்கா, அதன்பின் எடையை குறைக்கவே ரொம்பவே சிரமப்பட்டதும் தெரிந்த கதை தான். தற்போது அதேபோன்ற ஒரு ரிஸ்க் எடுக்க தயாராகி விட்டார், சகுனி பட நடிகை பிரணிதா சுபாஷ். ஹிந்தியில் அஜய் தேவ்கன் நடிக்கும் படம் மூலம் அடியெடுத்து வைக்கும் பிரணிதாவுக்கு அந்தப் படத்தில் இரு வேடங்கள் என சொல்லப்படுகிறது. அதில் ஒரு கரக்டருக்காக உடல் எடையை கூட்டி நடிக்க வேண்டியுள்ளதாம்.இதற்காக செயற்கையான ஏற்பாடுகள் எதையும் விரும்பாத பிரணிதா தனது உடல் எடையை கூட்டும் ரிஸ்க்கை எடுக்க துணிந்து விட்டாராம்.

## கவின் இயக்கத்தில் நடிக்கும் முகின்



பிக்பாஸ் நிகழ்ச்சி மூலம் பல ரசிகர்களை கொள்ளையடித்தவர் முகின். இவர் தற்போது கதாநாயகனாக படங்களில் நடித்து வருகிறார். இவர் நடிப்பில் தற்போது உருவாகி வரும் புதிய படத்திற்கு வேலன் என்று தலைப்பு வைத்திருக்கிறார்கள். இப்படத்தை கவின் இயக்குகிறார். தயாரிப்பாளர் கலைமகன் முபாரக் ஸ்கைமன் பிலிம்ஸ் இன்டர்நஷனல் நிறுவனம் சார்பில் இப்படத்தை தயாரிக்கிறார். அழகான ரொமான்ஸ் காமெடி படமாக உருவாகும் இதில் முகினுக்கு ஜோடியாக மீனாட்ஷி நடிக்கிறார். மேலும் பிரபு, சூரி, மரியா, தம்பி ராமையா, ஹரீஷ் பேரடி, ஸ்ரீரஞ்சனி, சுஜாதா ஆகியோர் முக்கிய பாத்திரங்களில் நடிக்கின்றனர். இப்படத்தின் படப்பிடிப்பு அரசு அறிவித்துள்ள கொரோனா வழிகாட்டு முறைகளை, முறையாக கடைப்பிடித்து, பாதுகாப்பான முறையில் நடைபெற்று வருகிறது. படத்தின் பர்ஸ்ட் லுக், டீசர் பற்றிய அறிவிப்புகள் மிக விரைவில் அதிகாரபூர்வமாக அறிவிக்க இருக்கிறார்கள்.

# உலகின் பணக்கார விளையாட்டு வீரர்

கூடைப்பந்து விளையாட்டு வீரர் மைக்கேல் ஜோர்டன் விளையாட்டு வீரர்களிலேயே அதிகம் சம்பாதித்தவர் (இவரது சொத்து மதிப்பு 1.6 பில்லியன் அமெரிக்க டொலர்கள்) என்று பெயர் பெற்றவர். 1963 ஆம் ஆண்டு நியூ யோர்க்கில் உள்ள புரூக்ளின் நகரில் பிறந்தார். வங்கி ஊழியரான அவரது அப்பாவுக்கு 1968 ஆம் ஆண்டில் வடக்கு கரோலினாவுக்கு இடமாற்றம் கிடைக்க, அங்கு குடியேறினார்.


கூடைப்பந்து வீரரான மஜிக் ஜான்சனின் ஆட்டங்களால் கவரப்பட்ட மைக்கேல் ஜோர்டன், அவரைப்போன்று தானும் ஒரு சிறந்த கூடைப்பந்து வீரராக விரும்பினார். ஆரம்ப காலகட்டத்தில் தனது தந்தையிடம் பயிற்சி பெற்றார். கூடைப்பந்து விளையாட்டில் மட்டுமன்றி பேஸ்போல் மற்றும் கால்பந்து போட்டிகளிலும் அவர் வல்லவராக இருந்தார்.

பின்னாளில் பள்ளிகளுக்கு இடையிலான கூடைப்பந்து போட்டிகளில் அதிக புள்ளிகளைப் பெற்றதால் சிறு வயதிலேயே உள்ளூரில் பிரபலமானார். சிறந்த கூடைப்பந்து வீரராக இருந்ததால் விளையாட்டு கோட்டாவில் அவருக்கு வடக்கு கரோலினா பல்கலைக்கழகத்தில் இடம் கிடைத்தது.

அங்கு படிப்போடு சேர்த்து, அவரது கூடைப்பந்து ஆடும் திறனும் மெருகூட்டப்பட்டது. 1984 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டியில் பங்கேற்ற அமெரிக்க அணியில் மைக்கேல் ஜோர்டன் இடம்பெற்றிருந்தார். அந்த அணி, தங்கப் பதக்கம் வெல்ல, மைக்கேல் ஜோர்டனின் வாழ்க்கையில் திருப்பு முனை ஏற்பட்டது.

கல்லூரிப் படிப்பை முடிக்கும்முன்பே 1984 இல் அமெரிக்காவின் புகழ்பெற்ற என்.பி.ஏ.கூடைப்பந்து தொடரில் சிகாகோ புள்ஸ் அணிக்காக ஆட தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அக்கிளப்புக்காக 7 ஆண்டுகள் ஆடிய மைக்கேல் ஜோர்டன், ஒவ்வொரு போட்டியிலும் சராசரியாக 28.2 புள்ளிகளை ஈட்டினார். என்.பி.ஏ.கூடைப்பந்து போட்டிகளின் வரலாற்றிலேயே மிகச் சிறந்த வீரராகக் கருதப்படும் மைக்கேல் ஜோர்டன் பல்வேறு விருதுகளை வாங்கிக் குவித்துள்ளார்.




புகழ்பெற்ற மேற்கத்திய விளையாட்டு பத்திரிகையான "ஸ்போர்ட்ஸ் இல்லஸ்ட்ரேட்டட் மகசின்" 50 ஆண்டுகளின் மிகச்சிறந்த விளையாட்டு வீரர் என்ற விருதை 1996 இல் இவருக்கு வழங்கியது.

# ரொனால்டோவும் இரத்ததானமும்



கால்பந்து உலகில் கோடிக் கணக்கான ரசிகர்களைக் கொண்டவர் கிறிஸ்டியானோ ரொனால்டோ. இவரின் முழுப்பெயர் 'கிறிஸ்டியானோ ரொனால்டோ டோஸ் சாண்டோஸ் அவிரோ' என்பதாகும். கால்பந்து போட்டிகளின் போது இந்த முழுப்பெயரையும் வர்ணனையாளர் சொல்லிமுடிப்பதற்குள் பந்து பலரையும் கடந்துவிடும் என்பதால் கிறிஸ்டியானோ ரொனால்டோ என்று சுருக்கி அழைக்கிறார்கள்.

ரொனால்டோவின் அப்பா ஜோஸ், தோட்டக்காரராக இருந்தார். குடிப்பழக்கம் கொண்டவரான அவர், குடும்பத்தை சரியாக கவனிக்கவில்லை. இதனால் ரொனால்டோவின் அம்மாதான், பல வீடுகளில் சமையல் மற்றும் துணி துவைக்கும் வேலைகளைச் செய்து ரொனால்டோவைப் படிக்க வைத்தார். தங்களை படிக்க வைப்பதற்காக அம்மா, இரவில் நீண்ட நேரம் வரை பல்வேறு வீடுகளிலும் பணியாற்றி வந்ததாக ரொனால்டோ ஒரு பேட்டியில் குறிப்பிட்டுள்ளார்.

அன்றைய தினம் தனது அம்மா பணத்துக்காக பட்ட கஷ்டங்களை ஈடு செய்யும் வகையில் இன்று கோடி கோடியாகச் சம்பாதித்து வருகிறார் கிறிஸ்டியானோ ரொனால்டோ.


இரத்ததானம் செய்வதில் கிறிஸ்டியானோ ரொனால்டோவுக்கு விருப்பம் அதிகம். பலமுறை இவர் தனது இரத்தத்தை தானமாக கொடுத்துள்ளார். செஞ்சிலுவை சங்கத்தின் விதிகளின் படி ஒருவர் தன் உடலில் பச்சை குத்திக்கொண்டால், குறைந்தபட்சம் அடுத்த 4 மாதங்களுக்கு இரத்ததானம் செய்யக் கூடாது.

தான் பச்சை குத்திக்கொண்டால் அடுத்த 4 மாதங்களுக்கு இரத்ததானம் செய்ய முடியாமல் போய்விடுமோ என்ற ஒரே காரணத்துக்காக பச்சை குத்தாமல் இருக்கிறாராம் ரொனால்டோ.

இரத்ததானம் செய்வதோடு மட்டுமன்றி, ஒருமுறை தனது எலும்பு மஜ்ஜையையும் ரொனால்டோ தானமாக கொடுத்துள்ளார் என்பது நெகிழ்ச்சி அளிக்கிறது.

# நீளம் பாய்தல் போட்டியின் வரலாறு

கிரேக்கத்தில் பண்டைய காலத்தில் நடந்த ஒலிம்பிக் போட்டியிலேயே நீளம் தாண்டும் போட்டி இருந்ததாக கூறப்படுகிறது. அக்காலத்தில் நீளம் தாண்டும் போட்டியில் பங்கேற்கும் வீரர்கள், தங்கள் கைகளில் கனமான பொருட்களை தூக்கிக்கொண்டு வருவார்களாம். தாங்கள் நீளம் தாண்ட வேண்டிய இடம்வரை அந்த கனமான பொருட்களை கைகளில் வைத்திருப்பார்கள். நீளம் தாண்டும் நேரத்தில், தங்கள் கைகளை வீச, அந்தப் பொருட்களின் கனம் அவர்களை நீண்ட தூரம் தாண்டவைக்கும். அதே நேரம் நீளம் தாண்டும்போது அந்த கனமான பொருட்களை பாதியிலேயே கீழே போட்டு விடுவார்கள். இதன்மூலம் அதிக தூரத்தை அவர்கள் எட்ட முடியும்.



1896 ஆம் ஆண்டில் நவீன ஒலிம்பிக் போட்டிகள் தொடங்கிய காலம் முதலே அதில் நீளம் தாண்டும் போட்டி ஒரு அங்கமாக இருந்து வருகிறது. ஆனால் நவீன ஒலிம்பிக் போட்டிகளில் பங்கேற்ற வீரர்கள், முந்தைய காலத்தைப் போன்று நீளம் தாண்டும்போது எந்த கனமான பொருட்களையும் தூக்கிச் சென்றதில்லை. இப்போட்டியில் அமெரிக்காவைச் சேர்ந்தவர்களே பெரும்பாலும் ஆதிக்கம் செலுத்தி வந்துள்ளனர். ஒலிம்பிக் போன்ற சர்வதேச போட்டிகளைப் பொருத்தவரை நீளம் தாண்டும் போட்டி, 6 சுற்றுகளைக் கொண்டதாக இருக்கும். இதில் முதல் 3 சுற்றுகளில் அதிக நீளம் தாண்டிய முதல் 8 வீரர்கள் மட்டும், அடுத்த 3 சுற்றுகளுக்கு தேர்ந்தெடுக்கப்படுவர். பின்னர் அவர்களில் இருந்து சிறந்த வீரர், வெற்றியாளராக தேர்வு செய்யப்படுவார்.

1935 ஆம் ஆண்டு, அமெரிக்காவின் ஜெஸ்ஸி ஓவன்ஸ், 8.13 மீற்றர் நீளம் தாண்டினார். இது வெகு காலத்துக்கு உலக சாதனையாக இருந்தது. பிற்காலத்தில் 1960 ஆம் ஆண்டு, 8.90 மீற்றர் நீளம் தாண்டி பாப் பீமோன் அதை முறியடித்தார். பிற்காலத்தில் 1991 ஆம் ஆண்டு 8.95 மீற்றர் நீளம் தாண்டி மைக் பொவல் புதிய சாதனை படைத்தார்.

# அலெக்சாண்டரியாவின் கலங்கரை விளக்கம்

(14 ஆம் திகதிய தொடர்ச்சி)

பக்கத்துக்கு 28 அடிகள் வீதம் சதுரமாக கட்டப்பட்ட தளத்தின் மீது கலங்கரை விளக்கம் அமைக் கப்பட்டிருந்தது. மூன்று அடுக்குக ளாகக் கட்டப்பட்ட அந்தக் கல ங்கரை விளக்கத்தின் அடிப்பகுதி சதுரமாகவும் நடுப்பகுதி எண் கோண வடிவத்திலும் உச்சிப்பகுதி உருண்டை வடிவத்திலும் இருந்தது.

கலங்கரை விளக்கத்தின் அடித் தளம் சிவப்பு வர்ண கிரானைட் கற்களால் அழகுற உருவாக்கப்படி ருந்தது. அது கடல் காற்றாலும் அலையின் சீற்றத்தாலும் சிதை வுறா வண்ணம் கிரேக்கத்தின் நுட் பமான கட்டடக்கலை நேர்த்தியு டன் வடிவமைக்கப்பட்டிருந்தது. அடித் தளத்தின் உயரம் மட்டும் 55 அடி.

பெருவாரியான மக்கள் அதைச் சுற்றுலாத் தலமாகக் கருதி அன்றா டம் வந்து போனதால் அங்கு சில உணவகங்கள் இயங்கி வந்தன. அங்கிருந்து மேலே செல்ல உள் ளுக்குள்ளேயே சுழல் வடிவப் படி கள் இருந்திருக்கின்றன. 18 மீற்றர் உயரத்தில் இருந்த எண்கோண பகுதியில் மக்கள் நின்று கடலைப் பார்க்கும் அளவு அலங்கார வளை வுகளுடன் கூடிய மாடங்கள் அமை க்கப்பட்டிருந்தன.

அதற்கும் மேலே மூன்றாவதாக ஏழு மீற்றர் உயரத்தில் அமைக்கப் பட்ட மேல் பகுதியில் மிகப் பிரம் மாண்டமான கண்ணாடிகள் பதிக்க ப்பட்டிருந்தன. பகல் நேரத்தில் சூரி யனின் ஒளி பட்டு அவை பிரகா சிப்பதன் மூலம் கலங்கள் கடற்க ரையை அடையாளம் காண முடியும்.

இரவில் அங்கு அமைக்கப்பட்ட நெருப்பு உலையில் தீப்பந்தங்கள் கொளுத்தப்பட்டு எல்லா திசைக ளிலும் தெரியும்படி வைக்கப்பட் டன. கடலில் 100 மைல்கள் தூரம் வரை வரும் கப்பல் பயணிகள் அதன் மூலம் கரையை அடையா ளம் கண்டனர். உச்சிப்பகுதியின் நான்கு மூலைகளிலும் ட்ரைடன் தேவதைகளின் சிலைகள் வைக்கப் பட்டிருந்தன. நடுவில் மிகப்பெரி தான கிரேக்கத்தின் கடல் கடவுள் பொஸைடனின் சிலை அமைக்கப் பட்டிருந்தது. பொஸைடன் சிலை யின் இரு பக்கமும் ஸோயுஸ் கட வுளின் இரட்டைக் குழந்தைகளான டையோஸ்கன் மற்றும் லெடாவின் சிலைகள் காவல் தெய்வங்களாக வைக்கப்பட்டு இருந்தன.

புயல் காற்றிலிருந்தும் கடல் அரி ப்பிலிருந்தும் கடலின் கொடிய விலங்குகளிலிருந்தும் பொஸைடன் கடவுள்தான் தங்களைக் காப்பதாக கிரேக்க மக்களின் நம்பிக்கை.

கிட்டத்தட்ட ஐநூறு ஆண்டுகள் அசைக்க முடியாத உறுதியுடன் கடல் பயணிகளுக்கு உறுதுணை யாய் விளங்கிய அலெக்சாண்ட் ரியா கலங்கரை விளக்கத்தின் உச் சிப்பகுதி மட்டும் கி.பி.796 இல் திடீரென இடிந்து விழுந்தது.




அது மறுபடி பழுது பார்க்கப்ப டவில்லை என்றாலும் மேற்கொ ண்டு எந்தச் சேதாரமும் ஏற்படா மல் எழுபது ஆண்டு காலம் அப் படியே இருந்தது.

அலெக்சாண்ட்ரியா அதன் கல ங்கரை விளக்கம் காரணமாக புகழ் பெறுவதை விரும்பாத எதிரி அரச னான கொன்ஸ்டான்டி நோபுளின் மன்னன் அந்தக் கட்டடத்தின் கீழே விலை மதிக்க முடியாத பொக் கிஷங்கள் அடங்கிய புதையல் இருப்பதாக ஒரு வதந்தியைக் கிளப் பினான்.

அலெக்சாண்ட்ரியாவில் கி.பி. 868 இல் ஆட்சி புரிந்த சுல்தான் அகமது இபுன் துலான் அதை நம்பி கலங்கரை விளக்கத்தை இடிக்க முற்பட்டான். (தொடரும்)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2234

### கிருஷ்ணன்



அழாதடா செல்லம்... பெற்றோல் விலை குறைஞ்சதும் அப்பா உன் சைக்கிள தந்திடுவாரு...

### உஷா


வீட்ல டிவி ஓடும்போது டிவியை பாக்குறவங்களை விட...



டிவியை ஓட விட்டு செல்போன் பாக்குறவங்க தான் அதிகம்...

### டிக்சன்

ஒருத்தன் முன்னேறுவதை பார்த்து நாம் சந்தோஷப்படுறோம் என்றால்...



அது கோவிலில் பிரசாதம் வாங்குவதற்கு மட்டும் தான்...

### நெல்சன்


பொருத்தமாக பொய் பேசக்கூடியவர்கள்தான்...



இந்த உலகில் கடைசிவ[illegible] யோக்கியனாக இருக்க மு[illegible]ம்.

### பத்மஜா

இப்போ போக வேண்டாம். மனுசங்க குறுக்க போயிடுவாங்க...



நாம போற வேலை உருப்படாது... ஒரு எலி கூட மாட்டாது... வெயிட் பண்ணு...!

### மணியம்

காதலை சொன்ன முதல் நாளும்...



அன்ரொய்ட் போன் வாங்குன முதல் நாளு[illegible] எவனும் தூங்கினதா சரித்திரம் இல்லை.

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உ[illegible]ளுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யு[illegible] அவை [illegible]ங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 242

## அசுத்தக்காற்றினால் எமது சுவாசப்பைகள் நிறையும் பொழுது

புகைத்தல் நாகரீகத்தின் அடையாளமாக கருதப்பட்ட ஒரு காலம் இருந்தது. அது தற்பொழுது மாற்றம் பெற்று புகைப்பிடிப்பவர்களை தீண்டத்தகாதவர்கள் போலப் பார்க்கும் காலம் ஒன்று துளிர் விட்டுவருகிறது. காரணம் புகைப் பிடிக்கும் பழக்கம் அவரை மட்டும் தாக்குவதில்லை. அவரை சுற்றி இருப்பவர்களையும் பாதித்து நோயாளி ஆக்கிவிடும் என்பது தான்.

இதன் காரணமாகவே பொது இடங்களில் புகைப்பது தண்டனைக்குரிய குற்றம் என சட்ட விதி கூட நடைமுறைக்கு வந்திருக்கின்றன. புகைப்பதனால் பாரிச வாதம், மாரடைப்பு, புற்றுநோய், சுவாசம் சம்பந்தமான நோய்கள், இரத்தக் குழாய்கள் சம்பந்தமான நோய்கள் என பலபாரதூரமான நோய்கள் ஏற்படுகின்றன என்பது எம் எல்லோருக்கும் தெரியும். இருந்தும் இப் பழக்கத்தை துடைத் தெறியும் மார்க்கம் எமக்குத் தெரியவில்லை.

புகைக்கும் ஒவ்வொரு வரும் இப்பழக்கத்தில் இருந்து வெளியே வர உண்மையாக விருப்பப் பட்டால் அதை நடை முறைப்படுத்துவது கஷ்டமாக இருக்காது. அதனை நடைமுறைப்படுத்த முயலும் பொழுது சில வேண்டத்தகாத அறிகுறிகள் தோன்றினால் வைத்தியரின் உதவியை நாட முடியும்.

புகைப்பது ஒவ்வொருவரினதும் தனி மனித உரிமை. ஒருவனை புகைக்க வேண்டாம் என வற்புறுத்துவதற்கு யாருக்கும் உரிமை இல்லை. புகைப்பதை நிறுத்திக் கொள்ளுமாறு கேட்டுக்கொள் ளலாம். அவ்வளவுதான். நீங்கள் புகைக்கவிரும்பினால் சனநடமாட்டமற்ற, நல்லகாற்றோட்டமான இடத்திற்குச் சென்று புகைத்து கொள்ளுங்கள்.

இதன் மூலம் உங்கள் குடும்பத்தையும் பிள்ளைகளையும் மற்றவர்களையும் நீங்கள் வெளியிடும் புகையின் தாக்கத்திலிருந்து பாதுகாத்துக் கொள்ளலாம். ஏற்படும் பாதிப்புக்கள் உங்களுடன் மட்டும் மட்டுப்படுத்தப்படும். மற்றவர்கள் தப்பித்துக் கொள்வார்கள்.

புகைத்தலுக்கு அடிமையாகியிருக்கும் ஒருவர் அந்த அடிமைத் தன்மைகளை உடைத்துக் கொண்டு வெளியே வருவாராக இருந்தால், புகைக்கும் பழக்கத்தை முற்றாகக் கைவிடுவாராக இருந்தால் அந்தப் பழக்கத்தினால் உடலில் ஏற்பட்ட தாக்கங்களில் பெரும் பகுதி திருந்தி வருவதற்கான சந்தர்ப்பம் இருக்கிறது.

புகைக்கும் பழக்கமுடைய ஒவ்வொருவரையும் சந்திக்கும் பொழுது அவரை இந்தப் படுகுழியிலிருந்து தூக்கிவிட நாம் கைகொடுப்போம். அவர்களுக்குப் பொருத்தமான அறிவுரைகளை வழங்குவோம்.



அசுத்தக்காற்றினால் எமது சுவாசப்பைகள் நிறையும் பொழுது நாம் நோய்வாய்ப்படுகிறோம். பூமியில் உள்ள மரங்கள் அழிக்கப்படும் போதும் அசுத்தக்காற்றினால் எமது சுவாசப்பை நிரம்புகின்றது. நாம் சுவாசிக்கும் காற்றினை தூய்மைப்படுத்தித் தரும் மரங்களை பாதுகாப்போம்.

கஞ்சாச் செடி வளர்ப்பது தண்டனைக்குரிய குற்றம் என்பது எம் எல்லோருக்கும் தெரியும். ஆனால் பல இலட்சம் மக்களைப் பாதித்து நிற்கும் புகையிலை செடியை வளர்ப்பது தண்டனைக்குரிய குற்றமாக கருதப்படுவதில்லை. இதற்கான காரணமும் எதுவென்று எனக்கு தெரியாது.

பயிரிடப்படும் ஒவ்வொரு புகையிலைச் செடியும் யாரோ ஒரு மனிதனை நோயாளி ஆக்கும். இதே விளை நிலத்தில் மரக்கறிகளை பயிரிட்டால் அது யாரோ ஒரு மனிதனை வாழவைக்கும். வளர்த்த கடா மார்பிலே பாய்ந்தால் கவலைப்படுகிறோம். ஆனால் மார்பிலே பாய்வதற்காகவே பல புகையிலைச் செடிகளை வளர்த்து வருகிறோம்.

நுளம்புத்திரிகளை புகைக்க விடுவதும் ஆபத்தானது. கதவுகள், ஜன்னல்கள் மூடப்பட்ட ஒரு பூட்டிய அறையினுள் ஒரு நுளம்புச் சுருளை கொழுத்தி வைத்து விட்டு ஒருவர் படுத்து உறங்குவது அவர் 100 சிகரெட்டுக்களை புகைப்பதற்கு ஒப்பானது என அண்மையில் புதிதாகச் செய்யப்பட்ட ஆராய்ச்சிகள் தெளிவுபடுத்தி இருக்கின்றன.

ஜன்னல்கள், கதவுகள் திறந்திருக்கும் நிலையில் நுளம்புச் சுருள்களின் தாக்கம் குறைவாக இருந்தாலும் கூட நுளம்புச் சுருள்களில் இருந்து வெளிவரும் புகை நுளம்புகளிற்கு தீமையை ஏற்படுத்துவது போன்று மனிதனிலும் பல தீங்கான விளைவுகளை ஏற்படுத்தும்.

எனவே நுளம்புச்சுருள்களை பாவிப்பதை தவிர்த்து நுளம்புக் கடியிலிருந்து எம்மை பாதுகாக்க மாற்றுவழிகளைக் கையாள்வது பாதுகாப்பானது.



Dr. சி. சிவன்சுதன்
மருத்துவ நிபுணர்

(0764685555) SMS